
கோகுலம்

GOKULAM

செப்டம்பர் '87 ரூ. 2.





ஸ்ரீ வினோபாஜி

தோற்றம் : 11-9-1895 மறைவு: 15-11-1982



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

கோகுலம்

1987 செப்டம்பர் மாத இதழ்
மலர் 5 : இதழ் 8
தனிப் பிரதி ரூ. 2/—



கூத்தபிரான்

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

40 வது சுதந்திர தினவிழாவையொட்டி தமிழ்நாட்டில் வேதாரண்யம், தூத்துக்குடி, மணியாச்சி, திருப்பூர், சென்னையில் திலகர் திடல் ஆகிய 5 இடங்களிலிருந்தும் புனித மண் எடுத்து அலங்காரக் கலசங்களில் வைத்து தில்லிக்குக் கொண்டு சென்றனர். இதேபோல் பல மாநிலங்களிலிருந்தும் தில்லிக்குக் கொண்டுவரப்பட்ட புனித மண்ணை ஒன்றாகக் கொட்டிக் கலந்தனர்.

பிறகு, காந்தி சமாதி அமைந்திருக்கும் ராஜ்காட் பகுதியில், புனித கலவை மண்ணில் குடியரசுத் தலைவர், 'சுதந்திர மரக் கன்று' ஒன்றை நட்டார். இவ்விழா முடிவில், புனித மண் கலவை கலசங்களில் நிரப்பப்பட்டு, பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மண்ணில் 'சுதந்திர மரக் கன்று' நடப்பட்டது.

'புனித மண்' என்றதும் உங்களில் பலருக்கு 1983 மார்ச் மாதம் கோகுலத்தில் வெளிவந்த திரு. கூத்தபிரான் எழுதிய 'சின்னக்கண்ணுவின் சுற்றுலா' என்ற கதை நினைவுக்கு வந்திருக்குமே!

ஏழை மாணவனாகிய சின்னக்கண்ணு, தலைமை ஆசிரியர் செய்த உதவியினால், மற்ற மாணவர்களுடன் சேர்ந்து பல மாநிலங்களுக்கும் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு ரயிலில் திரும்பி வருகிறான். அப்போது மாணவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் பல இடங்களில் வாங்கிய பொருள்களைத் தலைமையாசிரியரிடம் காட்டுகிறார்கள். ஆனால், சின்னக்கண்ணு வைத்திருந்ததோ ஒரு காகிதப் பொட்டலம்! அதற்குள் சின்னச் சின்னப் பால் பவுடர் பைகள். அவற்றில் வெறும் மணலாக இருக்கிறது. அவர்கள் சென்ற பல மாநிலங்களிலுமிருந்தும் அவன் எடுத்து வந்த மண்தான் அப்பைகளில் இருந்தது.

"எல்லா மாநிலங்களிலும் எடுத்து வந்த மண்ணை பள்ளிக்கூடத்தின் முன்னாலே ஒரு குழி தோண்டி அதிலே போட்டு ஒரு ரோஜாச் செடி நட்டு, அதில் பூக்கிற பூக்களை நம் பள்ளியிலுள்ள தேசத் தலைவர்களின் படங்களுக்குப் போடப் போகிறேன். அதன் மூலம் ஒருமைப்பாட்டைக் கண்டு சந்தோஷப்படணும். இந்தியாவே நம் பள்ளிக்கூடம் என்ற எண்ணம் ஏற்படணும்" என்கிறான் சின்னக்கண்ணு. உடனே, தலைமையாசிரியர், தம் கழுத்தில் கிடந்த கதர்த் துண்டை எடுத்து அவன் கழுத்திலே போட்டுப் பாராட்டுகிறார். மற்றவர்களும் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

இதுபோன்ற கதைகள் நாட்டுப்பற்றை ஊட்டக் கூடியவை; நல்ல உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியவை.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



கொ. மா. கோதண்டம்



எஸ். விஜயா சீனிவாசன்



மு. காளிதாசன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்




எஸ். செந்தில் குமார்



வெ. தமிழ்ச் செல்வம்


பிருந்தாவனக் கவிஞர்கள்




பி. ஆர். பழனிவேல்



டி. ஆர். பார்த்தசாரதி







அன்புள்ள கோகுலம் வாசகர்களுக்கு...

குழந்தைகளே!

'உங்களுடைய மிகச் சிறந்த, நெருங்கிய நண்பன் யார்?' என்று கேட்டால், உடனே, ''கோகுலம் பத்திரிகை'' என்றுதான் சொல்வீர்கள், இல்லையா? கோகுலம் உங்களுக்குக் கதை சொல்கிறது; கதை கூறும் போதே உங்களுக்கு நல்லது கெட்டதை உணர்த்தியும் விடுகிறது; தவிர உங்கள் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய நல்ல விஷயங்களையும் தருகிறது; உடல் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்கிறது; சிரிக்க வைக்கிறது; சிந்திக்கச் செய்கிறது! கோகுலத்தில் வெளிவரும் பதினாறு பக்க வண்ணப்படக்கதையை நீங்கள் அனைவரும் படித்துப் படித்துச் சந்தோஷத்துடன் பாதுகாத்தும் வருகிறீர்கள். கோகுலத்தை விடச் சிறந்த, நெருங்கிய நண்பன் உங்களுக்கு வேறு யார்தான் இருக்க முடியும்!

அப்படிப்பட்ட சிறந்த நண்பன், இன்று உங்களிடம் ஓர் உதவி கோருகிறான். மறுக்காமல் இந்த உதவியைச் செய்வீர்கள் என்றும் எதிர்பார்க்கிறான். அது என்ன உதவி என்று சொல்வதற்கு முன்னால், ஒரு விஷயத்தை உங்களுக்கு விளக்கிக் கூற வேண்டியிருக்கிறது.

பத்திரிகை நடத்துவதற்கு முக்கியமான மூலப்பொருள் நியூஸ் பிரிண்ட் எனப்படும் காகிதம். ஒரு பத்திரிகையை உருவாக்க ஏற்படும் செலவில் தொண்ணூறு சதவிகிதத்திற்கு மேல் காகிதத்துக்குத்தான் செலவாகிறது. இந்தக் காகிதம் கனடா, ஃபின்லாந்து, நியூஜிலாந்து, ரஷ்யா, போன்ற வெளிநாடுகளிலிருந்து நம் தேசத்திற்கு இறக்குமதியாகிறது. பத்திரிகை வெளிவர இன்றியமையாத இந்தக் காகிதத்தின் விலை சமீப காலமாக மிகமிக உயர்ந்து விட்டது. வருகிற அக்டோபர் முதல் மேலும் உயரப் போகிறது!

நம் நாட்டிலேயே இப்போது நியூஸ்பிரிண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இந்தக் காகிதம் வெளிநாட்டுக் காகிதத்தின் தரத்தை எட்டவில்லை என்பதோடு விலையும் வெளிநாட்டுக் காகிதத்தை விடவும் மிக அதிகம்! இதை மேலும் உயர்த்த முயற்சி நடக்கிறது.


இந்தச் சூழ்நிலையில் லாபநோக்கு இல்லாவிட்டாலும் நஷ்டம் ஏற்படாமலாவது கோகுலத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் அல்லவா? எனவே, பத்திரிகைக் காகிதத்தின் அபரிமிதமான விலை உயர்வையும் மற்ற செலவினங்களின் உயர்வையும் உத்தேசித்து, கோகுலம் பத்திரிகையின் விலையை அக்டோபர் மாதம் முதல் **ரூபாய் மூன்று** என நிர்ணயித்திருக்கிறோம்.

நான்கு வருடங்களுக்குப் பிறகு தவிர்க்க முடியாத காரணங்களினால் செய்யப்படும் இந்த விலை உயர்வைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து மாதா மாதம் கோகுலம் வாங்கிக் கொடுக்கும்படி உங்கள் பெற்றோர்களிடம் நீங்கள் தான் சொல்ல வேண்டும். இதுதான் உங்கள் அருமை நண்பனாகிய கோகுலம் உங்களிடம் கோரும் உதவி!

உங்கள் கோகுலம் எப்போதும் போல் தொடர்ந்து நல்ல முறையிலும், அநேகமாக அடுத்த ஆண்டுத் தொடக்கம் முதல் மேலும் பல பக்கங்களில் வண்ணக் களஞ்சியமாகவும் வெளிவந்து உங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் ஒத்துழைப்பையும், உங்கள் பெற்றோர்களின் ஆதரவையும், ஆண்டவன் அருளையும் வேண்டுகிறோம்.

நிர்வாகி, கோகுலம்.

மின்மினிக் கதைகள்



நாயின் உதவி

காட்டுக்கு நடுவிலே, ஒரு மலை, அந்த மலையின் அடிவாரத்திலே, ஓர் ஏரி. அந்த ஏரிக்கரையோரமாக, ஒரு பசுப் பண்ணை. ஏராளமான இடையர்கள், நூற்றுக் கணக்கான பசுக்களையும், எருதுகளையும் பராமரித்துக் கொண்டு, பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் எனத் தயாரித்து, நாடு, நகரங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்து வந்தார்கள்.

ஒரு நாள் நள்ளிரவு நூற்றுக் கணக்கான தீவட்டிக் கொள்ளைக் காரர்கள், குதிரைகளில் பாய்ந்து வந்தார்கள். இடையர்களிடமிருந்த பணத்தையும், அவர்களின் பசுக்களையும், எருதுகளையும் அபகரித்துச் சென்றார்கள்.

மலையைக் கடந்து கொண்டிருக்கையில் —

'ளொள்! ளொள்! ளொள்!...' எனப் பின் புறத்திலிருந்து குமுறியெழும் நாயின் குரைப்புச் சத்தத்தைக் கேட்டதும் — கொள்ளைக்காரர்களின் தலைவன், கடிவாளத்தைச் சுண்டியிழுத்துக் குதிரையை நிறுத்தியபடியே திரும்பிக் கவனித்தான். கப்பிக் கவிந்திருக்கிற காரிருளில் ஒரு கிழவனும், ஒரு சிறுமியும் ஓடி வந்தார்கள். அவர்களுக்கு முன்னே, ஒரு நாய்... மறு நொடியே — இடையில் தொங்குகிற ஊது கொம்பை எடுத்து, 'பூம்ம்...பூம்ம்ம்!' என்று ஊதினான், தலைவன். ஊதல் ஒலியைக் கேட்டதும், நூற்றுக் கணக்கான கொள்ளைக்காரர்கள் ஓடிக் கொண்டிருக்கிற மாடுகளைச் சுற்றி வளைத்து நிறுத்தினார்கள்.

சிறுமியுடன் விரைந்தோடி வந்த கிழவன், கொள்ளைக்காரர்களின் தலைவனை அணுகினான், கையெடுத்துக் கும்பிட்டுக் கண்ணீர் வடித்தான்.

'என்ன வேண்டும்...?' என்றான், தலைவன்.

'என்னுடைய ஒரே ஒரு பசுவைத் தயவு செய்து திருப்பித் தரவேண்டும். தாயை இழந்த எனது பேத்தி, அந்தப் பசுவைத் தாயாக மதித்திருக்கிறாள். கருணை கூர்ந்து, அந்தப் பசுவை மட்டும்...' என்று உருக்கமாக வேண்டினான், கிழவன்.

நொடி நேரம் தயங்கிய கொள்ளைக்காரன் கேட்டான்: பார்வை தடுமாறும் இந்தப் பாழும் இருளிலே, ஏராளமான மாட்டு மந்தையிலே உன்னுடைய பசுவை எப்படி அடையாளம் கண்டு கொள்வாய்...?'

'உத்தரவு கொடுங்கள்...' என்றான், கிழவன்.

'ம்...' என்றான், கொள்ளைக்காரன். உடனே—

தனது அன்பு மிக்க நாயைத் தட்டிக் கொடுத்து, 'போடா, கண்ணு... போய்... நமது பசுவைக் கூட்டி வாடா...' எனச் சொல்லி மாட்டு மந்தையை நோக்கி ஏவினான், கிழவன்.

அடுத்த நொடியே—நாய், பாய்ந்தோடியது. மந்தையாய்த் தேங்கி நிற்கிற மாடுகளின் முதுகில் தாவியேறி, ஒவ்வொரு மாடாகத் தாண்டிக் குதித்து... சில விநாடிகளில்—கிழவனின் பசுவை மோப்பத்தால் உணர்ந்து இழுத்து வந்து, கிழவனுக்கு முன்னால் நிறுத்தியது!...

கிழவன், பசுவின் முகத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். நாயைக் கட்டியணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தாள்—கிழவனின் பேத்தி.

'ஹ்ஹா!... அன்பிலும், அறிவிலும் சிறந்த பிராணி!...' என்று அந்த அருமையான நாயைப் பாராட்டிய கொள்ளைக்காரன், ஊது கொம்பை ஊதினான்

கொள்ளைக்காரர்கள், மாடுகளை விரட்டிச் சென்றார்கள்.

எங்கே போகிறீர்?

ஒரு ராஜா, அந்த ராஜாவுக்கு என்னவோ ஆசை. அந்த ஆசையுடன், கவிதை எழுதத் தொடங்கினான். சில கவிதைகளை எழுதியதும், அரசவைக் கவிஞரைக் கூப்பிட்டான். தமது கவிதைகளை அவரிடம் கொடுத்தான். 'நான் எழுதிய இக்கவிதைகளைப் படித்துப் பாருங்கள்...' எனக் குறுஞ் சிரிப்புடன் சொன்னான்.

அரசவைக் கவிஞர், ராஜாவின் கவிதைகளைப் படித்தார். படித்த பின், முகஞ் சுளித்தபடியே கவிதைகளை ராஜாவிடம் கொடுத்தார்.

கவிதைகளைப் பெற்றுக் கொண்ட ராஜா, 'எனது கவிதைகளைப் பற்றித் தங்களது அபிப்பிராயம் என்ன...?' என்று ஆவலுடன் கேட்டான்.



கவிஞர், உள்ளதை உள்ளபடியே கூறினார்: 'கவிதைகளா, இவைகள் ...? வெறும் கிறுக்கல்கள்! பிதற்றல்கள் ...! அருமையான நேரத்தை அறியாத, புரியாத விஷயத்தில் வீணாக்கியிருக்கிறீர்களே ...!'

இதைக் கேட்ட நொடியே— 'ஆ...! என்ன ஆணவம் உனக்கு...! என்னுடைய கவிதைகளை இழிவாகச் சொல்கிறாயா...?' எனக் கொக்கரித்தான் அரசன், வீரர்களைக் கூப்பிட்டான். கோபாவேசத்துடன் ஆணையிட்டான். 'இந்த திமிர்ப் பிடித்த கவிஞனை இழுத்துப் போய்ச் சிரச்சேதம்... இல்லை... மலைக் கோட்டையிலுள்ள இருண்ட சிறையில்... வேண்டாம்... இந்த ஆணவக்காரனை இழுத்துச் சென்று. அசிங்கமான குதிரைக் கொட்டகையில் அடைத்து வையுங்கள் ...!'

உடனே — வீரர்கள், கவிஞரை இழுத்துச் சென்று குதிரைக் கொட்டகையில் அடைத்தார்கள் ...

சில பல நாட்கள் கடந்தன. ராஜா, மீண்டும் கவிதைகளை எழுதினான். முன்பு எழுதிய கவிதைகளை விட இப்போது எழுதியவை மிகச் சிறப்பாக இருப்பதாக நினைத்தான். இக் கவிதைகளைப் பற்றி அந்தக் கிறுக்குக் கவிஞன் என்ன சொல்கிறான், பார்க்கலாம்...' என்று எண்ணியவாறே, வீரர்களிடம், கவிஞரை அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.

வீரர்கள், குதிரைக் கொட்டகையிலிருந்து கவிஞரை அழைத்து வந்து, ராஜாவுக்கு எதிரில் நிறுத்தினார்கள்.

ராஜா, தமது கவிதைகளைக் கவிஞரிடம் கொடுத்தான். கவிஞர், கவிதையைப் படித்தார். படித்தபிறகு, கவிதைகளை ராஜாவிடம் கொடுத்தபடியே சொன்னார்: ''கழுதையைப் புலி என்று சொல்லிவிட்டால், கழுதை புலியாகி விடாது! அதே போல, உங்களுடைய பிதற்றல்களைக் கவிதை எனச் சொல்லி விட்டால், பிதற்றல் கவிதையாகிவிடாது ...!'

'என்ன ...?' என்று உறுமினான், ராஜா.

கவிஞர், மௌனமாக அங்கிருந்து நடந்தார்.

ராஜா, கர்ஜித்தான்: 'எங்கே போகிறீர் ...?'


கவிஞர், திரும்பிப் பார்க்காமல் சொல்லிக் கொண்டே நிதானமாக நடந்தார்: 'குதிரைக் கொட்டகைக்குத்தான் ...!'

சோமுவின் அலட்சியம்



தெருவில் நடந்தபடியே, தோலை உரித்து எறிந்துவிட்டுப் பழத்தை உள்ளுக்குத் தள்ளினான், சோமு. அந்த நொடியே, ''அடே, தம்பி...'' என்று எழுந்த குரலைக் கேட்டதும், வாய்க்குள்ளிருக்கிற வாழைப் பழத்தைக் குதப்பி விழுங்கியவாறே திரும்பிப் பார்த்தான், சோமு.

தெருவோரமாகக் கைத்தடியைத் தாங்கியபடி நடந்து வந்த முதியவர்,




சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி–ஃபாரெக்ஸ்®

குழந்தையின் உயரம் மற்றும்* எடையை சோதித்திடுங்கள்	ஆண் குழந்தை		பெண் குழந்தை	
	எடை (கிலோ)	உயரம் (செ.மீ.)	எடை (கிலோ)	உயரம் (செ.மீ.)
3 மாதம்	5.2	59.1	4.9	58.4
6 மாதம்	6.7	64.7	6.1	63.7
9 மாதம்	7.3	68.2	6.9	67.0
12 மாதம்	8.4	73.9	7.8	72.5

* இது இந்தியக் குழந்தை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டது.
இது இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமே சராசரியாகும். குழந்தையின் வளர்ச்சி உங்கள் டாக்டரின் திருப்திக்கேற்ற வகையில் இருந்தால் போதும்.

வண்ணமய பாப்பா—பராமரிப்பு வழிகாட்டி இலவசமாய் பெற்றிட இதை அனுப்புங்கள் இங்கே: க்ளிண்டியா லிமிடெட் (FPD/218), டாக்டர் அன்னி பெஸண்ட் ரோட், ஓர்லி, பம்பாய்-400 025.



உங்கள் குழந்தை பரிபூரண அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைந்திட போஷாக்கு நிறைந்த ஃபாரெக்ஸ் அளியுங்கள்.

ஃபாரெக்ஸ்®

சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி

26/173

சோமு எறிந்த வாழைப் பழத் தோலே நடுத் தெருவிலிருந்து எடுத்து, தெருவோரமாய்க் கிடக்கும் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு வந்தார். சோமுவை, அணுகினர். "தம்பி தெருவில் நடக்கிறவர்கள் வாழைப் பழத் தோலே மிதித்து வழுக்கிவிழுவார்கள். அதனுலேதான்..." எனப் புன்சிரிப்புடன் நயமாகச் சொன்னர்.

முதியவரை வெறித்து நோக்கிய சோமு, எரிச்சலுடன் சொன்னன், "பெரியவரே... போதிக்கிறது, வாதிக்கிறது எல்லாம் உங்க காலத்திலே! அதெல்லாம் எங்க காலத்துக்குப் பொருந்தி வராது...! நடுத் தெருவிலே போட்டிருக்கிற வாழைப் பழத் தோலேக் கண்ணிருக்கிறவன், பார்த்துட்டு ஒதுங்கிப்போவான், கண்ணிருந்தும் குருடனயிருக்கிறவன், வழுக்கிவிழுவான்! அதுக்கு நம்ப என்ன பண்ண முடியும்...?"

முதியவரை நோக்கி அலட்சியமாகப் பேசிவிட்டு விறைப்பாக நடந்த சோமு, எவனே சப்பியெறிந்திருக்கிற மாம்பழத் தோலே மிதித்துக் கால் வழுக்கித் தடுமாறி விழுந்தான்...!

முதியவர், சோமுவைத் தூக்கி நிறுத்தினர். 'நிதானமாகப் போ, தம்பி...' என்று அன்பாகவும், ஆறுதலாகவும் சொன்னர். சோமு, பெரியவரைக் கூச்சத்துடன் பார்த்தான். "என்னே மன்னிச்சுடுங்க தாத்தா..." என்றவாறே நடுத் தெருவில் கிடக்கிற மாம்பழத் தோலே எடுத்துச் சென்று, குப்பைத் தொட்டியில் எறிந்தான்.

— தங்கமணி

குழந்தை இலக்கியப் போட்டிகள்

குழந்தை எழுத்தாளர் சங்கம் இந்த ஆண்டில் மூன்று வகையான குழந்தை இலக்கியப் போட்டிகளே அறிவித்துள்ளது.

---

1. கவிதை, நாடகம் ஆகிய இருதுறைகளுக்கும் முதற் பரிசாக ஏ.வி.எம். தங்கப் பதக்கமும், இரண்டாம் பரிசாக ஏ.வி.எம். வெள்ளிப் பதக்கமும் வழங்கப் பெறும். இது ஏ.வி.எம். அறக்கட்டளேயினுல் ஏற்பாடு செய்யப்பட்டது.

2. சிறுவர் நாவலுக்கு, எல்லப்பா—ரங்கம்மாள் நினேவுப் பரிசுகளாக, முதற் பரிசு ரூ.1000/—, இரண்டாம் பரிசு ரூ.500/— வழங்கப் பெறும்.

   (கோவையைச் சேர்ந்த புகழ்பெற்ற கல்வியாளரும் மத்திய அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவருமாகிய திரு. ஈ. வெங்கடேசலு அவர்களால் தம் பெற்ருேர் நினேவாக அமைக்கப்பட்டது.)

   10 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்க்கு ஏற்ற வகையில் முழு அளவு வெள்ளேத் தாளில் சுமார் 80 பக்கங்களில் கையெழுத்துப் பிரதிகள் இருக்க வேண்டும்.

3. கல்லூரி மாணவர், மாணவியர் மட்டுமே கலந்து கொள்ளும் சிறுகதைப் போட்டி ஒன்றைச் செல்லப்பன் நினேவுப் பரிசாக அறிவித்துள்ளது. முழு அளவு வெள்ளேத் தாளில் 10 பக்கங்களுக்கு மேற்படாமல் கதை இருக்க வேண்டும். முதற் பரிசு ரூ. 1000/—; இரண்டாம் பரிசு ரூ. 750/—; மூன்று ஆறுதல் பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 250/—. (பொறியியல் மாணவராயிருந்த போது அகால மரணமடைந்த செல்லப்பன் நினேவாக அவரது தந்தை கவிஞர் செல்ல கணபதி அவர்களால் வழங்கப்படுவது.)

மூன்று போட்டிகளுக்கும் கையெழுத்துப் பிரதிகளில் இரண்டினே 30.9.87 க்குள் செயலாளர், குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏ.எல். 183, அண்ணு நகர், சென்னே — 40 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வருகிற நவம்பர் மாதம் கோவையில் நடைபெறும் எட்டாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் பரிசுகள் வழங்கப் பெறும். மேலும் விவரம் வேண்டுவோர் சங்க முகவரிக்கு எழுதலாம்.

என் குழந்தைப் பருவம்

கர்னல் டாக்டர் கி.வேங்கட சுப்பிரமணியன்



தற்போது புதுவைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கும் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கள், இதற்கு முன்பு தமிழ்நாடு திட்டக் கமிஷனின் முழுநேர உறுப்பினராக இருந்தார்.

தலைசிறந்த கல்வியாளர்களில் ஒருவராகத் திகழும் இவர், கல்வித் துறை இயக்குநராக இருந்தபோது பிளஸ் 2 முறை தொடங்கவும், சத்துணவுத் திட்டம் போன்ற முன்னேற்றத் திட்டங்கள் நன்முறையில் இயங்கவும் பாடுபட்டவர்.

Asian Society for Computers in Education (ASCE) என்ற நிறுவனத்தின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார். 1986 முதல் 4 ஆண்டுகள் இப்பதவியை வகிப்பார்.

கல்வி சம்பந்தமான சர்வதேசக் கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிப் பண்ணைகள் முதலிய பலவற்றிற்கு இந்தியக் குழுவின் தலைவராகப் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டின் சாரணர் படைக்குத் தலைவராக இருந்து சிறப்பாகப் பணிபுரிந்ததற்கு, தேசிய அளவில் உயர்ந்த விருதான 'வெள்ளி யானை' இவருக்கு வழங்கப்பட்டது.

'கல்வியும் பொருளாதார வளர்ச்சியும்' என்பது பற்றி இவர் எழுதியுள்ள புத்தகம் மேல் நாடுகளில் முதுகலை வகுப்புகளுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இவரது **'English Tamil Dictionary'** என்ற நூல் மத்திய அரசின் பரிசைப் பெற்றது.


புதுவைப் பல்கலைக்கழக N. C. C. க்கு கௌரவ கர்னலாக இவரை இந்திய அரசின் பாதுகாப்புத் துறை நியமித்துள்ளது.

''ஒரு குழந்தையை முதல் ஐந்தாண்டுகள் என்னிடம் கொடுங்கள் — பிறகு கடவுளோ, சைத்தானோ அதை ஒன்றும் செய்துவிட முடியாது' என்றார் அமெரிக்கக் கல்வியாளர் — பூக்கர் வாஷிங்டன்.

இதன் பொருள் என்ன? முதல் ஐந்தாண்டுகள் ஒரு குழந்தையின் வாழ்வில் மிக முக்கியம் என்பதே. நூறு ஆண்டு வளர்ச்சிக்கான ''Blue Print'' முதல் ஐந்தாண்டுகளில் அமைந்து விடுகிறது. நாம் ஏன் அமெரிக்கா செல்ல வேண்டும், சான்றுகளைத் தேடி? நம் பழமொழியே போதுமே — ''ஐந்தில் வளையாதது (விளையாதது) ஐம்பதில் வளையாது (விளையாது).'

எனவேதான், இன்று உலகெங்கிலும் குழந்தையின் முதல் ஐந்தாண்டுகளைப் பாதுகாத்துப் போற்றும் வகையில் புதுமுறைக் கல்வி நிறுவனங்கள், சத்துணவுத் திட்டங்கள், புதுக் கல்வி முறைகள் இவை வகுக்கப்படுகின்றன.

கல்வியின் முக்கிய அங்கமே 'கே.ஜி. எல்.கே.ஜி., யூ.கே.ஜி.' போன்றவை தாம் என்பதை மேலை நாடுகள் உணர்ந்



ததால் தான் அங்குள்ள கல்வி முறையை –2 (மைனஸ் இரண்டு)ல் ஆரம்பிக்கிறார்கள். –2 என்றால் 5 வயதில் 2 போக மூன்றாம் வயதிலிருந்தே கல்வி என்று பொருள்.

என் குழந்தைப் பருவத்துக்கு வருவோம்.

எனது கல்வி தாம்பிரவருணிக் கரையில் உள்ள அம்பாசமுத்திரத்தில் தொடங்கியது. என் தந்தையார் அவர்கள் அம்பையில் ஆவணக்களரி தலைமை அதிகாரி. நேர்மையும், கட்டுப்பாடும் கொண்டவர். அவரது சகாக்களும் அலுவலகத்தவரும் அவரை 'நெருப்பு' என்றே அழைப்பர். அவர்கள் வைத்த பெயரே 'நெருப்பு ஐயர்' தான்! நெருப்பென்றால் சாதா நெருப்பல்ல; அவர் குணமென்னும் குன்றேறி நின்றவர்: எனவே, அவரது கோபத்தை (வள்ளுவர் வாக்கில் ''வெகுளி'') ஒரு கணம்கூடத் தாங்கமுடியாது.

எனக்கு ஐந்து வயது. என்னைப் பள்ளியில் போட்டாகிவிட்டது. இந்து எலிமெண்டரி ஸ்கூல் தலைமையாசிரியர் திரு. நீலகண்டன் என்னை தினம் வந்து அவரே கூட்டிச் செல்வார், எங்களது இரட்டை மாட்டு வண்டியில். கார்கள் நிரம்ப வராத காலம். அங்கொன்று இங்கொன்று இருக்கும்.

சிங்கம்பட்டி ஜமீன்தார் — சொக்கலால் இராம்சேட் — கல்லிடைக்குறிச்சி பண்ணையார்கள் சிலர் — கார் வைத்திருந்தார்கள்: அவ்வளவே.

ஒரு நாள், பள்ளிப் புத்தகங்களுக்கும், நோட்டுகளுக்கும் 'அட்டை' போட வேண்டும் என எண்ணினேன். இன்றுபோல் அன்று புத்தகங்கள் 'சுமையாக' இருக்காது. தேவைக்கானது மட்டுமே இருக்கும். ஒரு தமிழ் 'அ, ஆ' புத்தகம், ஒரு சிலேட், வாய்பாடு புத்தகம் — ஒரு நாலு ''நோட் புக்.'' இதுகூட நான் எனக்காக வாங்கிக்கொண்டது—வழக்கமாக நோட்புக் கிடையாது அப்போது.

அப்பாவின் அலுவலக ஊழியர் ஜோகி நாயுடு அவர்கள் சுமார் 6 அடி உயரம், மீசையுடன், பார்ப்பதற்கு ஊர்க்கோடியில் குதிரை மீது அமர்ந்துள்ள அய்யனாரே திருவுருக்கொண்டு நேரில் வந்த மாதிரி இருக்கும். பழைய பட்டாளத்துக்காரர் வேறு. கேட்க வேண்டுமா, ஒரே அட்டகாசம்தான். எனக்கு ஜோகி நாயுடுதான் 'ஹீரோ!' அன்று நான் எண்ணியது நாமும் ஒரு ஜோகி நாயுடு போல் 'உயர்ந்த வேலைக்குத்தான் போக வேண்டும்' என்பதே. அவரே எனது 'மாடல்' அன்று.

ஜோகி நாயுடு அவர்கள்தான் எனக்கு ''Philosopher, friend and guide.'' என். தாயார் அவர்கள் ஒரு செந்தாமரை. மிகச் சிறந்த அழகி. கண்யமிக்கவர். பெரிய மிட்டாதார் குடும்பத்தின் ஒரே பெண். காலில் தங்கக் கொலுசு அணிந்தவள். மிகவும் சாதுவானவர். அப்பாவோ நெருப்பு — அம்மாவோ தாமரை—கூம்பிய குமுதம் — எனவே, எனக்கு ஜோகி நாயுடுதான் உறவு, எப்போதும், நாள் பூராவும்—இரவு பகலாக.

அட்டை போடும் பிரச்னைக்கு இப்போது திரும்புவோம். ஜோகி நாயுடு ஒரு வழி சொன்னார். ''ஆபீசில் நிறைய பிரௌன் பேப்பர் இருக்கிறது. சாயங்காலம் அட்டை போடும் பிரச்னை தீர்ந்துவிடும்'' என்றார். அப்படியே தீர்ந்துவிட்டது. மாலை 6 மணிக்குள் அட்டைகள் போட்டாகிவிட்டது. ஜோகி நாயுடுவின் தெலுங்கு கலந்த தீந்தமிழில் அட்டைமேல் 'சின்னச்சாமி மணி' என்றும் எழுதியாகி விட்டது. அம்மாவுக்கு பரம சந்தோஷம். ஒரு பிள்ளையார் சுழியும் அம்மா அறிவுரைப்படி இந்த அட்டைகளில் தலை எழுத்தாகவும் எழுதியாய்விட்

டது. அம்மா அவர்கள் மிகுந்த தெய்வ பக்தி கொண்டவர்கள். அவர்களது தந்தையார் புதுக்கோட்டை மிட்டா தார் (என் பாட்டனுர்). அம்மா அவர் களுக்கு ஏற்படுத்தித் தந்த சாசனங் களின்படி மாதம் அப்போதே அறுநூறு ரூபாய் சொந்த வருமானம் உடையவர். என் தாயார் அதை அப்படியே தான தருமங்கட்குச் செலவிடுவார். அம்மா வின் பணத்தை அப்பா கேட்டதே இல்லை. அப்பாவும் மிகவும் கண்ணிய மிக்கவர்; கடமை தவருதவர்; கண் டிப்பு மிக்கவர்.

நாம் நமது 'அட்டை' சம்பவத் துக்குத் திரும்பவும் வருவோம்! அம்மா விடம் அட்டை போட்ட பிரலாபத்தை நான் (வயது 5) சொல்லிக் கும்மா ளமிட்டுக் கொண்டிருந்தபோது, அப்பா வந்துவிட்டார்கள். கம்பீரமான தோற்றம்—கருப்பு அல்பாகா லாங் கோட்—தலையில் வெள்ளை மஸ்லின் தலைப் பாகை—நெற்றியில் ஸ்ரீசக்கர பூஜை செய்த அம்பாள் குங்குமம், படத்தில் மகாகவி பாரதியார் இருக் கிருரே — அதைப் போன்றதொரு தோற்றம். "என்ன நோட்டுப் புத்தகம் —அட்டை யார் போட்டது? இது ஆபீஸ் பேப்பரல்லவா?" என்று ஆரம் பித்தார்.

இடி இடிக்க ஆரம்பித்தது. "ஆபீஸ் பேப்பர் எப்படி வீட்டுக்குள் வரலா யிற்று? எப்படி இந்தப் புத்தகம், நோட் டுக்கு ஆபீஸ் அட்டை வந்தது. யார் வேலை இது?" சிம்மக் குரல். கண்ணில் நெருப்பு. நான் நடுங்கிக் கொண்டே ஜோகி நாயுடுவைக் கைகாட்ட — அம்மா வழக்கம்போல் செய்வதறி யாது பூஜை உள்ளுக்குள் போக — என் தந்தையார் ருத்திரதாண்டவம் ஆடுகிருர்.

ஆபீஸ்—கவர்ன்மெண்ட் சாமான் எதுவும் சொந்த உபயோகத்துக்கு என்றுமே உபயோகப்படுத்தக் கூடாது என்ற கண்டிப்பான நெறியைக் கொண் டவர் தந்தையார். தனது சொந்தப் பேனுவிற்குக்கூட சொந்த மை போட்டு எழுதும் பண்பாளர். அவருக்கு நான் ஒரே மகன், எனக்கு அண்ணன், தம்பி, அக்காள், கிடையாது. நான் ஒரே குழந்தை.

இருப்பினும், சட்டம் சட்டமே.



நெற்றிக் கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே என்ற வழி வந்த என் தந்தையார் நெறியாளர் — பண்பு நக்கீரர்.

கோபத்தில் நேரடியாகச் சமைய லறைக்குச் சென்று அங்கிருந்த எரியும் கொள்ளிக் கட்டை ஒன்றை எடுத்து (காஸ் வராத காலம் அது) என் கையில் சூடு வைத்தார்கள் — நான் கதறி னேன், ஜோகி நாயுடு என்னைத் தூக்கிக் கொண்டு மறைந்தார்.

காயம் சில நாட்களில் ஆறிவிட்டது. ஆனுல், அந்த வடு இன்றும் இருக் கிறது.

நான் எனது வாழ்நாளில் இன்று வரை ஒரு நெறியாளன், நேர்மை யாளன் என ஒரு நல்ல பெயரை எடுத் துள்ளேன் என்ருல் அதற்கு 1934—ம் ஆண்டில—எனது 5 வது வயதில் எனக்கு, என் தந்தையார் அவர்கள் சூடுபோட் டதும் ஒரு முக்கிய காரணம் என நான் திண்ணமாக நினைக்கிறேன். இந்த நிகழ்ச் சியை நான் என்றும் மறந்தேனில்லை. என்றென்றும் இது என் கண்முன் பசுமையாக நின்று, இன்றும்கூட என்னை வழி நடத்திக் கொண்டிருக் கிறது.

நான் கல்வி இயக்குநராகத் தமிழ கத்தில் இருந்தபோதும், இன்று புது வையில் மத்தியப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக உள்ள போதும், இச்சம்பவம் எனக்கு ஒரு பாடமாகவே அமைந்து விட்டது. என் மகள் பள்ளிக்குச் செல்வதற்குக் கூட



என் சொந்த வண்டிதான் போகும். என்னுடைய சிறிய 'பியட் கார்' தான் போகும். அரசின் கார் சென்றதே கிடையாது. பல்கலைக்கழக வண்டி போகாது. ஏன்? அரசின் பொருளைச் சொந்த உபயோகத்திற்கு எடுப்பது தவறு என்று நெருப்பினால் என் உடலில் ஐந்தாவது வயதில் எழுதிக் காட்டிய என் அருமருந்தன்ன தந்தை யாரின் ஆணைதான் காரணம்.

இப்படி எத்தனையோ சம்பவங்கள் எனது குழந்தைப் பருவத்தில்.

இன்னொரு சம்பவம். *1942* — 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டம்—உச்சக்கட்டத்தில் இருக்கிறது. நான் கோவில்பட்டி ஜில்லா போர்ட் வ. உ. சி. உயர்நிலைப் பள்ளி மாணவன். எங்களது மதிப்புக்குரிய ஆசிரியர் திரு. உருத்திரப்பாசாமி நாயுடு அவர்கள். உண்மையான காந்தியவாதி. சிறந்த நேர்மையாளர். நெறியாளர், பண்பாளர். பின்னால், இவர் தமிழகக் கல்வித் துறையில் பெரிய பொறுப்புக்களை வகித்தவர்.,

என்றுமே தூய கதர் அணியும் இவரை மாணவர்கள் பெரிதும் விரும்பினர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இவ்வுலகில் இவர் ஒரு வித்தியாசமான குணக்குன்று.

1942 போராட்டத்தில் கோவில் பட்டி மாணவர்கள் கணக்கு வாத்தியார் திரு. உருத்திரப்பாசாமி நாயுடு அவர்கள் தலைமையில் அணி வகுத்து ஊர்வலம் — கோஷமிடுதல் போன்றவற்றை ஆரம்பித்தோம்.

தந்திக் கம்பிகளை அறுக்க நாங்கள் எங்களுக்குள் அமைத்துக் கொண்ட ஒரு சிறு படைக்கு மறைந்த நண்பர் சவுந்திர பாண்டியன் (தினத்தந்தி) தலைவர். நான் அன்று சற்றுக் குள்ள மானவன். எனவே, தந்திக் கம்பி அறு படும்போது ஏணியைப் பலமாகப் பிடித்துக் கொள்ள வேண்டியதுதான் என் வேலை. நான் இதை மிக முக்கிய வேலையாக அன்று கருதினேன். இது பற்றிச்சிந்தித்துநான் அப்போதுதூக்க மில்லாமல் கழித்த இரவுகள் பல.

என் தந்தையார் கோவில் பட்டியிலேயே பெரிய அரசாங்க அலுவலர், அவருக்கு இதுபற்றித் தெரியாது. தெரிந்தால் எரிமலைதான். ஆனால், என் அன்புத் தாயார் அவர்கள் ஆசி எனக்கு என்றுமே உண்டு. ''அம்மா, அம்மா,,வாத்தியாரே... சொல்றார்... நாட்டுக்காக... வாத்தியார் சொன்னாக் கேட்க வேண்டாமா?'' என்று நான் கெஞ்ச, கொஞ்ச...

வாத்தியார்கம்பி அறுக்கச்சொல்லவில்லை — நாங்களே செய்து கொண்ட முடிவுதான்,' எனினும் வாத்தியார் பேரில் நான் விண்ணப்பிக்க எங்கள் அருமை அன்னை மீனாட்சி (கண்ணாலே அருள் பார்த்து உயிர் கொடுப்பவள் என்பது மீன்கண்ணியின் சித்தாந்தம்)'' பரவாயில்லை — நீ ஏணியைத் தானே பிடிக்கிறாய் — கம்பி கிம்பி அறுக்கல்லியே, நீ போகலாம். ஆனால், அப்பாவுக்குத் தெரியக் கூடாது'' என்று, ஒரு புதுத் தத்துவத்தையே தனக்குரிய பாணியில் எனக்காகக் கண்டுபிடித்து என் சொல்லுக்கு அனுமதி அளித்து விட்டார்கள்.

நாளை மறுநாள் அதிகாலை நாலு மணிக்கு, சூரிய உதயத்துக்கு இரண்டு மணி நேரம் முன்பு எட்டயாபுரம் ரோட்டில், திரு காசிப்பாண்டியன் அவர்கள் சமாதிக்கு முன்பு கம்பிகள் அறுக்கப்பட வேண்டும். இது எங்கள் சொந்தத் திட்டம். யாரும் கொடுத்தது அல்ல. கம்பிகளை அறுத்தால் மின்சாரம் கையைக் கடிக்குமா, உயிரைக் குடிக்குமா என்பதெல்லாம் எங்கட்குத் தெரியாது. ஒரு வெறி, அவ்வளவுதான்! இவ்வேலைக்கு நான்கு பேர் பணியாட்கள். அதில் நான் ஒருவன். என் வேலை ஏணியைப்

பிடித்துக் கொள்வது — கெட்டியாக, பலமாக,அவ்வளவுதான்! திட்டம்தயாரித்தது குழுத்தலைவர் சவுந்திரம்.

ஆனால் — அந்தோ பரிதாபம்! நாங்கள் கம்பியை வெட்டத் தேர்ந்தெடுத்த நாளுக்கு முதல்நாளே எங்கள் ஆசான் புரட்சி வீரர் (உண்மையான சமாதானப் புரட்சி வீரர் — பெயருக்கல்ல) திருவாளர் உருத்திரப்பசாமி அவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்கள். மாணவர்கள் பட்டாளம் கோவில்பட்டி 'கோர்ட்' அருகே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நிற்கிறது. தூய கதராடையில் அன்றலர்ந்த தாமரை போன்ற முகத்துடன் (இரண்டு நாட்கள் ஜெயிலில் இருந்தும் இவர் எப்படி இருக்கிறார் என்று அதிசயித்தோம்) எங்கள் பேராசான் திரு. உருத்திரப்பாசாமி அவர்கள் ஒரு நிமிடம் போலீஸ் அனுமதியுடன் வெளியே தோன்றி, ''நீங்கள் எல்லோரும் படிப்பில்தான் கவனம் செலுத்த வேண்டும். மற்றவற்றைப் பெரியவர்கள் பார்த்துக் கொள்வார்கள். போய் வாருங்கள். 'ஜெய்ஹிந்த்' என்று கூறி மறுபடியும் நீதிமன்றத்துக்குள் சென்று விட்டார்கள்.

'ஜெய்ஹிந்த்! ஜெய்ஹிந்த்!' என்று எங்கள் ஃபுட்பால் கேப்டன் வில்லியம்ஸ் உரத்த குரலெடுத்து முன்னே கூறிச் செல்ல நாங்களெல்லாம் 'ஜெய்ஹிந்த்! ஜெய்ஹிந்த்!' 'உருத்திரப்பாஜி வாழ்க, வாழ்க' என்று காதலாகிக் கண்ணீர் மல்கி கோஷமிட்டுக் கொண்டே பள்ளி சென்றோம். சுதந்திரப் போராட்டத்தில் இந்தியத் தாய்க்கு என் பங்காக நான் 'ஏணி பிடிக்க' இருந்த ஒரு வாய்ப்பையும் இழந்ததற்காக நான் பல நாட்கள் வருத்தப்பட்டேன்.



ஆனால் எனது குடும்பத்திலே எனது அத்தை, அத்தான் (திருச்சி டாக்டர் சாமிநாத சாஸ்திரி குடும்பத்தார்கள்) இவர்கள் எல்லாம் சிறை சென்றார்கள். அது அன்று குழந்தையாக இருந்த எனக்கு, நாட்டுப் பணியில் வெள்ளையனை வீழ்த்த 'ஏணி' பிடிக்க இருந்த வாய்ப்பை இழந்த எனக்கு, ஒரு சிறு consolation/compensation போல் மனத்துக்கு இதமளித்தது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஆசிரியர் திரு உருத்திரப்பாஜி அவர்களை என்னுடன் எனது கல்வித்துறையிலேயே சக அதிகாரியாக நான் கண்டு வணங்கினேன். அவர் என்றும் எனக்கு அங்கு உடன்பிறவா சகோதரராக இருந்து வழிகாட்டி வந்தார்கள்.

இப்படி எனது இளம் பருவத்தில் மனத்திலே என்றென்றும் நிலைத்து நிற்கும் ஆற்றல் பெற்ற பற்பல சம்பவங்கள்.

அந்தப் பொற்காலம் திரும்ப வருமா என்பதே இன்றைய ஏக்கம்.

அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

— லட்சுமி கிருஷ்ணமூர்த்தி





பாரதியார் சொன்ன கதைகள்

புத்தனேரி சுப்பிரமணியம்

குதிரைக்கு ஏன் கொம்பு இல்லை?



குதிரைக்கு ஏன் கொம்பு இல்லை தெரியுமா? அதற்கும் காரணம் சொல்கிறது ஒரு வேடிக்கையான கதை.

இராவணனிடமிருந்து சீதையை மீட்பதற்காக இராமனும், லட்சுமணனும் படையெடுத்து வந்தார்கள், இலங்கை நகருக்குள் நுழைந்துவிட்டார்கள். இந்தச் செய்தி இராவணன் செவியிலே பட்டது. உடனே இராவணன் "ஹா—ஹா—ஹா" நமது நகரத்திற்குள் மானிட பதர்கள் சேனை கொண்டுவருவதா? இதென்ன வேடிக்கை? ஹா—ஹா—ஹா—!" என்று கோபம் குமுற வெடிபடச் சிரித்தான்.

இடிபோன்ற அந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்டதும் ஆதிசேஷன் செவிடாகி விட்டான்! சூரியமண்டலம் தரைமேலே விழுந்து விட்டது! அதனால், சூரியனுடைய ஏழு குதிரைகளுக்கும் கொம்பு முறிந்துவிட்டது.

உடனே சூரியன் அதிர்ச்சி அடைந்தான். இராவணனுடைய பாதத்தில் விழுந்து, "இலங்கேஸ்வரா! என் குதிரைகள் சாகா வரம் பெற்றவை. இவைகளின் கொம்பு முறிந்து விட்டதே! கொம்பில்லாத குதிரைகளைக் கண்டு உலகத்தாரெல்லாம் எள்ளி நகையாடுவார்களே! என் செய்வேன்?" என்று அழுது முறையிட்டானாம் சூரியன்.

சூரியனின் கதறலைக் கேட்டதும், இராவணனுக்கு இரக்கம் வந்து விட்டதாம், இராவணன் பிரம்ம தேவனை நோக்கி, "ஏ, பிரம்மனே! இனிமேல் பூமியில் எந்தக் குதிரைக்கும் கொம்பு இல்லாமல் படைக்க வேண்டும். அப்படிச் செய்தால் சூரியனுடைய கொம்பிழந்த குதிரைகளைக் கண்டு பூலோக வாசிகள் கேலிசெய்ய மாட்

டார்கள்...!'' என்று இராவணன் பிரம்ம தேவனுக்குக் கட்டளையிட்டானும்!

அன்று முதல் இன்றுவரை, குதிரைக்குக் கொம்பு இல்லாமல் பிரம்மதேவன் படைத்து வருகிறானும்!

இப்படியொருவேடிக்கையானகதையை எழுதியிருக்கிறார் — மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

தூங்கிக்கிடந்தமக்களைத்தூடித்தெழச் செய்தவை பாரதியின் வீரக் கவிதைகள். கவிதைகள் மட்டுமன்றி அவருடைய வசன நூல்களும்ரசனைக்கு உரியனவாகவிளங்குகின்றன. பாரதியின் கதைகள் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் இனிய விருந்தாக அமைந்துள்ளன. எளிமையும் இனிமையும் கலந்த பாரதியின் கதைகளில் நகைச் சுவை பொங்கி வழிவதைக் காணலாம்.

பாரதியின் வசன நூல்களில், 'கதைக் கொத்து' என்ற பகுதியில் அருமையான சில வேடிக்கைக் கதைகள் காணப்படுகின்றன. சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்ற அந்தக் கதைகள் இன்று படித்தாலும் இனிப்பாகத்தான் இருக்கின்றன.

தேவ விகடம்

கைலாசத்தில் நந்திகேசுவரரும் நாரதரும் பேசிக் கொண்டிருந்தார்களாம்! அவ்விடம்பிள்ளையார்வந்துசேர்ந்தாராம்! உடனே நந்தி தேவர் பூதம் ஒன்றை நோக்கி, ''பிள்ளையார் வந்திருக்கிறார், முப்பது வண்டி கொழுக்கட்டையும், முந்நூறு குடம் பாயசமும், ஒரு வண்டி நிறைய வெற்றிலை பாக்கும் கொண்டு வா!'' என்று கட்டளையிட்டாராம்!

பிள்ளையார் இவைகளை எல்லாம் தின்று ஏப்பமிடும்நேரத்தில், நந்திதேவர் இரண்டு மூட்டை பருத்திக் கொட்டையும், இரண்டு



கொள்ளு மூட்டைகளையும், இரண்டு மூட்டை உளுந்தையும், மூன்று கட்டுப் புல்லையும் ஒரே மூச்சாக விழுங்கி விட்டுக் கொஞ்சம் தீர்த்தம் சாப்பிட்டாராம்!

''தேவவிகடம்'' என்றகதையில் இப்படி ஒரு காட்சியை ரசமாக வர்ணித்திருக்கிறார் பாரதியார்.

காக்கையின் கதை



'கா—கா—கா!' என்று கரைகிறதே காகம்! அந்தக் காக்காயின் பாஷைக்கும் அர்த்தம் உண்டு என்று பாரதியார் இன்னொரு கதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'காக்காய்ப் பார்லிமெண்ட்' என்ற அந்தக் கதையில், நாராயண பரமஹம்சதாசர் என்ற சாமியார் காக்காய் பாஷைக்கு விளக்கம் சொல்வது போலக் கூறப்பட்டுள்ளது.

'கா' என்றால் சோறு வேண்டும் என்று அர்த்தமாம்!

'கக்கா' என்றால் 'என்னுடையசோற்றில் நீ பங்குக்கு வராதே' என்று பொருள்.

'கஹாகா' என்றால் 'சண்டைபோடுவோம்' என்று அர்த்தமாம். 'ஹகா' என்றால் மூடா என்று பொருள்.

'ஹா கா' என்றால் 'உதைப்பேன்' என்று அர்த்தமாம்.

இந்தப்படியாக 'க, ஹா, க்ஹ' முதலான ஏழெட்டு எழுத்துக் களுக்குள் காக்காய் பாஷை அடங்கிவிடுகிறதாம்!

இவைகளைப் போலவே, கவிராயனும், கொல்லனும், கிளிக்கதை, அந்தரடிச்சான் கதை, அர்ஜுன சந்தேகம், ஆனைக்கால் உதை, அபயம், கத்திச் சண்டை முதலான பல கதைகளை நகைச்சுவை ததும்ப எழுதியுள்ளார் பாரதியார்.

(அடுத்த இதழில் மேலும் சில கதைகள்)



விஸ்வேஸ்வரய்யா



விேனாபா ஜி

இந்தியாவில் வழங்கப் பெறும் மிகப் பெரிய விருது 'பாரத ரத்னா'. அந்தவிருதினைப்பெற்றஇவரதுமுழுப் பெயர் மோட்ச குண்டம் விஸ்வேஸ் வரய்யா. மைசூர் மாநிலத்திலுள்ள முத்தனஹள்ளி என்ற ஊரில், மிகவும் ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவர், தமது 15வது வயதில் தந்தையை இழந் தார். பிறகு, பெங்களூருக்குச் சென்று, அங்கு சிறு குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து, அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு மேற் படிப்புப் படித்து பி.ஏ. பட்டம் பெற் றார். படிப்பிலே மிகவும் கெட்டிக் காரராக இருந்ததால், அக்காலத்தில் மைசூர் திவானாயிருந்த ரங்காச்சார்லு என்பவர் இவருக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து, புனாவில் உள்ள விஞ்ஞா னக் கல்லூரியில் பயில் வதற்கு உதவி னார். அங்கு நன்றாகப் படித்து பம்பாய் மாநிலத்திலேமுதல்வராகத்தேறினார்: மைசூர் திவானின் உதவி பெற்றுப் படித்த இவரும், பிற்காலத்தில் மைசூ ரின் திவானாகிப் பேரும், புகழும் பெற்றார். இவர் திவானாக இருந்த ஆறு ஆண்டுகளில் மைசூர் சமஸ் தானத்தை உலகப் புகழுடையச் செய்து விட்டார். லண்டனிலுள்ள சிவில் இஞ்சினியர் கழகம் (The Institute of Civil Engineers) தன் உறுப்பினர்களின் ஒரு வராக இவரைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்துக் கொண்டது.

மைசூர் பல்கலைக் கழகம் அமையக் காரணமாயிருந்தார். பல விதமான தொழிற் சாலைகளை ஏற் படுத்தி, மைசூர் மாநிலத்தையே தொழில் மயமாக்கப் பாடுபட்டார். பெங்களூரில் இந்திய விஞ்ஞானக் கழகம் (Indian Institute of Science) நிறுவி அதன் தலைவராகத் திகழ்ந்தார். தாம் வாழ்ந்த காலத்திலே தமது நூற்றாண்டு விழாவை இந்தியா முழுவதும் சிறப் பாகக் கொண்டாடியதைப் பார்த்தும் கேட்டும் பரவசமடைந்தார்.

நம் தேசத் தந்தை மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக ஒருவரைக் கூற வேண்டுமானால், வினோபா பாவேயைத்தான் நாம் கூற வேண்டும். பம்பாய் மாநிலத்தில் காகோடா என்ற கிராமத்தில் பிறந்த இவர், பள்ளியில் படிக்கும் போதே, ஓய்வு நேரங்களில் நூல் நிலையத்திற்குச் சென்று ஆர்வ முடன் புத்தகங்களைப் படித்து அறிவை வளர்த்துக் கொண்டார். இவருக்கு 18 மொழிகள் தெரியும்!

1916—ஆம் ஆண்டில் முதன் முத லாக மகாத்மா காந்தியை வினோபா சந்தித்தார். அன்று முதல் இறுதிவரை காந்தியின் கொள்கைகளையும் நெறி களையும் அடிப்படையாகக் கொண்டு தொண்டாற்றி வந்தார்.

நம் தேச விடுதலைப் போரில் ஈடுபட்டுப் பல முறை சிறை சென்றார். சிறையில் இருக்கும் போது அங்கிருந்த தேசத் தொண்டர்களுக்கு பகவத்கீதை யை எடுத்துரைப்பார். இவரது கீதைப் பேருரை பல மொழிகளில் வெளி வந்து பலரும் படித்துப் பயன் பெற உதவியது.

இவர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல வேண்டுமானால், அது எவ்வளவு தூரமானாலும் நடந்தே செல்வார். வழியிலுள்ள கிராம மக் களைச் சந்தித்து அவர்களிடம் உரை யாடுவார். அவர்களிடம் "உங்களுக்கு வேண்டியவற்றை நீங்களே உற்பத்தி செய்துகொள்ளுங்கள். எல்லாவற்றுக் கும் அரசாங்கத்தையே நம்பிக் கொண் டிருக்காதீர்கள்." என்று அறிவுரை கூறுவார்.

பூதான இயக்கத்தின் தந்தை என்று இவரைக் கூறுவார்கள். பணக்காரர் களிடமிருந்து லட்சக்கணக்கான ஏக் கர் நிலங்களை அன்பளிப்பாகப்பெற்று, நிலமில்லாத வறுமையில் வாடும் ஏழைகளுக்குவழங்கினார். உலகிலேயே இதை ஒரு மகத்தான சாதனை என்று சொல்ல வேண்டும்.

வேப்ப மரம்

— கோ. மா. கோதண்டம் —

எங்கள் வீட்டு முன்னாலே
இருக்கும் பெரிய வேப்பமரம்;
மங்கள மான மரமாகும்;
மக்களைக் காக்கும் மருந்தாகும்;

பச்சைப் பசிய வேப்பமரம்;
பார்வைக் கழகு வேப்பமரம்;
நச்சின் எதிரி வேப்பமரம்;
நன்மை தருமே வேப்பமரம்;

கொடிய வெயிலாய் இருந்தாலும்
குளுகுளு என்றே அதைமாற்றும்;
அடியில் நின்றால் மனங்குளிரும்;
அருகே வந்தால் அகங்குளிரும்.

வேரும் பட்டை பிசினோடு
வேப்ப இலையும் மருந்தாகும்;
தீரும் எல்லா நோய்களுமே
சிறிய வேப்ப எண்ணெயினால்!



வீட்டுக் கொருமரம் வைத்திடுவோம்;
விரும்பி அதனை வளர்த்திடுவோம்;
நாட்டில் நோய்கள் நீங்கிடுமே;
நாளும் வளங்கள் ஓங்கிடுமே.

நாயும் பூனையும்

சந்திரா குமாரசாமி

எங்கள் வீட்டு நாய்க்குட்டி;
எப்பவும் ரொம்பப் படுசுட்டி.

ஆடும் பந்தை அதுஉருட்டி;
நாடித் தின்னும் பன்ரொட்டி.

அன்பர்கள் வந்தால் அனுமதிக்கும்;
அயலார் வந்தால் முறைத்திருக்கும்.

சந்தேகம் வந்தால் குரைத்திருக்கும்;
சங்கடம் இன்றிக் காத்திருக்கும்.

நாயின் காவல் வாசலிலே;
பூனையின் காவல் பரண்மேலே.


''மியாவ்'' எனும்ஒலியே சிறுபாட்டு;
விரைந்திடும் எலிகள் அதுகேட்டு!

நாயும் பூனையும் எதிரிஇல்லை;
நம்புவீர் இன்று என்சொல்லை.

நாயும் பூனையும் ஒன்றாக
நாள்தொறும் ஆடும் நன்றாக...!

பழகும் மனத்தில் அன்பிருந்தால்,
பரம விரோதம் என்பதுண்டோ...?

இழைந்தே ஆடும் இவ்விரண்டும்;
இதற்குச் சாட்சிகள் கண்ணிரண்டும்.





புதிய ஜனாதிபதி

புதிய ஜனாதிபதியின் கதை

குழந்தைகளே! ஆகஸ்ட் மாத 'கோகுலம்' இதழ் பார்த்தீர்களா? அதில் 'ஜனாதிபதிகளின் கதை' படித்திருப்பீர்களே! அதில் கூறப்பட்டிருந்தவாறு, நமது பாரதத்தின் எட்டாவது ஜனாதிபதி யார் என்பதை அறிந்திருப்பீர்கள், அல்லவா?

ஆம்! இதுவரையில் துணை ஜனாதிபதியாக இருந்த திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள்தான், நமது எட்டாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த ஜூலை 25 ஆம் நாள் அவர் பதவியேற்றுக் கொண்டுள்ளார். அவரை எல்லாரும் அன்புடன் 'ஆர். வி.' என்று அழைப்பார்கள்.

ஜனாதிபதி என்பது பாரதத்தின் மிக உயர்ந்த பதவி. அது, நமது தமிழ் நாடு மாநிலத்தைச் சேர்ந்த, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவருக்குக் கிடைத்துள்ளது என்றால், நமக்கு எத்தனை பெருமை!

தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில், பட்டுக்கோட்டை என்று ஓர் ஊர். அதன் அருகில் இருப்பது 'ராஜாமடம்.' இதுதான் திரு. ஆர். வி. யின் சொந்தக் கிராமம். அங்குதான் அவர் பிறந்தார். ஆண்டு 1910. தந்தையின் பெயர் திரு ராமசாமி என்பது.

ஆரம்பத்தில் அவர் பட்டுக்கோட்டையில் படித்தார். பின்னர், சென்னை சென்று, மாநிலக் கல்லூரியில் சேர்ந்து படித்து, பொருளாதாரத்தில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார்.

அடுத்ததாகச் சட்டம் பயின்று வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

அப்போது, காந்திஜி தலைமையில் விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. 'வெள்ளையனே, வெளியேறு' இயக்கம் தொடங்கியது. திரு. ஆர். வி. அதில் சேர்ந்து விட்டார்., ஆங்கில அரசு விட்டுவிடுமா? அவரைப் பிடித்துச் சிறையில அடைத்தது. 1942 முதல் 1944 வரை சிறையில் வாடினார்.

சிறையிலிருந்து வெளிவந்ததும், அவருக்குக் காமராஜருடன் தொடர்பு ஏற்பட்டது. தமிழ்நாடு காங்கிரசில், அவருடன் கூடச் சேர்ந்து, தொண்டாற்றி வந்தார். 1946 முதல் 1957 வரையில் தமிழகக் காங்கிரசின் தொழிலாளர் பிரிவுக்குத் தலைமையேற்றுப் பணிபுரிந்தார். தொழிலாளர் நலனுக்காக 'லேபர் ஜெர்னல்' என்ற ஒரு பத்திரிகையைத் துவக்கி நடத்தி வந்தார்.

இதற்கிடையில், தமிழ்நாடு காங்கிரசின் செயலர் பதவி, அவரைத் தேடி வந்தது. 1954 ஆம் ஆண்டு, சென்னையை அடுத்த ஆவடியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடந்தது. அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யும் பெரும் பொறுப்பை ஏற்று நடத்தியவர் இவரே! அதன் பிறகு இவரது புகழ் மேலும் உயர்ந்தது.

நம் நாட்டின் முதல் பொதுத் தேர்தல் எப்போது நடந்தது தெரியுமா? 1952 இல்தான். அதற்கு முன்பு இடைக்காலப் பாராளுமன்றம் அமைக்கப்பட்டிருந்தது. ஆர். வி. அவர்கள் 1950 இல் அதன் உறுப்பினர் ஆனார். தொடர்ந்து, 1952 இன் முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்று, நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். நாடாளுமன்றம் இருக்கும் இடம் உங்களுக்குத் தெரியும் அல்லவா?

ஆம்! புதுதில்லிதான். அங்கு இவருக்கு நேருஜியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதன் பிறகு, இந்திய அரசின் பல்வேறு தூதுக் குழுக்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்றுப் பல நாடுகளுக்குச் சென்று வரும் வாய்ப்புக் கிடைத்தது. 1952 இல்

ஜானகிமணாளன்

ஐக்கிய நாடுகள் அவையில் சர்வ தேசத் தொழிலாளர் நல அமைப்பின் (ILO) மெட்டல் டிரேட்ஸ் குழுவின் தலைவராக ஜெனிவா சென்றார். காமன்வெல்த் பார்லிமெண்டரி மாநாடு நியூஜிலாந்தில் நடந்தது. அதற்குச் சென்றார். 1955 இல் மிகப் பெரிய உலகப் பொறுப்பு இவரைத் தேடி வந்தது. ஐ. நா. சபையின் நிர்வாக டிரிப்யூனலுக்கு இவர் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

பின்னர், கே. பி. திரிபாதி, என்பவ ருடன் சேர்ந்து, காங்கிரஸ் பார்லி மெண்டரி குழுவில் 'GINGER GROUP' ஐ அமைத்தார். பிற்பாடு அந்தக் குழு தான் 'சோஷலிஸ்ட் ஃபாரமாக' உருப் பெற்றது.

1954. காமராஜர் தமிழ்நாடு மாநில முதலமைச்சரானார். அப் போது இவர் பார்லிமெண்ட உறுப் பினர். 1957 தேர்தலிலும் இவர் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். எனினும் காமராஜர், இவரது பணி நம் மாநிலத்துக்குப் பயன்பட வேண்டும் என்று விரும் பினார். தம் அமைச்சர் அவையில் வந்து சேர்ந்து கொள்ளுமாறு அழைத் தார்.

எனவே, திரு ஆர். வி. அவர்கள் பார்லிமெண்ட உறுப்பினர் பதவி யைத் துறந்துவிட்டு, தமிழ்நாடு மாநில அமைச்சரானார். எந்தத் துறைக்கு அமைச்சர் தெரியுமா? அவருக்கு மிகவும் பிடித்தமான தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறைக்குத்தான்! மாநில அமைச்சராக இருப்பவர்கள், மாநிலச் சட்டமன்றம் ஏதாவது ஒன்றில் உறுப்பினராக இருக்க வேண்டும். எனவே, இவர் மேலவை உறுப்பினர் ஆனார். பிற்பாடு அதன் தலைவராகவும் ஆகிவிட்டார்.

தமிழ்நாடு அரசியலில் 1957 முதல் பத்தாண்டுகள் முக்கியமான கால கட்டம். பொற்காலம் என்றுகூடக் கூறுவார்கள். ஆர். வி. அவர்கள்தான் அப்போது தொழில் மற்றும் தொழி லாளர் நலத்துறை அமைச்சர். அவர் காலத்தில், இங்கு தொழில் துறையில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்பட் டது. குறிப்பிட்டுச் சொன்னால், சென்னை அருகில் உள்ள கிண்டி தொழிற்பேட்டையைச் சொல்லலாம். அத்துடன், நெய்வேலி பழுப்பு நிலக் கரிச் சுரங்கத்துக்கு அடிக்கல் நாட்டப் பட்டதும் அப்போதுதான்.

1967 இல் தேர்தல் வந்தது. அது தமிழ் நாட்டு அரசியலில் ஒரு திருப்பு முனை. ஆர். வி. அவர்களுக்கு மட்டும்

திரு. ஆர். வி. அவர்கள் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றபிறகு, உரை நிகழ்த்துகிறார்.





என்பதில்லை. காங்கிரஸ் கட்சிக்கும் கூட வெற்றி கிட்டவில்லை. பிறகு வெற்றி பெற்றது யார்? அறிஞர் அண்ணா என்று அன்புடன் அழைக்கப் படும் சி. என். அண்ணாதுரை அவர்கள்தான். அவர் முதல் அமைச்சரான துமே, ஆர். வி. அவர்களைத் தமிழ் நாடு அரசாங்கத்தின் திட்டக் குழுவில் சேர்ந்து அதன் தலைவராகப் பணி யாற்றுமாறு அழைத்தார். ஆனால், அதற்குள், பாரதப் பிரதமர் இந்திரா காந்தி என்ன செய்தார், தெரியுமா? தமதுமத்திய திட்டக்குழுவில்அவரை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டு விட்டார். அப்போது முதல் 1971 ஆம் ஆண்டு வரையில், அவர் அந்தப் பொறுப்பில் இருந்தார்.

பிற்பாடு நமது நாட்டின் அரசிய லில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே, ஆர். வி. அவர்கள் அரசியலி லிருந்து சற்று ஒதுங்கியே இருந்து வந்தார். 'ஸ்வராஜ்யா' என்ற ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் ஆன தும் அப்போதுதான்.

பிற்பாடு, நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போ தும் இவர் அரசியலிலிருந்து ஒதுங்கி யேதான் இருந்தார்.

1977 தேர்தல். அப்போது திரு. ஆர். வி. மீண்டும் காங்கிரசில் தீவிரமாகப் பங்கேற்கத் தொடங் கினார். அந்தத் தேர்தலில், தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி யில் போட்டியிட்டு வென்றார். 1980 தேர்தலிலும் அதே தொகுதியில் வெற்றி பெற்றார். உடனே மத்திய நிதித் துறை அமைச்சரானார். பிற் பாடு, பாதுகாப்புத் துறை அமைச்ச ரானார். அதன் பிறகு துணை ஜனாதிபதி யானார்.

அதன் பிறகு நடந்ததெல்லாம்தான் உங்களுக்குத் தெரியுமே!

ஆம்! இவர் நமது பாரத நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாகப் பொறுப் பேற்றுள்ளார். இவர் ஐந்து ஆண்டு கள் இந்தப் பதவியில் இருப்பார். அதாவது 1992 ஜூலை 24 ஆம் தேதி வரை இவர்தான் நம் ஜனாதிபதி!

நமது மாநிலத்தைச் சேர்ந்த ஒரு வர் இந்த உயர் பதவியில் இருப்பதை எண்ணிப் பெருமை அடையும் நாம், அவரைப் பாராட்டுவதோடு அவர் பதவிக் காலத்தில் இந்தியாவில் அமைதி ஏற்பட்டு மிக உயர்ந்த ஓர் இடத்தை நாடு பெற வேண்டும் என்றும், ஆர். வி. அவர்களுக்கு நீண்ட ஆயு ளும், நல்லருளும் வழங்க வேண்டு மென்றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிக் கேட்டுக் கொள்வோம்.



கடவுளைக் கண்டவர்கள்

விரோதி போட்ட வேஷம்

தேவி-நாச்சியப்பன்

அரசர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். அப்போது பட்டை பட்டையாக விபூதி பூசிய ஒரு சிவனடியார் வாயில் காவலன் கூறியவற்றை நின்று கேட்காது, அரசரின் பள்ளியறைக்குள் நுழைந்தார். அரசரின் எதிரில் அமர்ந்திருந்த அரசி சிவனடியாரைக் கண்டதும் எழுந்து, வணங்கிப் பின் பணிவுடன் தன் கணவரை எழுப்பினாள்.

கண் விழித்த அரசர், எதிரில் நின்ற சிவனடியாரைக் கண்டதும் முகமலர்ந்து வரவேற்றார். பிறகு, "தேவரீர், தாங்கள் இங்கு தோன்றிய காரணத்தை அடியேன் அறியலாமா?" என பணிவன்புடன் கேட்டார்.

அதற்கு சிவனடியார், "சிவபெருமான் முன்பு திருவாய் மலர்ந்தருளிய ஓர் ஆகம நூல் எனக்குக் கிடைத்துள்ளது., கிடைப்பதற்கரிய அந்நூலை உனக்கு உபதேசிக்கவே வந்துள்ளேன்," என்று கூறினார். உடனே, அரசியார் அந்தப்புரம் சென்றுவிட்டார்.

மிக்க மகிழ்ச்சி அடைந்த அரசர், "பெரும் பேறு பெற்றேன்" எனக் கூறி, "அருள் செய்ய வேண்டும்" என்று பணிந்தார்.

இத்தருணத்தையே எதிர்பார்த்து வந்த சிவனடியார் புத்தக உறையைப் பிரித்தார். அதனுள் புத்தகமோ, ஓலைச் சுவடிகளோ இல்லை. மாறாகக் கத்தி இருந்தது! அந்தக் கத்தியை உருவி, பணிந்து வணங்கிய அரசரின் முதுகில் குத்திவிட்டார், சிவனடியார்!

இரத்த வெள்ளம் பெருகிய நிலையிலும், உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த வேளையிலும் சிவ வேடம் பூண்ட நயவஞ்சகனுக்குத் தீங்கு ஏற்பட்டு விடாதபடி, அரசர் சிவனடியாரைத் தொழுத வண்ணம் இருந்தார்.

தடுத்துக்கூறியும்கேளாமல்உள்ளே சென்ற சிவன்டியார் மேல் சந்தேகம் கொண்ட காவலன் தத்தன் என்பவன், உள்ளே நடப்பதை உற்றுக் கவனித்த வண்ணம் இருந்தான். சிவனடியார் வேடத்தில் உள்ளே சென்ற

வர், அரசரைக் கத்தியால் குத்திவிட்டார் என்பதை அறிந்தவுடன் காவலன் தத்தன் சீற்றத்துடன் வாளை உருவியபடி சிவனடியார் வேடத்திலிருந்தவனை உற்று நோக்கினான். அவன் வேறு யாருமல்ல; அரசருடன் பலமுறை போரிட்டுத் தோல்வியடைந்தமுத்திநாதன்தான் என்பதைத் தத்தன் எளிதில் கண்டு கொண்டான். போரில் வெல்ல முடியாத அரசரை சிவனடியார் வேடத்தில் வந்து தந்திரமாகக் குத்திக் கொல்ல முத்திநாதன் திட்டம் தீட்டிச் செயல்படுத்தியிருக்கிறான் என்பதை நொடியில் புரிந்து கொண்டான் தத்தன். ''எம் அரசரைக் கொன்ற உன்னை என்ன செய்கிறேன், பார்'' என்று ஏந்திய வாளுடன் ஆவேசமாக முத்திநாதன் மீது பாய்ந்தான்.


அரசர் தத்தனைக் கையமர்த்தி, ''தத்தா, அவரை ஒன்றும் செய்யாதே! சிவவேடம் புனைந்தவருக்குத் தீமை செய்யலாகாது'' என்று கூறினார். தத்தன் வேதனையுடன் அரசரின் அடுத்த கட்டளையை எதிர்நோக்கி நின்றான். அரசர், ''இவருக்கு நகர மக்களால் எவ்விதத் தீங்கும் ஏற்படாத வண்ணம் நகரின் எல்லை வரை நீ துணையாகச் சென்று பத்திரமாக அனுப்பிவிட்டு வா'' என்றார்.


தத்தனும் அவ்வாறே முத்திநாதனைப் பத்திரமாக நகர எல்லையில் விட்டு வந்தான். அச்செய்தியை அரசரிடம் வந்து கூறினான். அரசர், ''தத்தா, நீ செய்த உபகாரம் யாரும் செய்வதற்கரியது'' என்று கூறினார்.

மேலும், ''அனைவரும் திருநீற்றின் மீது பேரன்பு கொண்டு வாழுங்கள்'' என்று கூறியபடியே இறைவனை தியானித்தார்.

சிவனடியார்களின் மேல் இத்தனை பக்தியும் பாசமும் கொண்ட அரசருக்கு, சிவபெருமான் உமாதேவியுடன் காட்சியளித்து அவரைத் தம்முடன் உறையும் நிலையை அருளினார்.

இந்த அரசர் யார் என்று தெரிகிறதா? இவர்தான் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மெய்ப்பொருள் என்னும் சிற்றரசர். இவரைத்தான் பெரிய புராணம் மெய்ப்பொருள் நாயனார் எனப் போற்றிப் புகழ்கிறது!





முட்டாள் புலி
படக்கதை :- S.K.ராமானுஜம் (ராஜு)
புலி ஒன்று, மிகுந்த பசியில் காட்டைச் சுற்றி, சுற்றி வந்து கொண்டிருந்தது.
அப்பொழுது......
புதரில் தூங்கிக்கொண்டிருந்த நரியைக்கண்டது.
உடனே புலி அந்த நரியைச் சாப்பிடப்பாய்ந்தது....
ஐய்யோ! இப்புலியினிடம் சாவதைவிட இந்தக்கிணற்றில் விழுந்து சாகலாம்.
கிணற்றில் தண்ணீர் குறைவாக இருந்ததால் நரி உயிர் பிழைத்தது... பசியோடுள்ள புலி கிணற்றிலுள்ள நரியைப்பிடிக்க முடியவில்லை.
மறுபடியும் மிகுந்த பசியில் காட்டைச்சுற்றத்தொடங்கியது
ஐய்யோ! ஒரு பிராணி கூடக் கிடைக்க வில்லையே--!
கடைசியில் புலி, மீண்டும் நரி விழுந்த கிணற்றிற்கே... வந்தது.


பாவம். நரி, கிணற்றிலிருந்து வெளியே வரமுடியாமல்... தவித்துக்கொண்டிருந்தது.
இப்பொழுது எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. உடனே உன்னை, நான் எப்படிச் சாப்பிடுவது ?
தந்திரமுள்ள நரி இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று... எண்ணியது.....
நான் இந்தக் கிணற்றிலிருந்து துன்பப்படுவதை விட உங்கள் வயிற்றில் இருப்பதே நல்லது....
ஆழமே இல்லாத இந்தக் கிணற்றில் நீங்கள்.... குதித்து என்னை உடனே சாபபிட்டு விடலாம்...
முட்டாள் புலி, தந்திரமுள்ள நரியின் சொல்லைக் கேட்டு, கிணற்றில் குதித்தது...
உடனே நரி புலியின் தலைமீது கால் வைத்து, கிணற்றுக்கு மேலே தாவி வெகு வேகமாக வெளியே வந்துவிட்டது.
புலியாரே! தங்கள் உதவியை என்றும் மறக்க மாட்டேன்...

பிருந்தாவனக்

பூவா, தலையா?

மா.தா. ஸ்ரீதர் (13வ)



அவன் பெயரை எல்லோரும் மறந்து விட்டார்கள். அவனை, 'பூவா, தலையா?' என்றுதான் கூப்பிடுவார்கள். இப்பொழுது அவன் ஒன்பதாவது முடித்துப் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டு வருகிறான். எல்லா மாணவர்களைப் போல அவனுக்கும் அப்பா அம்மா வைத்த பெயர் இருக்கிறது.

முதன் முதலில் அவன் அந்தப் பள்ளியில் சேர்ந்த பொழுது ஆசிரியர் அவனைப் பார்த்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"பூதலிங்கம்!"

"நீ என்ன பூராட நட்சத்திரத்தில் பிறந்தவனா?"

அவன் கொஞ்சம் திரும்பி ஏதோ செய்தான். பிறகு, ஆசிரியரைப் பார்த்து, "ஆமாம்!" என்றான்.

"நீ பிறந்தது பூராட நட்சத்திரம் தான் என்றால், நேராக என்னைப் பார்த்து, 'ஆமாம்!' என்று சொல்லி விட்டுப் போக வேண்டியதுதானே! திரும்பிக் கொண்டு, ஏதோ செய்து பார்த்த பிறகு 'ஆமாம்!' என்று சொல்லக் காரணம் என்ன?" என்று ஆசிரியர் கேட்டார்.

"எனக்கு எந்த நட்சத்திரம் என்று தெரியாது ஸார்! அதனாலே காசு எடுத்து, 'பூவா, தலையா?' போட்டுப் பார்த்துவிட்டு, 'பூ' விழுந்ததினால் 'ஆமாம்!' என்று சொன்னேன்" என்றான்.

"பூ விழாமல் தலை விழுந்திருந்தால்...?"

"பூராட நட்சத்திரம் இல்லை என்று சொல்லியிருப்பேன் சார்!" என்றான்.

ஆசிரியர் மட்டுமல்ல, வகுப்பில் எல்லோரும் சிரித்தார்கள். அன்று முதல் பள்ளியில் மட்டும் அவன் பெயர் 'பூவா தலையா?' என்றாகிவிட்டது. 'பூதலிங்கம்' என்று அவனை யாரும் கூப்பிடுவதில்லை. அவனும் கவலைப்படவில்லை. தன் பழக்கத்தையும் மாற்றிக் கொள்ளவில்லை.

கணக்குப் போடுவதா? பாடம் எழுதுவதா? 'பூவா தலையா?' போட்டுப் பார்ப்பான். சினிமாவா, டிராமாவா? போடு, பூவா தலையா' இரண்டு விஷயங்கள் என்றால் இப்படி. இரண்டுக்கு மேல் சந்தேகம் வந்தால் வேறு மாதிரி தீர்மானம் செய்வான்.

எப்படி?

விளையாடப் போவதா?, கண்காட்சிக்குப் போவதா? நண்பன் வீட்டில் டீ.வி. பார்ப்பதா? என்று குழப்பம் வந்தால், உடனே சாலையில் நின்று கொண்டு முதலில் பஸ் வந்தால் விளையாட்டு; லாரி வந்தால் கண்காட்சி; ஆட்டோ வந்தால் டீ. வி. என்று தீர்மானம் செய்து கொண்டு சாலையில் நின்றான்.

அவன் துரதிர்ஷ்டம்!

அன்று போக்குவரத்து நிறுத்தப்பட்டது. யாரோ தொழிற் சங்கத்தார் அன்று மாட்டு வண்டி ஊர்வலம் நடத்தினர். சாலையில் அந்த ஊர்வலம் போக இரண்டு மணி நேரம் ஆகியது. அப்புறம் ஏது விளையாட்டு? கண்

கதையரங்கம்

காட்சி, டீ. வி? பேசாமல் வீட்டிற்குத் திரும்பினான் பூதலிங்கம்.

திடீரென்று...

அவன் முன்னால் மூன்று பேர் தோன்றினார்கள்.

"தம்பி!" மூவரும் ஏக காலத்தில் கூப்பிட்டார்கள். பிறகு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு, நடுவில் இருப்பவர் மட்டும் பேசினார்.

"தம்பி! இவர் ரேடியோதான் உயர்ந்தது என்கிறார். இவர் டீ. வி.தான் உயர்ந்தது என்கிறார். நான் புத்தகமே சிறந்தது என்கிறேன். இந்த ரேடியோ, டீ. வி. புத்தகம் ஆகியவைகளில் சிறந்த பயனுடையது எது என்று நீ முடிவு சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

இரண்டில் எது சிறந்த பயனுடையது என்றால் 'பூவா தலையா?' போட்டுப் பார்க்கலாம்! மூன்றில் எப்படித் தேர்வு செய்வது? ஒரே இருட்டு! சுற்றிலும் ஒன்றும் தெரியவில்லை! சாலை ஏதாவது தெரிந்தால் வழக்கப்படி பஸ்ஸா, லாரியா, ஆட்டோவா என்று முதலில் வருவதைக் கொண்டு ஒரு முடிவு செய்யலாம்!

"நாளை இரவு பதில் சொல்கிறேன்!" என்றான் பூதலிங்கம்.

மறுநாள் மாலை.

வானொலி கேட்கலாம் என்றால் மின் சக்தி இல்லை. எப்பொழுது வருமோ? டீ. வி. யாவது பார்க்கலாம் என்றால், அதற்கும் மின் சக்தி வேண்டுமே!

அங்கே அதுவும் ரிப்பேர்!

பிறகு அவனும் நண்பனும் 'பாவாணர் நூலகம்" சென்று குழந்தைகள் புத்தகம் வாங்கிப் படித்தனர்.


முதல் நாள் வந்த மூவரும் மறுநாள் இரவு வந்தனர்.

"புத்தகமே சிறந்த பயனுடையது. அதற்கு மின் சக்தி தேவையில்லை! பழுது அடையாது! அதைப் பயன்படுத்துவதும் வெகு சுலபம். அதன் பக்கங்களைத் தள்ளியபடி எளிதாகப் படித்துக் கொண்டே போகலாம். இரவில் மின்சக்தி இல்லாவிட்டாலும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் படிக்கலாம். மற்ற இரண்டும்— வானொலி, டீ.வி.

இரண்டிற்கும் மின்சக்தி அவசியம். அடிக்கடி பழுதாகும். செலவும் உண்டாகும். வானொலி டீ.வி. புத்தகம் மூன்றிலும் சிறந்தது புத்தகமே! சந்தேகமில்லை!" என்று அவர்களுக்குப் பதிலளித்தான் பூதலிங்கம்.

வந்தவர்கள் அவன் பதிலைக் கேட்டுப் பாராட்டினர்.

அன்று முதல் அவன் எதையும் நன்கு சிந்தித்துப் பார்த்து முடிவு எடுப்பான். இப்பொழுது யாரும் அவனை 'பூவா, தலையா!' என்று கூப்பிடுவதில்லை!



அந்தக் காட்டுப் பாதையின் வழியாக அரசாங்க பஸ் அமைதியாகச் சென்று கொண்டு இருந்தது. மாலை நேரம். ஆதலால் அந்த பஸ்ஸில் பள்ளி மாணவர்களும், தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களும் அதிகமாகப் பிரயாணம் செய்தனர்.

கண்டக்டர், ''டிக்கெட், டிக்கெட்'' என்று சத்தம் போட்டுக் கொண்டே டிக்கெட் கொடுத்துக் கொண்டு இருந்தார். பஸ் போகும் வழியில் அடர்ந்த காடு இருந்தது. அதைத் தாண்டித் தான் பஸ் போக வேண்டும்.

அந்த பஸ்ஸில் கந்தசாமி என்ற ஒருவர் பஸ் புறப்பட்ட பிறகு அவசர மாக வந்து ஏறினார். தினமும் அந்த பஸ்ஸில் வரும் தொழிலாளிதான் அவர். அவரிடம் கண்டக்டர் டிக்கெட் டிற்குப் பணம் கேட்டார். அவரும் சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தார். ஒரு ரூபாய்தான் இருந்தது. டிக்கெட் கட்டணம் ரூ. 1.50. அவருக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது.

''சார், பையில் ரூ. 1.50 வைத்திருந்தேன். 50 பைசா எங்கோ தவறி விட்டது. தினமும் இதே வண்டியில்தானே வருகிறேன். நாளைக்கு வரும்போது தருகிறேன்'' என்று கெஞ்சினார்.

ஆனால் கண்டக்டரோ, ''ஆமாய்யா, எல்லோரும் நாளைக்கு அம்பது பைசா தர்றேன்னு சொல்லி ஏமாத்திட்டுப் போயிருங்க. அப்புறம் குறைகிற பணத்தை யார் கட்டுறது?'' என்று திட்டினார்.

கந்தசாமி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். ஆனால், கண்டக்டரோ ''அதெல்லாம் முடியாது. ஒரு ரூபாய்க்கு பாதி வழியிலே, ஒரு நிற்கும் இடம் இருக்கு. அதிலே இறங்கி நடந்து போய்க்கோ, சும்மா வளவளன்னு பேசிக்கிட்டு இருக்காதே'' என்று அதட்டிவிட்டுப் போய்விட்டார்.

பஸ்ஸில் பயணம் செய்பவர்களில் எவரும் அவருக்கு உதவி செய்ய முன் வரவில்லை. எல்லோரும் பரிதாபமாக அவரைப் பார்த்தனர். பாதி வழியில் இறங்கிக் காட்டு வழியில் நடந்து வர வேண்டுமே என்ற எண்ணத்தில் தான் அப்படிப் பார்த்தனர்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த பள்ளி மாணவன் தங்கராஜு அவர்மீது ரொம்பவும் இரக்கப்பட்டான். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தான் இரண்டு நாட்களாகச் சேர்த்து வைத்த அறுபது பைசா நினைவுக்கு வந்தது. அவன் சினிமாவுக்குப் போகலாம் என்றுதான் சேர்த்து வைத்தான். அதில் ஓர் ஐம்பது பைசாவை எடுத்துக் கந்தசாமியிடம் கொடுத்தான். அதைப் பார்த்த கந்தசாமி நன்றி கலந்த பார்வையுடன் தங்கராஜுவை நோக்கினார்.

''உன் பெயர் என்னப்பா? நான் என் வாழ்நாளில் உன்னை மறக்கவே மாட்டேன்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார். தங்கராஜு தன் பெயரைச் சொன்னான். அதற்குள் அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததால் அவன் இறங்கி விட்டான். கந்தசாமி நன்றிப் பெருக்கோடு அவன் இறங்குவதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

அவன் மட்டும் அந்த ஐம்பது பைசாவைத் தராவிட்டால், அவர் அன்று ஐந்து கிலோமீட்டர் காட்டுப் பாதையில் நடந்திருக்க வேண்டும்! அந்த வழியில் வழிப்பறிக் கொள்ளையர்களும், வனவிலங்குகளும் அதிகம்.

தங்கராஜு ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பையன். அவன் மேல் வகுப்பு படிக்க வேறு பள்ளிக்கூடம் சென்று விட்டான். ஆகையால், மறுபடியும் தங்கராஜுவும் கந்தசாமியும் சந்திக்கிற வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. தங்கராஜு இந்த நிகழ்ச்சியையே மறந்து விட்டான். ஆனால், கந்தசாமி அதை மறக்கவேயில்லை. பஸ்ஸில் ஏறும் போதெல்லாம் தங்கராஜுவின் நினைவுதான் வரும்.

பத்து வருடம் சென்றது. தங்கராஜு மேல் படிப்பை எல்லாம் முடித்து விட்டு வேலைக்காக அலைந்து கொண்டிருந்தான். ஆனால், ஒரு வேலையும் கிடைக்கவில்லை. வேலை இல்லாததால் சும்மா சுற்றிக் கொண்டிருந்தான். அதனால் வீட்டில் எல்லோரும் 'தண்டச்சோறு' என்று திட்டிக் கொண்டே இருந்தனர். அதனால் அவன் ரொம்பவும் வருத்தப்பட்டான்.

ஒருநாள் தன் பக்கத்து நகரில் இருக்கும் ஒரு தொழிற்சாலைப் பக்கமாகச் சென்றான், தங்கராஜு.

அப்போது காரிலே அங்கு வந்து இறங்கிய அந்தத் தொழிற்சாலையின் முதலாளி தற்செயலாக அவனைப்

பார்த்தார். உடனே ஓடிவந்து அவனைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டார். தங்கராஜுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அப்போது அவர் சொன்னார்: "தங்கராஜு, பத்து வருஷங்களுக்கு முன்னால் பஸ்ஸிலே வரும் போது ஒரு ஐம்பது பைசா கொடுத்து என் சிரமத்தைத் தீர்த்தாய். நீ அதை மறந்து இருக்கலாம். ஆனால் நான் மறக்கவே இல்லை. அதற்கு நன்றிக் கடனாக உனக்கு இந்தத் தொழிற்சாலையில் ஒரு நல்ல பதவியைக் கொடுக்கப் போகிறேன். இதை நீ மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பரிவோடு கூறினார்.

கந்தசாமி நாணயமான ஒரு தொழிலாளியாக இருந்து, பின்னர் படிப்படியாக உயர்ந்து இப்போது தேசிய மயமாக்கப்பட்ட ஒரு வங்கியின் உதவியுடன் ஒரு தொழிற்சாலை ஆரம்பித்திருப்பதைத் தங்கராஜு தெரிந்து கொண்டான். அவன் அன்று செய்த ஒரு சிறு உதவிக்கு அவர் செய்த பேருதவியை அவனால் மறக்க முடியுமா?

திருடரைப் பிடித்த சிறுவர்கள்!



எஸ்.செந்தில்குமார் (13779)

ரவி, குமார், மாதவன் என்ற மூவரும் இணை பிரியாத நண்பர்கள். மிகுந்த துணிச்சல் உள்ளவர்களும் கூட. இவர்கள் மலைச்சாரலில் உள்ள இயற்கை வளம் மிகுந்த தேவபுரம் என்னும் சிற்றூரில் வசிக்கின்றனர்.

இந்த மூன்று நண்பர்களும் இவர்களது கிராமத்திற்குச் சற்றுத் தொலைவில் உள்ள ஒரு நகரில் பயில்கின்றனர். விடுமுறையைப் பயனுள்ளதாகக் கழிக்க நண்பர்கள் விரும்பினர். இவர்களது பெற்றோர்கள் விவசாயம் செய்கின்றனர். விடுமுறை நாளில் ஒரு காலைப் பொழுதில் நண்பர்கள் மூவரும் கிராமத்திற்கு அருகில் உள்ள காட்டுக்குச் செல்ல விரும்பினர். காட்டில் உள்ள இயற்கை வளத்தைக் கண்டு களிக்க விரும்பினர்.

மூன்று நண்பர்களும் காட்டை அடைந்தனர். காட்டில் உள்ள பல வகையான பூக்கள், காய்கள், மரங்கள் இவற்றைப்பார்த்துக்கொண்டே சென்றனர். முயல்கள், மான்கள், காட்டுப் பன்றிகள் பல இடையில் ஓடுவதைக் கண்டனர். நண்பர்கள் மகிழ்ச்சியில் காட்டிற்குள் வெகுதூரம் வந்துவிட்டனர்.

அப்போது மரங்கள் வெட்டப்படுகின்ற சத்தம் கேட்டது. சந்தன மரங்களின் மணமும் வந்தது. "டேய், இவர்கள் காட்டிலாகா அதிகாரிகளுக்குத் தெரியாமல் திருட்டுத் தனமாகச் சந்தன மரங்களை வெட்டுகிறார்கள். இவர்கள் அடுத்தாற் போல் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை இந்தப் புதர் மறைவில் இருந்து பார்ப்போம்" என்றான் ரவி.

ரவி சொன்னபடி மூவரும் ஒரு புதரின் மறைவில் அமர்ந்து கொண்டு பார்த்தனர்.

அப்போது மரத்தை வெட்டுவதில் சுமார் இருபது நபர்கள் மும்முரமாக இருந்தனர். ஆனால், தற்செயலாகத் திரும்பிய ஒருவன் இவர்களில் ரவியைக் கவனித்து விட்டான். புதராக இருந்ததால், மற்ற இருவரும் அவன் கண்களில் படவில்லை.

அவனது முகத்தில் சற்று மாறுதலைக் கண்ட ரவி, குமாரிடமும் மாதவனிடமும் இரகசியமாக ஏதோ கூறினான். உடனே, ரவியும் மாதவனும் எழுந்து வேறு ஒரு திசையில் ஒன்றாக ஓடினார்கள். அவர்களை ஐந்து, ஆறு பேர் துரத்திப் பிடித்தனர். அவர்களை மரத்தில் கட்டி வைத்து விட்டு மீண்டும் மரங்களை வெட்டத் தொடங்

கினர்.

குமார் புதரிலிருந்து மெதுவாக எழுந்து, மறைந்து மறைந்து தாங்கள் வந்த வழியே அவர்களுக்குத் தெரியாமல் சென்றான். கிராமத்திற்குச் சற்றுத் தள்ளி வனவிலங்கு அதிகாரிகள் பலர் தங்கி இருந்தனர். அவர்களிடம் குமார் சென்று இச்செய்தியைக் கூறினான். உடனே ஓர் அதிகாரி பல ஊழியர்களையும் குமாரையும் அழைத்துக் கொண்டு துப்பாக்கியுடன் காட்டைச் சென்றடைந்தார். நான்குதிசைகளிலும் ஆட்கள் சென்று சந்தனமரத் திருடர்களையும் அவர்களது லாரியையும் மடக்கிப் பிடித்தனர். ரவியையும், மாதவனையும் விடுவித்தனர்.

"பல நாட்களாக நாங்கள், உங்களைத் தேடினோம். நீங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இன்று இந்தச் சிறுவர்களின் உதவியால் மாட்டிக் கொண்டீர்கள்'' என்று அதிகாரி திருடர்களிடம் கூறினார். இச்செய்தியை நகரத்தில் உள்ள காவல் துறைக்கும் தெரிவித்தனர்.

திருட்டைக் கண்டுபிடித்த மூன்று நண்பர்களுக்கும் பல பாராட்டுக்கள் கிடைத்தன என்று சொல்லவும் வேண்டுமா? ரவி சொன்ன இரகசியம் புரிந்து இருக்குமே உங்களுக்கு?

சங்கரின் அரங்கேற்றம்



'அரங்கேற்றக்கச்சேரி' என்றுதான் அழைப்பிதழில் இருந்தது. ஆனால், அன்று அந்தக் கச்சேரியைக் கேட்டவர்கள், 'பல அரங்குகளில் வாசித்துப் பண்பட்ட மாதிரி இருக்கிறதே!'' என்று கூறி அடிக்கடி கரகோஷம் செய்த வண்ணம் இருந்தனர்.,

9.7.87 இல் மயிலாப்பூர் சாஸ்திரி மண்டபத்தில், சிறுவன் ஆர். சங்கரனின் மிருதங்க அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மந்தைவெளிப்பாக்கத்திலுள்ள செயின்ட் ஜான்ஸ் சீனியர் செகண்டரி பள்ளியில் படிக்கும் 12 வயதே நிரம்பிய சங்கரன் நல்ல அதிர்ஷ்டசாலி. அன்று சபைக்குப் பெரிய பெரிய வித்துவான்களும், பத்திரிகையாளர்களும், ரசிகப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

தலைமை வகித்த மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் சங்கரைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். மிருதங்க வித்துவான் திரு. உபேந்திரன், ''வருங்காலத்திற்கு ஒரு சிறந்த மிருதங்க வித்துவான் கிடைத்து விட்டான்'' என்றார். பிரபல எழுத்தாளரும், விமர்சகருமாகிய திரு. த. ரா. ரா., பையன் சபை அச்சம் இன்றி, தன்னம்பிக்கையுடன், பாட்டைப் போஷித்து வாசித்ததைச் சிலாகித்துப் பேசினார்.

சங்கருக்கு நன்கு பயிற்சி அளித்து எடுத்த எடுப்பிலேயே பிரகாசிக்கச் செய்த திரு. குத்தாலம் விஸ்வநாதய்யர் பெரிதும் பாராட்டுக்குரியவர்.

கவிதை பிறந்த கதை:

உயிரை இழக்காமல் ஒரு கால் இழந்தான்!



—ஆலந்தூர் மோகனரங்கன்

நூலகத்தில் பணியாற்றும் கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கன் அவர்களுக்கு ஒரு சுவையான அனுபவம்:

ஒருநாள் இவரது நண்பர் ஒருவர் இவரிடம் வந்து, "என் மகன் அண்ணாமலை இங்கே வந்தானா?" என்று கேட்டார். அதற்கு இவர், "அவன் இங்கு வரவில்லையே!" என்றார். உடனே வந்தவர், "பள்ளிக்கூடத்திலும் அவன் இல்லை... உம்... அவன் என் பேச்சைக் கேட்பதே இல்லை" என்று வருந்திக் கொண்டே சென்றார்.

கவிஞர் நூலகத்தைமூடிக்கொண்டு வெளியே சென்றார். வழியில் பெரிய ஆலமரத்தின் கீழே சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கே அண்ணாமலையும் இருந்தான். பள்ளிக்கூடம் போகாமல், இப்படி ஆடித் திரியும் சிறுவர்களைக் கண்டு கவிஞர் மனம் நொந்தார். அண்ணாமலையின் தந்தை வருத்தப்பட்டுச் சென்றது அவர் கண்முன் தோன்றியது.

'பள்ளிக்குத் தவறாமல் போக வேண்டும்; பெற்றோர்களை மகிழ்விக்க வேண்டும்' என்று கவிஞர் எண்ணினார். உடனே சிறுவர்களைப் பார்த்து, 'ஆடிக் கொண்டே இருப்பதென்ன, ஆல மரத்தின் கீழே' என்று கேட்டார். அதற்கு மற்ற சிறுவர்களும் 'ஆடிக் கொண்டே இருப்பதென்ன ஆலமரத்தின் கீழே' என்று கவிஞரிடமே திரும்பக் குறும்பாகக் கேட்டார்கள். பிறகு நூலகத்திற்கு வந்த கவிஞர், சிறுவர்களிடம் கேட்ட




கேள்வியையே முதலடியாக வைத்துப் பாட்டை எழுதினார்.

ஆடிக் கொண்டே இருப்பதென்ன
ஆல மரத்தின் கீழே! — உன்னைத்
தேடிக் கொண்டே இருக்கும் கல்வி
தேம்பிக் கொண்டே இருக்கும்!

நம்பிக் கொண்டே இருக்கும் பெற்றோர்
நடுங்கலாமோ நெஞ்சம்? —இளமை
மங்கிக் கொண்டே இருந்தால் நாளை
மலரும் வாழ்க்கை உண்டோ?

என்று கூறிக் கொண்டே போய், கடைசியில் இப்படி முடிக்கிறார் கவிஞர் :—

நீந்திக் கொண்டே இருந்தால் கரையை
நெருங்கிக் கொண்டே இருப்பாய் —
என்றும்
ஏந்திக் கொண்டே இருக்கும் வெற்றி
இன்பம் வழங்கும் கல்வி!




கவிஞருக்குத் தெரிந்த ஒரு சிறுவன் மிதிவண்டி ஓட்ட ஆசைப்பட்டான். அவன் ஆசையை நிறைவேற்றினார் ஒரு பெரியவர். ஆம், அவனுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக் கொடுத்தார் அவர். அதே சமயம், ''வண்டியில் வேகமாகப் போகக் கூடாது'' என்றும் எச்சரித்தார். ''வேகம் கூடாது; விவேகம் வேண்டும்'' என்பதை அறியாத சிறுவன் அவன்.

ஒருநாள், அவன், மிதிவண்டியில் காற்றாய்ப் பறந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்த கவிஞர் திடுக்கிட்டார். ''இவ்வளவு வேகமாகப் போகிறானே!'' என்று பயந்தார். அவனைக் கூப்பிட்டும் சொல்லிப் பார்த்தார். அவன் அதைக் கேட்பதாக இல்லை. அதன் விளைவு? விபத்தில் அவன் சிக்கினான்! கேள்விப்பட்ட கவிஞர் மிகவும் வருந்தினார். இந்தச் சம்பவம் மற்றவர்களுக்குப் பாடமாக விளங்க வேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணமே கவிதையாக மாறியது — அந்தக் கவிதையில் கடைசியாக இப்படி முடிக்கிறார் கவிஞர் —

தெருவிலே வண்டி சிட்டாய்ப் பறந்தது!
திரும்பும் முனையிலே பேருந்து வந்தது.
திடுக்கென நெஞ்சம்திகைத்துநடுங்கினான்.
ஓட்டுநர் திறம்பட ஒதுக்கினார் வண்டியை
மாட்டு வண்டியில் வரதன் மோதினான்.
உயிரை இழக்காமல்ஒருகால்இழந்தானே!

பேட்டி: பி. வி. கிரி



ஜெர்மன் தேசக் கதை

அதிசய மேசை!



தங்கக் கழுதை!

மாயக் கைத்தடி!

தமிழில்:
ஏச். கிருஷ்ணமூர்த்தி

ஒரு தையற்காரர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் ஓர் ஆடு வளர்த்தனர். அது நிறையப் பாலைக் கொடுத்தது. ஆட்டிற்குத் தீனி போட வேண்டுமல்லவா? அதற்காக மூன்று பிள்ளைகளும் முறைப்படி தினம் ஒருவராக அதை மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஒரு நாள் காலை வழக்கம் போல மூத்த பிள்ளை கல்லறையைச் சார்ந்த நிலத்திற்கு ஆட்டை ஓட்டிப் போனான். அங்கு புற்கள் மண்டிக் கிடந்தன. ஆடு வயிறார மேய்ந்தது. மாலை வேளை ஆனதும் அவன் ஆட்டைப் பார்த்து, ''ஆடே, ஆடே, மேய்ந்தாயா?'' என்று கேட்டான்.

''வஞ்சனையின்றி மேய்ந்துவிட்டேன் — இனி, கொஞ்சம் கூட முடியாது!'' என்று ஆடு பதிலளித்தது. ஆட்டின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி, அதை வீட்டிற்கு அழைத்துப் போனான். கொல்லைப்புறம் கட்டி வைத்தான்.

''மகனே! ஆட்டை மேய்த்தாயா?'' அப்பா கேட்டார்.

''பஞ்சமில் லாமல் பசும்புற்கள்
பரவி இருந்த தரையினிலே
வஞ்சனை யின்றி நம் ஆடு
வயிறு நிறைய மேய்ந்ததுவே!''

என்றான் மகன்.

மகன் சொன்னதை உறுதி செய்து கொள்வதற்காக அப்பா ஆட்டிடம் சென்று,

''பசியைப் போக்கப் பசும்புல்லை—
நீ
பக்குவ மாக மேய்ந்தாயா?
ஆடே, ஆடே, பதில் சொல்லு!''

என்று கேட்டார்.

அந்த ஆடு பார்ப்பதற்குச் சாதுவாகத் தோன்றினாலும், அதற்குக் குறும்புத்தனங்கள் அதிகம். ஆகவே அது,

''கல்லறை வெளியில் அலைந்திட்
டேன்
அங்கு
புல் தரை எதுவும் காணவில்லை
கொஞ்சங்கூட மேயவில்லை
நான்
கொஞ்சங்கூட மேயவில்லை!''

என்று சோகமாகப் பதிலளித்தது. அப்பா ஆட்டை நம்பினார். அவருக்

குக் கோபம் வந்தது. "ஆட்டைப் பட்டினி போட்டதும் அல்லாமல், பொய் வேறு பேசுகிறாயா? சோம்பேறி!" என்று வைது கொண்டே அவர் முதல் மகனைக் கெஜக் கோலால் அடித்து, வீட்டை விட்டுத் துரத்தினார்.

அடுத்த நாள், இரண்டாம் பிள்ளையின் முறை. செழிப்பாகச் செடிகள் வளர்ந்த ஓர் இடத்திற்கு அவன் ஆட்டை அழைத்துப் போனான். ஆடு நன்றாக மேய்ந்தது. மாலை ஆனதும் அவன், "ஆடே, ஆடே, மேய்ந்தாயா?" என்று கேட்டான்.

"வஞ்சனையின்றி மேய்ந்துவிட்டேன் — இனிக் கொஞ்சம் கூட முடியாது!" என்று ஆடு பதிலளித்தது.

அதை வீட்டிற்கு ஓட்டிச் சென்று கட்டிப் போட்டான்.

"மகனே! ஆட்டை மேய்த்தாயா?" அப்பா கேட்டார்.

"பஞ்சமில் லாமல் பசும்புற்கள்
பரவி இருந்த தரையினிலே
வஞ்சனை யின்றி நம்ஆடு
வயிறு நிறைய மேய்ந்ததுவே"

என்றான்.

மகனின் பதில் அப்பாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர் ஆட்டிடம் சென்று,

"பசியைப் போக்கப் பசும்புல்லை— நீ
பக்குவ மாக மேய்ந்தாயா?
ஆடே, ஆடே, பதில் சொல்லு!"

என்று கேட்டார்.

"கொஞ்சங் கூட மேயவில்லை — நான்
கொஞ்சங் கூட மேயவில்லை!"

என்ற பழைய பல்லவியையே ஆடு பாடியது.

அப்பா கோபத்தால் கொதித்து எழுந்தார். "வெட்கங் கெட்டவனே! அப்பாவி ஆட்டைப் பட்டினி போடுகிறாயா? இங்கு நிற்காதே! தொலைந்து போ!" என்று சொல்லி இரண்டாம் பிள்ளையையும் அவர் கெஜக் கோலால் அடித்து விரட்டினார்.

மூன்றாம் பிள்ளையின் முறை வந்தது. அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? ஆகவே அவன் ஏராளமான இலை தழைகளை ஒடித்து வந்து, "ஆசை தீரச் சாப்பிடு!" என்று சொல்லி ஆட்டிற்குப் போட்டான்.

"வஞ்சனை யின்றி மேய்ந்துவிட்டேன் — இனிக்
கொஞ்சங் கூட முடியாது!"

என்றது ஆடு. எனவே அவன் ஆட்டை ஓட்டிச் சென்று வீட்டில் கட்டினான்.

"மகனே, ஆட்டை மேய்த்தாயா?" அப்பா கேட்டார்.

"வஞ்சனை யின்றி நம் ஆடு
வயிறு நிறைய மேய்ந்ததுவே!"

என்றான்.

அப்பாவுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. அவர் ஆட்டிடம் போனார். "ஆடே, ஆடே, மேய்ந்தாயா?" என்று கேட்டார்.

"கொஞ்சங் கூட மேயவில்லை — நான்
கொஞ்சங் கூட மேயவில்லை!"

என்று ஆடு வழக்கமான பதிலை அளித்தது.


ஆட்டின் குறும்புத்தனம் அப்பாவுக்குப் புரியவில்லை. "சே! என்ன மோசமான பிள்ளைகள்! பொய்யும் புரட்டும் சொல்லி மூவருமே என்னை ஏமாற்றிவிட்டனரே! இந்த மாதிரிப் பிள்ளைகளை வீட்டிலேயே வைத்துக் கொள்ளக்கூடாது!" என்று ஆத்திரத்தோடு பேசிக் கொண்டே அப்பா மூன்றாம் மகனையும் கெஜக் கோலால் அடித்து விரட்டினார்.

அதற்குப் பிறகு வயது முதிர்ந்த அந்தத் தையற்காரரும், ஆடும்தான் வீட்டில் பாக்கி இருந்தனர். அடுத்த நாள் காலையில் அவர் ஆட்டை அன்போடு தடவிக் கொடுத்தார். "நான் உன்னைப் புல் தரைக்கு அழைத்துப் போகிறேன். இன்றைக்காவது வயிறாரச் சாப்பிடு!" என்று கொஞ்சிக் கொண்டே அவர் ஆட்டை மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றார். ஆடு நன்றாக மேய்ந்தது.

மாலை ஆனதும் தையற்காரர், "ஆடே, ஆடே, மேய்ந்தாயா?" என்று கேட்டார்.

"வஞ்சனை யின்றி மேய்ந்துவிட்டேன் — இனிக்
கொஞ்சங் கூட முடியாது!"

என்று ஆடு பதிலளித்தது.



ஆகவே, அதை வீட்டிற்கு ஓட்டிச் சென்று, கட்டிப் போட்டார். பிறகு வீட்டின் உள்ளே நுழைவதற்கு முன்னால் அவர் திரும்பிப் பார்த்து, "இன்றைக்காவது உனக்குத் திருப்தியாகத் தீனி கிடைத்ததா?" என்று ஆட்டிடம் கேட்டார்.

ஆடு கொஞ்சங் கூடத் தயங்காமல்,

"கல்லறை வெளியில் அலைந்திட்டேன் — அங்கு
புல்தரை எதுவும் காணவில்லை!
கொஞ்சங் கூட மேயவில்லை — நான்
கொஞ்சங் கூட மேயவில்லை!"

என்று வழக்கமான குறும்புடன் பதிலளித்தது!

அதைக் கேட்ட தையற்காரர் திடுக்கிட்டார். ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றார். வீட்டிலிருந்து பிள்ளைகளைத் துரத்தியது எவ்வளவு அநியாயம் என்று அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. நிதானம் அடைந்ததும் அவர் ஆட்டைப் பார்த்து, "நன்றி கெட்ட ஆடே! உன்னைச் சாதாரணமாகத் துரத்தினால் போதாது. நேர்மையான மக்கள் எதிரில் நீ மீண்டும் தலை காட்ட முடியாதபடி உன்னைச் செய்யப் போகிறேன்! கொஞ்சம் பொறு. வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனார்.

ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு அவர் திரும்பி வந்தார். ஆட்டின் தலையை மழுமழுவென்று நன்றாக மழித்து விட்டார். பிறகு ஒரு தடியை எடுத்து வந்து, ஆத்திரம் தாங்கமாட்டாமல் நையப் புடைத்து விரட்டினார்; வலி தாங்க மாட்டாமல் "அம்.... மே! அம்.....மே!" என்றுகத்திக்கொண்டே அது காட்டை நோக்கி ஓடியது.

தையற்காரரைத் தனிமை வாட்டியது. பிள்ளைகளைக் கொடுமைப் படுத்தி விட்டோமே என்ற எண்ணம் அவரை வாட்டியது. பிள்ளைகளைத் திரும்பவும் அழைப்பதற்காக அவர் தேடி அலைந்தார். ஆனால், அவர்கள் என்ன ஆனார்கள் என்று ஊரில் ஒருவருக்காவது தெரியவில்லை.

முதல் பிள்ளை ஒரு தச்சனிடம் சேர்ந்தான். தொழிலைக் கவனமாகக் கற்றுக் கொண்டான். பயிற்சிக் காலம் முடிந்

தது. "எங்கள் ஊருக்குச் சென்று, தொழில் செய்து நான் பிழைக்க விரும்புகிறேன். விடை கொடுங்கள்!" என்று தச்சனிடம் கேட்டான்.

தச்சன் அவனுக்கு ஒரு மேசையைப் பரிசாக அளித்து வாழ்த்தினன். மரத்தால் செய்யப்பட்ட ஒரு சாதாரண மேசையாகத்தான் அது தோன்றியது. ஆனல், அது ஓர் அதிசய மேசை! ஒருவர் அதன் அருகில் அமர்ந்து, "மேசையே, மேசையே, விருந்து கொடு!" என்று சொன்னல் போதும். உடனே மேசையின் மீது வெள்ளை வெளேரென்று ஒரு புதிய துணி தோன்றும். அதன் மீது தட்டு, கரண்டி, முள் ஆகியவை தோன்றும். அறுசுவை உண்டிகளும், மனங் குளிரும் பானங்களும் அடுத்து வரும்.

"என் ஆயுள் முழுவதற்கும் இது போதும் ஐயா! மிக்க நன்றி!" என்று சொல்லி முதல்பிள்ளை புறப்பட்டான்.

அவன் தன் வீட்டை நோக்கி நடந்தான். காட்டிலும், மேட்டிலும், வயலிலும் வெளியிலும் எந்த இடமாளுலும் அவன் சாப்பாட்டிற்குக் கஷ்டப்படவே இல்லை. வேளா வேளைக்கு மேசையைக் கீழே வைத்தான். அருகில் அமர்ந்து, "மேசையே, மேசையே, விருந்துகொடு!" என்று சொன்ஞன். உடனே அது விருந்து அளித்தது. வயிருரச் சாப்பிட்டான். "அப்பாவின் கோபம் தணிந்திருக்கும். மேலும், இந்த அதிசய மேசையைக் காண்பித்தால், அவர் நிச்சயம் என்னை வரவேற்பார்!" என்று எண்ணிக்கொண்டே அவன் பயணத்தைத் தொடர்ந்தான்.

மாலை நேரம், அவன் ஒரு விடுதியை அடைந்தான். அங்கு ஏராளமான பயணிகள் குழுமி இருந்தனர். அவர்கள் அவனை உற்சாகமாக விருந்துக்கு அழைத்தனர். "உங்களிடமிருந்துநான் சாப்பிடப் போவதில்லை. நீங்கள் தான் இன்று என் விருந்தினராக வர வேண்டும்" என்று அவன் சொன்ஞன். அவன் விளையாட்டாகப் பேசுகிருன் என்று எண்ணி அவர்கள் சிரித்தனர்.

முதல் பிள்ளை அந்த அறையின் மையத்தில்தன் மேசையை வைத்தான். "மேசையே, மேசையே, விருந்து கொடு!" என்று உத்தரவிட்டான். உடனே மேசை மீது, உணவுப் பொருள்கள் குவிந்தன. அவற்றின் நறுமணம் அலை அலையாகக் காற்றில் வந்து மூக்கைத் துளைத்தது. "நண்பர்களே! வாருங்கள்! விருந்தை ஒரு கை பார்க்கலாம்....! உம்....!" என்று அழைத்தான். எல்லோரும் சந்தோஷமாகச் சாப்பிட்டனர். பிறகு இளைப் பாறச் சென்றனர்.



இரவு நேரம். எல்லோரும் உறங்கினர். ஆனல், விடுதியின் உரிமையாளருக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. அவர் அந்த அதிசய மேசையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார். "அது மட்டும் என்னிடம் இருந்தால், எவ்வளவு எளிதில் பணம் சம்பாதிக்கலாம்!" என்று எண்ணினர். பிறகு யாருக்கும் தெரியாமல் அதிசய மேசையை எடுத்துக் கொண்டு, அந்த இடத்தில் அதே மாதிரி இருந்த ஒரு சாதாரண மேசையை வைத்துவிட்டார்.

பொழுது புலர்ந்தது. முதல்

பிள்ளை மேசையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். மேசை மாறிய விஷயம் அவனுக்குத் தெரியாது!

நடுப் பகலில் அவன் தன் சொந்த வீட்டை அடைந்தான். அப்பா அவனை மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்ருர்.

"வா மகனே, வா! நீ எங்கு போயிருந்தாய்? என்ன கற்றுக் கொண்டாய்?" என்று அன்போடு விசாரித்தார்.

"நான் தச்சுத் தொழிலைக் கற்றுக் கொண்டேன். மேலும் ஒரு சிறந்த மேசையைப் பரிசாகப் பெற்று வந்துள்ளேன் அப்பா!" என்ருன்.

"எதற்கும் உதவாத ஒரு பழைய மேசையைப் போல இருக்கிறதே?" அப்பா சந்தேகத்தோடு கேட்டார்.

"இல்லை, அப்பா! இது ஓர் அதிசய மேசை. உத்தரவிட்டால், உடனே இது உணவுப் பண்டங்களைக் கொடுக்கும். நம் உறவினர்களையும் நண்பர்களையும் அழையுங்கள். நல்ல விருந்து வைக்கலாம்!" என்று சொன்னுன்.



அவ்வாறே உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்பட்டனர். மூத்த பிள்ளை மேசையை அறையின் நடுவில் வைத்தான். "மேசையே, மேசையே, "விருந்து கொடு!" என்று ஆணையிட்டான். மேசை மேல் எதுவுமே வரவில்லை. காலியாகவே இருந்தது. தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அவன் உணர்ந்தான். அவனுடைய பேச்சு பொய்யாகியது. அவமானத்தால் குன்றினுன்.

விருந்தினர்களுக்குப் பெரும் ஏமாற்றம். அவர்கள் அவனைக் கேலி செய்து கொண்டே, வெறும் வயிற்ருேடு வீடு திரும்பினர். தையற்காரர் தன் தொழிலைத் தொடர்ந்தார். மகன் உள்ளூரிலேயே ஒரு தச்சனிடம் வேலைக்கு அமர்ந்தான்.

இரண்டாம் பிள்ளை ஒரு முதலாளியைச் சந்தித்தான். அவருடைய மாவு அரைக்கும் ஆலையில் சேர்ந்து பயின்ருன். குறிப்பிட்ட காலம் முடிந்தது. ஊருக்குப் போக அவரிடம் அனுமதி கேட்டான். முதலாளி அவனைப் பாராட்டி, ஒரு கழுதையை அவனுக்குப் பரிசாக அளித்தார்: "இந்தக் கழுதை வண்டி இழுக்காது; பொதி சுமக்காது; ஆனுலும், இது ஓர் அரிய கழுதை!" என்ருர்.

"இதனுல் என்ன உபயோகம்?"

"இதை ஒரு துணியின் மேல் நிற்க வைத்து 'பிரிக்கின் பிரிட்!' என்று சொன்னுல் போதும்; உடனே கழுதையின் வாயிலிருந்து தங்கக் காசுகள் கலகலவென்று கொட்டும்!"

"உண்மையிலேயே இது அரிய பரிசு தான். நன்றி ஐயா!" என்று சொல்லி விட்டு அவன் புறப்பட்டான்.

பணம் தேவைப்பட்டபோதெல்லாம் கழுதையிடம் சென்று 'பிரிக்கின் பிரிட்!' என்று அவன் சொன்னுன். மழையைப் போலத் தங்கக் காசுகளை அது பொழிந்தது. அவற்றை ஒன்று திரட்டிப் பொறுக்கும் வேலை மட்டும்தான் அவனுக்கு இருந்தது. அவன் ஊர் ஊராக உல்லாசமாகச் சுற்றினுன். உயர் மட்ட வாழ்க்கையை அனுபவித்தான்.

ஒருநாள் அவன் தன் அப்பாவை நினைத்துக் கொண்டான். "என்

தங்கக் கழுதையைக் கண்டால், அவருடைய கோபம் எல்லாம் தங்காமல் பறந்து விடும். என்னை அன்போடு ஏற்றுக் கொள்வார்!'' என்று எண்ணிக் கொண்டே, அவன் தன் ஊருக்குப் பயணம் ஆனான்.

அண்ணன் அதிசய மேசையைப் பறிகொடுத்த அதே விடுதியைத் தம்பியும் அடைந்தான். கழுதையை வேறு யாரிடமும் கொடுக்காமல், தானே அதைத் தொழுவத்தில் கட்டிவிட்டு, உள்ளே நுழைந்தான்.

விடுதி உரிமையாளர் அவனுடைய செயல்களைக் கவனித்தார். ''வசதியில்லாதவன்போல் இருக்கிறது!'' என்று முதலில் நினைத்தார். அவன் தன் பையிலிருந்து இரண்டு தங்கக் காசுகளை எடுத்து நீட்டினான். ''நல்ல சாப்பாடு கொண்டு வாருங்கள்! எவ்வளவு பணமானாலும் பரவாயில்லை!'' என்று உத்தரவிட்டான். உரிமையாளருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. உற்சாகத்தோடு அவனை உபசரித்தார். அதற்குரிய கட்டணமாக ஓர் உயர்ந்த தொகையைக் குறிப்பிட்டார்.

இரண்டாம் பிள்ளை தன் சட்டைப் பையில் தேடிப் பார்த்தான். தங்கக் காசுகள் ஏதும் இருக்கவில்லை. பை காலியாக இருந்தது. ''ஒரு விநாடி பொறுங்கள். பணம் கொண்டு வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, மேசைத் துணியை எடுத்துக் கொண்டு தொழுவத்திற்கு விரைந்தான்.

விடுதி உரிமையாளருக்கு அது விந்தையாக இருந்தது. அவரும் அவனைத் தொடர்ந்தார். இரண்டாம் பிள்ளை கழுதை இருந்த தொழுவத்திற்குள் புகுந்து கதவை உட்புறம் தாளிட்டான். தரையில் துணியை விரித்து, ''பிரிக்கின் பிரிட்!'' என்றான். கழுதையின் வாயிலிருந்து காசுகள் கொட்டின. இதை எல்லாம் ஒன்று விடாமல் உரிமையாளர் சாவித் துவாரத்தின் வழியாகக் கவனித்தார். ''காசு சம்பாதிப்பது இவ்வளவு எளிதா? காசு கொட்டும் கழுதை என்னிடமும் இருந்தால்...!'' என்று அவருடைய மனம் எண்ணியது.

இரண்டாம் மகன் தொகையைக் கட்டிவிட்டுத் தூங்கப் போனான். ஆனால், உரிமையாளர் உறங்கவில்லை. நடுநிசியில் தங்கக் கழுதையை ஓட்டிச் சென்றார். அந்த இடத்தில் ஒரு சாதாரணக் கழுதையைக் கட்டி வைத்தார்.

அடுத்த நாள் இரண்டாம் மகன் தொழுவத்திற்குச் சென்றான். அங்கிருந்த கழுதையை ஓட்டிக் கொண்டு தன் ஊரை நோக்கி நடந்தான். வீட்டை அடைந்தான். அப்பா அவனை ஆசையோடு வரவேற்றார்.

''மகனே! இவ்வளவு நாளும் நீ என்ன செய்தாய்?''

''ஓர் ஆலையில் வேலை பயின்றேன் அப்பா. அந்த முதலாளி எனக்கு ஒரு கழுதையைப் பரிசாகக் கொடுத்துள்ளார்.''

''மகனே! ஒரு கழுதையைக் கொண்டு வரவா இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டாய்? அது நம் ஊரிலேயே கிடைக்குமே!''

''இது சாதாரணக் கழுதை இல்லை, அப்பா! பணம் கொழிக்கும் கழுதை! 'பிரிக்கின் பிரிட்!' என்று சொன்னால் போதும். தங்கக் காசுகள் கொட்டும்! உங்கள் நண்பர்களைக் கூப்பிடுங்கள்! அவர்களை எல்லாம் ஒரு நொடியில் பணக்காரர்களாக்கி விடுகிறேன், பாருங்கள்!''

''அப்படியானால் நானும் இந்தத் தையல் தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு இனிமேல் நிம்மதியாக இருப்பேன்!'' என்று சொல்லிக் கொண்டே அப்பா தன் அண்டை அயலாரை அழைத்தார்.

தையற்காரரின் வீட்டில் எல்லோரும் கூடினர். கூட்டத்தின் நடுவில் துணி விரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் மகன் கழுதையை ஓட்டிக் கொண்டு வந்து அதன்மேல் நிறுத்தினான். ''எல்லோரும் இங்கே பாருங்கள்!'' என்று கம்பீரமாகச் சொல்லிக் கொண்டே 'பிரிக்கின் பிரிட்!' என்று கூவினான். தங்கத்தையும் காணவில்லை. காசையும் காணவில்லை. கழுதை மட்டும் வாலை ஆட்டிக் கொண்டு நின்றிருந்தது.

இரண்டாம் மகனின் முகம் சுண்டியது. ''என்னை யாரோ ஏமாற்றி விட்

டார்கள். மன்னியுங்கள்!'' என்று சொன்னான். கூடியிருந்தவர்கள் வெறுங்கையோடு திரும்பினர். தையற்காரர் ஊசி, நூலைத் தேடிப் புறப்பட்டார். இரண்டாம் மகன் ஓர் ஆலையில் தொழிலாளியாகச் சேர்ந்தான்.

மூன்றாம் மகன் மரக்கட்டைகளைக் கடையும் ஒரு பட்டறையில் சேர்ந்தான். தன் சகோதரர்களை விட அதிக நாட்கள் அவன் பணி செய்தான். நீண்ட இடைவெளிக்குப் பின் அவன் வீட்டிற்கு ஒரு கடிதம் எழுதினான். அப்போது மூத்த பிள்ளைகள் வீடு திரும்பியிருந்தனர். அவர்கள் தாங்கள் பெற்ற அரிய பரிசுகளைப் பற்றியும், ஊர் அருகிலிருந்த விடுதியில் அவற்றைப் பறி கொடுத்ததைப் பற்றியும் விவரமாக அவனுக்கு எழுதினர்.

மூன்றாம் பிள்ளையின் பயிற்சிக் காலம் முடிந்தது. பட்டறை உரிமையாளரிடம் விடைபெற்று அவன் தன் ஊருக்குப் புறப்பட்டான். உரிமையாளர் அவனுக்கு ஒரு பையைப் பரிசாக அளித்தார். ''பையின் உள்ளே ஒரு சிறிய கைத்தடி இருக்கிறது!'' என்றார்.

''ஐயா! இந்தப் பை எனக்குப் பயன் படும். ஆனால் கைத்தடி எதற்கு?''

''தம்பி! இது ஒரு மாயக் கைத்தடி. ஆபத்தில் அரிய உதவி செய்யும். உன்னை யாராவது துன்புறுத்தினால், தடியே, தடியே வெளியே வா!'' என்று நீ ஆணையிட்டால் போதும். உடனே அது பையிலிருந்து வெளியே குதிக்கும். உன்னைத் துன்புறுத்தும் அந்த மனிதனை அடி அடியென்று அடித்துக் கீழே சாய்த்துவிடும். நீ மறுபடியும், 'தடியே, தடியே, உள்ளே போ!' என்று சொல்லும் வரை அது ஓயாது.'' என்று விளக்கினார். அவருக்கு நன்றி சொல்லி விட்டு, மூன்றாம் பிள்ளை தன் வீட்டிற்குப் பயணமானான்.

வழியில் சிலர் அவனைத் தாக்க முயன்றனர். ''தடியே, தடியே வெளியே வா!'' என்று உத்தரவிட்டான். உடனே, அது வெளியே குதித்தது. நன்றாகப் புடைத்து அவர்களைப் பணிய வைத்தது. மாலையில் அவன் தன் சகோதரர்கள் குறிப்பிட்ட அந்த விடுதியை அடைந்தான்.

அவன் விடுதியில் இருந்த பயணிகளை நோக்கி, ''விருந்து கொடுக்கும் அதிசய மேசை, அல்லது தங்கக் காசுகளைத் தரும் கழுதை — ஆகியவைகளைப் பற்றி நீங்கள் நிறையக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் அவற்றைவிடச் சிறந்த பொருள் ஒன்று என்னிடம் உள்ளது. இந்தப் பையில் இருக்கிறது...!'' என்று அவன் பெருமையாகப் பேசினான்:

விடுதி உரிமையாளரும் அந்தப் பேச்சைக் கேட்டார். ''ஒருவேளை விலை உயர்ந்த வைரக் கற்கள் இருக்கலாம். அவற்றை எப்படியாவது அடைந்தே தீர வேண்டும்!'' என்று அவர் தீர்மானித்தார்.

மூன்றாம் பிள்ளை தலைக்கு அடியில் தன் பையை வைத்துக் கொண்டு கூடத்தில் படுத்திருந்தான்., நடு இரவு. உரிமையாளர் ஓசைப்படாமல் வந்தார். அந்தப் பையை அப்புறப்படுத்திவிட்டு, வேறொரு பையை அங்கு வைத்தார். கண்ணை மூடிக் கொண்டு தூங்குவதைப் போலப் படுத்திருந்த மூன்றாம் பிள்ளை, ''தடியே, தடியே, வெளியே வா!'' என்று உத்தரவிட்டான்.

லாலா லஜபதிராய் சைமன் கமிஷனைப் புறக்கணித்து நடந்த ஊர்வலத்தில் முக்கியமானவராக இருந்ததால், அவர் போலீஸாரின் பலத்த தடியடிக்கு ஆளானார். அவர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசும் போது, ''என் மேல் விழுந்த ஒவ்வோர் அடியும் ஆங்கில ஆதிபத்தியத்தின் சவப்பெட்டி அடிக்கப்பட்ட ஆணியாகும்'' என்று முழங்கினார்.

— ஆர். கோபிநாதன் (10,732),
பெரியகுளம்.






கைத்தடி உடனே வெளியே வந்து தன் பணியைத் தொடங்கியது. அடி பட்ட உரிமையாளர் வலி தாங்க முடியாமல், ''ஐயோ! அப்பா!'' என்று கதறினார். ''தம்பீ! இனிமேல் என் உடம்பு தாங்காது. கொஞ்சம் கருணை காட்டப்பா. தயவு செய்து முதலில் இதைநிறுத்து. உனக்குஎன்னவேண்டு மானாலும் தருகிறேன்!'' என்று கதறினார்.

''நீ களவாடிய அதிசய மேசையையும், தங்கக் கழுதையையும் திருப்பிக் கொடுத்துவிடு. இனிமேல் யாரையும் ஏமாற்றாதே. ஒழுங்காக இரு. நியாயப் படி உனக்குப் பெரிய தண்டனை யாகத் தரவேண்டும். இருந்தாலும், இரக்கம் காரணமாக உன்னை இத்துடன் விட்டுவிடுகிறேன்!'' என்று எச்சரித்துவிட்டு, ''தடியே, தடியே, உள்ளே போ!'' என்று கூறினான்.

மேசையைத் தலையிலே வைத்துக் கொண்டு கழுதையைக் கையில் பிடித்துக் கொண்டு மூன்றாம் பிள்ளை மறு நாள் தன் சொந்த வீடு சேர்ந்தான். அப்பா அவனை இன்முகத்தோடு வரவேற்றார். அவனுடைய அனுபவங்களை அன்போடு விசாரித்தார். பட்டறைப் பயிற்சியைப் பற்றியும், அங்கு பரிசாகக் கிடைத்த மாயக் கைத்தடியைப் பற்றியும் அவன் கூறினான்.

பிறகு கைத்தடியின் உதவியால் அண்ணன்களின் பரிசுகளை மீட்டு வந்த செய்தியையும் விவரித்தான். அதிசய மேசையையும், தங்கக் கழுதையையும் தன் சகோதரர்களிடம் ஒப்படைத்தான்.


அடுத்த நாள் தையறகாரர் ஒரு விருந்து வைத்தார். சுற்றத்தினரையும் நண்பர்களையும் அழைத்தார். ஒரு பெரிய கூட்டமே விருந்துக்கு வந்திருந்தது. இரண்டாம் பிள்ளை ''பிரிக்கின் பிரிட்'' என்றதும் கழுதை தங்கக் காசுகளைப் பொழிந்தது. விருந்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய தங்கக் காசுகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டனர். முதல் பிள்ளை அதிசய மேசையை நோக்கி, ''மேசையே, மேசையே, விருந்து கொடு!'' என்றான். மேசை அறுசுவை விருந்தை அளித்தது. அன்று முதல் அப்பாவும், பிள்ளைகளும் சந்தோஷமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தனர்.



அக்பர் இளைஞராக இருந்தபோது ஒரு சமயம் வேட்டையாடச் சென்று, பரிவாரங்களைப் பிரிந்து வெகு தூரம் வந்து விட....
தாகம்... நாக்கு வறண்டு விட்டது... தலை சுற்றுகிறது...
அப்போது காட்டுப் பாதையில் விறகுச் சுமையுடன் ஒரு சிறுவன்...
குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?
ஒரு குளம் இருக்குமிடத்துக்கு அழைத்துப் போனான் சிறுவன்...
தாகம் தணிந்ததா?
சக்கரவர்த்தி அக்பரும் புத்திசாலி பீர்பாலும்
கதை: ஆனந்தி படம்: விஜய
இதற்குள் பரிவாரங்கள் அக்பரைத் தேடிப் பிடித்து விட்டன...
மோதிரத்தைக் கழற்றித் தந்தான் அக்பர்.
அப்பனே, உயிர் கொடுத்தாய்! இந்தா, இதை வைத்துக் கொள்!
போய் வருகிறேன்.
வணக்கம் ஐயா!



வெகு காலம் சென்று.... அச்சிறுவனின் மாமா...
மகேஷ்! இப்போது நீ வளர்ந்து விட்டாய். ஆக்ராவுக்குப் போய், அக்பர் பாதுஷாவைப் பார்த்து ஏதேனும் வேலை கேட்கலாமே...
மகேஷ் அவ்வாறே செய்தான்...
அடேயப்பா! எவ்வளவு பெரிய நகரம்!
அரண்மனை வாசலில்...
அக்பர் பாதுஷாவைப் பார்க்க மகேஷ் வந்திருக்கிறேன்.
நீ என்ன பெரிய சக்கரவர்த்தியா, அக்பர் உன்னை எதிர்கொண்டழைக்க...? போ! போ!
மகேஷ் தன்னிடமிருந்த முத்திரை மோதிரத்தைக் காட்ட...
மன்னிக்க வேண்டும்... அறியாமல் பேசி விட்டேன்!
மகேஷுக்கு தர்பாரை நெருங்க அனுமதி கிடைத்தது. ஓரமாய் நின்று கவனித்தான்.
அற்புதமான அரண்மனை! ராஜ தர்பார்தான் எவ்வளவு கலகலப்பாய் இருக்கிறது!


அக்பர் கேட்டார்:
புலவர்களே! அமைச்சர்களே! சேனாத்தலைவர்களே! எனக்கொரு சந்தேகம். பூக்களில் சிறந்தது எது?
தாமரை!
ரோஜா!
மல்லிகை!
செண்பகம்!
மகேஷ் உரக்கச் சிரித்து....
நீங்கள் சொல்வதெல்லாம் தப்பு! பருத்திப் பூதான் மலர்களில் உயர்ந்தது!
அக்பர் அதிசயித்து...
யார் இந்த இளைஞன்? தைரியமாகப் பேசுகிறானே?
மகாராஜா! பல ஆண்டுகளுக்கு முன் நீங்கள் தாகத்தால் தவித்தபோது...
பாதுஷா அக்பர் சந்தேகத்துடன்....
அவன்தான் நீ என்று எப்படி நம்புவது?
இதோ நீங்கள் எனக்களித்த பரிசு!


அக்பர் மனமகிழ்ந்தார். இளைஞனை மேலும் சோதித்தார்...
அது சரிதான்; ஆனால் மலர்களில் பருத்திப் பூ சிறந்தது என்கிறாயே எப்படி?
பலமலர்கள் மணம் பரப்பி மகிழ்விக்கின்றன; வேறு பல, காயாகி பழமாகி பசி தீர்க்கின்றன. ஆனால் பருத்திப் பூ மட்டுமே மானம் காக்க ஆடை அளிக்கிறது!
ஆகா! பிரமாதமான விளக்கம்!
அச்சா!
பலே!
இளைஞனே! நீ புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய். உன்னை பீர்பால் என்று அழைக்கிறேன்.
அரசனின் ஆதரவு பெற்ற பீர்பால், அரண்மனைக்கு வரும் அறிஞர்களிடம் படித்து சிறந்த கல்விமான் ஆனான். பல விஷயங்களைக் கண்டும் கேட்டும் அனுபவம் பெற்றான். மன்னனுக்கு மந்திரியாகவும் நண்பனாகவும் விளங்கினான்.
ஒரு நாள் அக்பரிடம் ஒரு வழக்கு வந்தது.
என் பெயர் அலி. இந்த இப்ராஹிம், என் வீட்டுக்கு உணவருந்த வந்தான். திரும்பும்போது உயர்ந்த ரத்தினம் ஒன்றைத் திருடிச் சென்று விட்டான்!




இப்ராஹிம் எதிர் வழக்காடினான்...
அலி வீட்டில் நான் உணவருந்தினேன்; ஆனால் ரத்தினம் எதையும் பார்க்கவில்லை.
பீர்பால்! இந்த வழக்கைத் தீர்த்து வை!
பீர்பால் அலியை விசாரித்தான்...
உன்னிடம் உயர்ந்த ரத்தினம் இருந்தது என்பதற்குச் சாட்சியம் உண்டா?
நீங்கள் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்து ஒன்றுக்கு நாலாகச் சாட்சிகளை அழைத்து வந்திருக்கிறேன்.
ஏழைகளான ஒரு நாவிதன், தையல்காரன், தச்சன், உழவன் ஆகியோரைப் பணம் தந்து பொய்ச் சாட்சி கூறத் தயார்ப்படுத்தியிருந்தான் அலி.
பீர்பால் அந்த எளியோரிடம்...
நீங்கள் நால்வரும் அலியுடைய ரத்தினத்தைப் பார்த்தீர்களா?
பார்த்தோம்; பெட்டியிலிருந்து எங்களுக்கு அலி எடுத்துக் காட்டினார்!
பீர்பால் காவலரை அழைத்து...
நால்வரையும் தனித்தனி அறையில் வைத்துப் பூட்டுங்கள்!
பீர்பால்! என்ன இது?


பீர்பால் பணிவுடன்...
மன்னவா! நாளைக் காலை வரை எனக்கு அவகாசம் கொடுங்கள். உண்மை வெளிவரும்!
பூட்டி வைக்கப்பட்ட நால்வருக்கும் உணவளித்த காவலர்கள் ஒரே மாதிரி பேசினார்கள்...
இந்தக் களிமண் உருண்டையைப் பயன்படுத்தி நீ பார்த்த ரத்தினம் எப்படி இருந்தது என்று செய்து காட்டு! பீர்பால் உத்தரவு!
மறுநாள் காலை, மன்னனும் பீர்பாலும் அந்த நால்வரையும் காண வந்தார்கள். பூட்டுக்கள் திறக்கப்பட்டதும்....
நான் பார்த்த அந்த உயர்ந்த ரத்தினம் இந்த வடிவில் தான் இருந்தது...
தச்சன் ரம்பம் வடிவத்தையும், தையல்காரன் ஊசி வடிவத்தையும், உழவன் ஏர்முனை வடிவத்தையும், நாவிதன் கத்தி வடிவத்தையும் களிமண்ணில் உருவாக்கியிருந்தனர்!
பார்த்தீர்களா மகாராஜா! இவர்களில் யாருமே ரத்தினத்தைக் கண்ணால் கண்டதில்லை!
பாவம், அப்பாவித் தொழிலாளர்கள். தங்களுக்கு ரத்தினம் போல் உயர்ந்த பொருள் எதுவோ அதைக் களிமண்ணில் வடித்தார்கள்.


அக்பர் பீர்பாலைத் தட்டிக் கொடுத்தார்.
பீர்பால்! இவர்களுக்குப் பொய்சாட்சி சொல்லக் கூடாது என்று புத்திமதி கூறி அனுப்பு...
அலிக்குத் தண்டனை வழங்கினார் அக்பர்...
பொய் வழக்காடியது, இப்ராஹிம் மீது அபாண்டமாகப் பழி சுமத்தியது, பொய் சாட்சி களைத் தயார் செய்தது ஆகிய எல்லாக் குற்றங்களையும் செய்திருக்கும் அலிக்கு ஐந்து வருஷம் கடுங் காவல் தண்டனை!
அக்பர், அடிக்கடி மாறு வேடத்தில் ஊரைச் சுற்றி வந்தார். 'தனியே போக வேண்டாம்' என்று பீர்பால் தடுத்தும் கேட்க வில்லை. ஒரு நாள் இரவு...
யாரோ பின்தொடர்வது போலிருக்கிறதே...
அக்பர் நின்று...
யாரடா நீ? எதற்கு என்னைப் பின்தொடர் கிறாய்?
நீ யார் கேட்க? இது உன் பாட்டன் தெருவா?
அக்பர் கோபமடைந்து...
நான் யார் தெரியுமா? அக்பர் பாதுஷா!
அப்படியா! இதை நான் நம்ப வேண்டுமா? ஹ ஹா ஹா!


அக்பர் ஆத்திரத்துடன்...
இதோ பார், முத்திரை மோதிரம்!
அந்த ஆள் சட்டென்று முத்திரை மோதிரத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான்.
திருடன்! திருடன்! பிடியுங்கள்!
வழிப்போக்கர்களில் சிலர், திருடனைத் துரத்திப் பிடித்துக் கொண்டு வர, திருடன்...
முட்டாள்களா! நான் அக்பர் சக்கரவர்த்தி! மாறு வேஷத்தில் நகர் வலம் வந்தேன். இதோ பாருங்கள், முத்திரை மோதிரம்! இதை என்னிடமிருந்து இவன் பிடுங்கப் பார்த்தான்!
வழிப்போக்கர் திருடனை விட்டு விட்டு அக்பரை நையப் புடைக்க, திருடன் கருணை காட்டினான்!
திருட்டுப் பயலே!
மன்னரிடமே வேலை காட்டுறையா?
பிழைத்துப் போகட்டும், விட்டு விடுங்கள்!


உடல் வலியாலும் அவமானத்தாலும் குன்றிப் போய், அரண்மனையை அடைந்த அக்பர்...
பீர்பால் சொன்னதைக் கேட்காமல் தனியே சென்று முத்திரை மோதிரத்தையும் பறி கொடுத்தேனே!
அப்போது ஒரு பணியாள் பட்டுத் துணியால் மூடிய ஒரு தட்டை மன்னன் முன் வைத்து...
பீர்பால் அனுப்பினார்... 'முக்கிய விஷயம்' என்றார்.
சேவகன் அப்பால் சென்றதும் அக்பர் பட்டுத் துணியை விலக்க, முத்திரை மோதிரமும் ஓலையும் இருந்தன... படித்தான்...
இனியேனும் தனியே போவதைத் தவிர்க்கவும்...
...பீர்பால்! முத்திரை மோதிரத்தை என்னிடமிருந்து பறித்தது நீதானா? பொல்லாத ஆளப்பா நீ!
முகமது ஓர் ஏழை. அவனை 'துரதிர்ஷ்டம் பிடித்தவன்' என்று மக்கள் கருதினார்கள்.
நான் என்ன பாவம் செய்தேன்? மக்கள் என்னை ஒதுக்குகிறார்கள். மன்னனிடம் நாளைக் காலை முறையிடுகிறேன்....
அதிகாலையில் அக்பர் அரண்மனை வாசலுக்கு வந்தான்....
சே! சூரியோதயம் காண வந்தால் இந்தத் தரித்திரன் முகத்தில் விழிக்க நேர்ந்ததே!



மகாராணிக்கு உடம்பு சரியில்லை என்று செய்தி வர, அவளைப் பார்க்கப் போனான் அக்பர்... அப்போது......
எப்படி இருக்கிறது?
தேவலை!
மகாராஜா! சித்தூரில் கலகம்......
சித்தூர் கலகம் பற்றி நாள் முழுவதும் மந்திராலோசனை நடந்தது...
ராணிக்கு ஜுரம்; எனக்குப் பசி; சித்தூரில் கலகம்... ஹூம்...
பட்டினி கிடந்ததால், மாலையில் மன்னருக்கு வயிற்றை என்னவோ செய்ய, வைத்தியர்....
பித்த நாடி ஓடுகிறது... இரவு உணவைத் தவிர்த்து விடுங்கள்!
அக்பர் சோர்ந்து போய், அதனால் கோபமுற்று...
எல்லாம் அந்தப் பாவி முகத்தில் விழித்ததுதான் காரணம்... யார் அங்கே! முகமதுவை இழுத்துப்போய் சிரச்சேதம் செய்து விடுங்கள்!
செய்தி பீர்பாலுக்கு எட்ட...
நான் சொல்கிறபடி செய். நீ தப்பிக்கலாம்....


மரண தண்டனை நிறைவேறுமுன் காவலன்...
முகமது! உனக்குக் கடைசி விருப்பம் ஏதும் இருந்தால் சொல்!
ஒரே ஒரு தடவை பாதுஷா முகத்தைப் பார்த்து விட்டுச் சாகிறேன்!
கடைசி விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அக்பர் வந்து சேர்ந்தான்....
சக்கரவர்த்தி! நேற்று என் முகத்தில் விழித்ததால் உங்களுக்கு உணவு கிடைக்காமல் போயிற்று; ஆனால் உங்கள் முகத்தில் விழித்த எனக்குக் கிடைத்ததோ மரண தண்டனை!
மன்னன் திடுக்கிட்டான்...
அடேய்! உனக்கு யார் இப்படி பேச கற்றுக் கொடுத்தது? உண்மையைக் கூறினால் விடுதலை!
பீர்பால்!
அக்பர் மகிழ்ந்து பீர்பாலுக்கும் முகமதுவுக்கும் பரிசுகள் தந்தார்.
ஒரு சமயம் பீர்பாலைக் காண சில கிராமவாசிகள் வந்தனர்...
மன்னர் வேட்டையாடினால் எங்கள் கிராமங்கள் பாழாகின்றன...
அதெப்படி?


கிராமவாசிகள் விளக்கினார்கள்...
பரிவாரத்தினருக்கு நாங்கள் உணவு சமைத்துப் போட வேண்டியிருக்கிறது...
வயல்களின் குறுக்கே யானைகள், குதிரைகள் சென்று பயிர் நாசமாகிறது....
அடுத்த முறை அக்பர் வேட்டையாடப் போனபோது பிற்பகல் உணவுக்குப்பின் சிறிது ஓய்வெடுத்தார்....
பீர்பால்! நீதான் மகா புத்திசாலி யாயிற்றே... அந்த ஆந்தைகள் என்ன பேசிக் கொள்கின்றன? சொல் பார்ப்போம்!
பீர்பால் ஆந்தைகளை உற்றுக் கவனித்துக் கற்பனையை ஓட விட்டான்.
என் பிள்ளைக்கு உன் பெண்ணை மனைவியாக்கிக் கொள்ளணும்னா சீதனமாக இருபத்தைந்து பாழ்பட்ட வயல்கள் தரணும்!
பூ! இதென்ன பிரமாதம்! இன்னும் இரண்டே நாளில் முப்பத்தைந்து பாழ்பட்ட வயல்கள் கிடைக்கும்! அக்பர் வேட்டைக்கு வந்திருக்கிறார்!
அக்பர் கிண்டலாக....
என்ன பீர்பால்! ஆந்தைகளின் பேச்சு புரிகிறதா?
ஓ!



பீர்பால் ஆந்தைகளின் உரையாடலைக் கூற...
பீர்பால்! என் ஆட்சியில் நடக்கும் ஒரு தவறை எவ்வளவு நயமாகச் சுட்டிக் காட்டுகிறாய்! இனி விவசாயிகளுக்குத் துன்பமே நேராது!
அக்பருடைய அரண்மனைச் சேவகன் ஒருவன் லஞ்சம் வாங்குவதாகப் பீர்பாலுக்குத் தெரிய வந்தது...
ஸலீமைக் கண்காணித்து உண்மையை அறிய வேண்டும்...
ஒரு நாள்...
பரம ரசிகரான அக்பருக்கு என் கவிதைகளைப் படித்துக் காட்ட வந்தேன்...
அதற்குப் பத்து பொற்காசுகள் தரணுமே!
ஐயா, நான் ஏழை!
அப்படியானால் நீ திரும்பிப் போகும் போது அரசர் தரும் சன்மானத்தில் பாதியை எனக்குத் தந்து விட வேண்டும்!
ஒப்புக் கொண்டு ராஜ சபையை அடைந்தார் புலவர்...
புலவரே! அற்புதமான கவிதை பாடினீர்கள். உங்களுக்கு என்ன சன்மானம் வேண்டுமோ, கேளுங்கள்!
பாதுஷா! எனக்கு நூறு கசையடிகள் கொடுங்கள்! அதில் சரிபாதியை முதலில் உங்கள் தர்பார் வாசலில் நிற்கும் காவலன் ஸலீமுக்குக் கொடுங்கள்!



... எனக்குக் கிடைக்கும் சன்மானத்தில் பாதியைத் தனக்குத் தந்துவிட வேண்டும் என்று நிபந்தனையின் பேரில் தான் என்னை உள்ளே அனுப்பியிருக்கிறான் ஸலீம்!
அக்பர் உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டு...
பீர்பால்!
ஆம், மன்னவா! எப்படி கண்டு பிடித்தீர்கள்?
புலவர் வேஷம் கலைந்தான் பீர்பால்...
உன்னைத் தவிர வேறு யாரும் இவ்வளவு சாமர்த்தியமாகப் பேச முடியாது! அழகான கவிதையும் கூறியிருக்க முடியாது! அது சரி...
...ஸலீமுக்குக் கசையடி தர வேண்டும் தான்; ஆனால் ஒப்பந்தப்படி உனக்கும் மறுபாதியைத் தர வேண்டியிருக்குமே? அது நியாயமாகுமா?
அரண்மனையில் லஞ்ச ஊழல் இருக்கிறது என்றால், மந்திரியுடைய கவனக்குறைவுதான் காரணம். எனவே நானும் தண்டனைக்குரியவன்தான்!
ஆஹா!
ஆஹா!


பீர்பாலுடைய பதிலில் அவனுடைய நேர்மையைக் கண்ட அக்பர், அவனுக்கு மேலும் நெருங்கியவரானார். அதனால் பிறரிடம் பொறாமை வளர்ந்தது.
நாவிதரே! பீர்பாலை ஒழித்து விட்டால் உனக்கு லட்சம் பொன் தருகிறேன்!
நாவிதர் அக்பருக்குச் சிகை அலங்காரம் செய்யும் போது...
என்ன வருத்தமாய் இருக்கிறாய்?
தங்கள் தந்தை மறு உலகில் எப்படி இருக்கிறாரோ, நினைத்தால் கவலையாக இருக்கிறது...
..யாரையாவது அனுப்பி, பார்த்து வரச் செய்யலாம்...
எனக்குத் தெரிந்த மந்திரவாதி அக்னி வளர்த்துத் தூதனை அனுப்புவான். ஆனால் தேவலோகம் செல்லத் தகுதியுடைய மாமேதையாக இருக்க வேண்டும் அந்தத் தூதன்!....
அது எப்படி சாத்தியம்?
..ஏன் பீர்பாலையே கூட அனுப்பலாமே!
அப்படியே ஆகட்டும்...
பீர்பால் இந்த நெருக்கடியை எப்படி சமாளிக்கிறான், பார்ப்போம்!


அரண்மனை வாசலில் சிதை அடுக்கப்பட்டு, மையத்தில் நின்றான் பீர்பால்.
போய் வருகிறேன்!
ஹ்ரீம், ஹ்ராம், ஹ்ராயா, ஹோய்!
தொலைந்தான் பீர்பால்!
ஈரவிறகானதாலும், நிறைய சாம்பிராணி போட்டதாலும் எங்கும் புகை சூழ....
இது தான் சமயம்; இந்தச் சிதையின் மையத்தில் ரகசியக் கதவு அமைத்திருக்கிறேன். அதைத் திறந்து, சுரங்கப் பாதை மூலம் தப்பி விடலாம்!
இரண்டு மாதங்கள் சென்றன...
பீர்பால் இன்னும் திரும்பவில்லையே, நான் செய்தது தவறோ?
உங்கள் தந்தை இருக்குமிடத்துக்கு அவரை நீங்கள் அனுப்பியதில் என்ன குற்றம்?
அப்போது பீர்பால் வர...
வாப்பா, வா! என் தந்தை சுகமா?
சௌக்கியமாய் இருக்கிறார். ஆனால் தாடிதான் தரையில் புரளுமளவு வளர்ந்து விட்டது... நமது நாவிதரை அனுப்பி வைக்கச் சொன்னார்!
நாவிதர் மிரண்டு போய் மன்னிப்புக் கோர...
உன்னைத் தூண்டி விட்டவர்கள் யார்?
உண்மையைச் சொன்னால் உன்னைப் பாதுஷா மன்னிப்பார்!



மந்திரப் பென்சில்!

எம்.பி.ராஜசேகர்

மாலை மணி ஐந்து. அவிழ்ந்த மூட்டையிலிருந்து நெல்லிக்காய்கள் சிதறி ஓடுவதுபோல, பள்ளி முடிந்து மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். ஆனால், ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் சுந்தரராஜன் மட்டும் வகுப்பறையில் பெஞ்சுக்கடியில் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

அப்போது அந்தப் பக்கமாக வந்த பள்ளித் தலைமை ஆசிரியர் ராதா கிருஷ்ணன், சுந்தரராஜன் எதையோ தேடிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். அவன் அருகே வந்து, ''என்ன சுந்தரராஜன், எதைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

தலைமை ஆசிரியரைப் பார்த்த அவன் கண்களில் கண்ணீர் வழிய அழ ஆரம்பித்துவிட்டான். இதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்பதை ஊகித்த தலைமை ஆசிரியர், ''சுந்தரராஜன், அழாதே! விஷயம் எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லு! முடிந்த அளவு நான் உனக்கு உதவி செய்கிறேன். பயப்படாதே!'' என்று ஆறுதல் கூறினார்.

தலைமை ஆசிரியர் கூறியதைக் கேட்ட சுந்தரராஜன் தயங்கித் தயங்கி ''சார், என்னோட பென்சிலைக் காணவில்லை சார். அது சாதாரணப் பென்சில் இல்லை. எங்கள் மாமா எனக்காக சிங்கப்பூரிலிருந்து வாங்கி வந்தது. நல்ல நீளமான பென்சில். என்னுடைய கால் சட்டைப் பையில் தான் வைச்சிருந்தேன். யாரோ அதைத் திருடிட்டாங்க. அது இல்லாம வீட்டுக்குப் போனா, எங்க அப்பா என்னை அடி அடின்னு அடிப்பாரு சார்.'' என்றான்.

நிலைமையைப் புரிந்து கொண்ட தலைமை ஆசிரியர், ''சரி... சரி.... எனக்கும் இந்த வகுப்பில் அடிக்கடி திருட்டு நடக்குதுன்னு ரிப்போர்ட் வந்திருக்கு. நான் விசாரிக்கிறேன். நீ வீட்டுக்குப் போ. உங்க அப்பா கேட்டால் பென்சில் நாளை கிடைச்சிடும்னு சொல்லு. நான் எப்படியும் நாளைக்கு அந்தப் பென்சிலைத் திருடினவன்கிட்ட இருந்து வாங்கிக் கொடுத்துடறேன்'' என்று தலைமை ஆசிரியர் சுந்தரராஜனைப் பார்த்துக் கூறினார். சுந்தரராஜனும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வகுப்பை விட்டு வெளியேறினான்.


மறுநாள் காலை. பள்ளிக்கூடம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. சுந்தரராஜன் படிக்கும் ஒன்பதாம் வகுப்புக்கு, தலைமை ஆசிரியரிடமிருந்து ஓர் அறிவிப்புக் கடிதம் வந்தது. அதை வகுப்பாசிரியர் படித்துவிட்டு, மாணவர்களைப் பார்த்து, ''இந்த வகுப்பு முடிந்ததும் யாரும்

வெளியில் போகக் கூடாது. தலைமை ஆசிரியர் வரப் போகிறார்" என்றதுமே வகுப்பில் சலசலப்பு எழுந்தது. வகுப்பு முடிந்ததும் பள்ளி மணி அடித்து ஓய்ந்தது. மாணவர்கள் தலைமை ஆசிரியர் வரவுக்காகப் பரபரப்புடன் காத்திருந்தார்கள். தலைமை ஆசிரியர் மீது பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் ஒருவித மரியாதை இருந்ததால், வகுப்பில் பூரண அமைதி நிலவியது. தலைமை ஆசிரியர் மிகவும் நேர்மையானவர். அன்புள்ளம் கொண்டவர். தவறு செய்பவர்களையும் அன்பால் திருத்த வேண்டும் என்பது அவரது கொள்கை. ஒருவனது நல்ல குணங்களைப் பலர் அறியப் பாராட்டுவார். தவறுகளைத் தனியாக அழைத்துப் பேசித் திருத்துவார். அதனால் பள்ளியில் மட்டுமன்றி அந்த வட்டாரத்திலேயே அவருக்கு நல்ல பெயர் இருந்தது.

சில நிமிடங்களில் தலைமை ஆசிரியர் அங்கு வந்து சேர்ந்தார். மாணவர்கள் அனைவரும் எழுந்து மரியாதை செலுத்தினர். தலைமை ஆசிரியர் அனைவரையும் உட்காரச் சொன்னார். பின்பு, வகுப்பைச் சுற்றி நோட்டம் விட்டார். சுந்தரராஜன் வாடிய முகத்துடன் உட்கார்ந்து இருந்தான்.

சில நொடிகளுக்குப் பிறகு தலைமை ஆசிரியர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்: "மாணவர்களே! நம்முடைய பள்ளி உங்களைப் போன்ற நல்ல பிள்ளைகளை மாணவர்களாகக் கொண்ட பள்ளி. இங்கு படித்தவர்கள் பலர் நல்ல பதவிகளில் இருக்கிறார்கள். நீங்களும் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், சில மாணவர்கள் தாங்கள் செய்வது தவறு என்பதை அறியாமலேயே சில தவறுகளைச் செய்து விடுகிறார்கள். அது அவர்களது எதிர்காலத்தையே பாதித்து விடும். ஆனால், அப்படிப் பட்ட மாணவர்களும் நல்வழியில் திருந்திவிட்டால் அவர்களுக்கும் நல்லது, இந்த நாட்டுக்கும் நல்லது. இந்த வகுப்பில் சில பொருள்கள் திருட்டுப் போவதாக எனக்குத் தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. நேற்றுக் கூட சுந்தரராஜனுடைய பென்சில் ஒன்று காணாமல் போய்விட்டது. ஆனால் அது சாதாரணப் பென்சில் இல்லை. அது ஒரு மந்திரப் பென்சில். அவனுடைய மாமா அவனுக்குச் சிங்கப்பூரிலிருந்து வாங்கிப் பரிசாகக் கொடுத்தது. அதை எடுத்தவர்கள் உடனே திருப்பிக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் அது அவர்களுக்கு ஆபத்தாக முடியும். ஆமாம்! சுந்தரராஜனிடமிருந்து அந்தப் பென்சிலை யாராவது எடுத்திருந்தால், எடுத்த மூன்றும் நாள் இரவு அந்தப் பென்சில் பறந்து வந்து எடுத்தவன் தூங்கும் போது வயிற்றைக் கீறிக் கிழித்து விடும் சக்தி உள்ளது. இந்த விஷயத்தை அவனுடைய மாமா போன முறை இங்கு வந்திருந்த போது என்னிடம் மட்டும் தனியாகக் கூறினார். அதனால், அதை எடுத்தவர்கள் இன்று சாயந்திரத்திற்குள் என்னிடம் திரும்பக் கொண்டு வந்து கொடுத்து விடுங்கள். அப்படிக் கொடுப்பவர்களுக்கு நான் எந்தவிதத் தண்டனையும் கொடுக்க மாட்டேன். திருடியது யார் என்பதையும் யாரிடமும் சொல்ல மாட்டேன். இப்போது வகுப்பு கலையலாம்" என்று கூறிவிட்டு வகுப்பை விட்டு வெளியேறினார். மாணவர்கள் எல்லோரும் சுந்தரராஜனைச் சூழ்ந்து கொண்டார்கள். மந்திரப் பென்சிலைப் பற்றிக் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். அவன் எல்லாவற்றிற்கும், "ஆமாம்" என்பது போலத் தலையை ஆட்டி வைத்தான்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு பள்ளி வகுப்புகள் தொடங்கின. அப்போது தலைமை ஆசிரியர் எதிர்பார்த்தது போலவே முரளி அவரது அறைக்குள் தயங்கியபடி வந்தான். அவனது முகம் பயம் கலந்த வருத்தத்துடன் இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே உள்ளே வந்த அவன், 'தடால்' என்று தலைமை ஆசிரியர் காலில் விழுந்தான். "சார், இதோ சுந்தரராஜனோட பென்சில். இதை நான்தான் எடுத்தேன். என்னை மன்னிச்சிடுங்க. நான் விளையாட்டாகத் திருட ஆரம்பிச்




சேன். அப்படியே தொடர்ந்து பல திருட்டுக்களைச் செய்தேன். இன்னிக்குக் காலையில் நீங்க சொன்னதைக் கேட்டுத் திருந்திட்டேன். இனிமேல் திருட மாட்டேன். எதிர்காலத்தில் நல்லவன்னு பேர் எடுப்பேன். இனிமேல் இந்தப் பென்சில் என்னை ஒண்ணும் செய்யாதில்லே சார்?'' என்று கூறி அழுதான்.

தலைமை ஆசிரியர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார். ''பயப்படாதே முரளி! அந்தப் பென்சில் உன்னை ஒண்ணும் செய்யாது. இது மந்திரப் பென்சில் இல்லை. சாதாரணப் பென்சில்தான். உன்மேல் சந்தேகப்பட்டுப் பலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள்: அதனால் நீதான் அதை எடுத்திருப்பாய் என்பது என் ஊகம். அதை நேரடியாக உன்னிடம் கேட்டு எல்லோர் முன்னிலையிலும் உன்னை அவமானப்படுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீயே உன் தவறை உணர்ந்து திருந்த வேண்டும் என்பதற்காக அந்தப் பொய்யைச் சொன்னேன். நல்லது விளையும் என்றால் பொய் கூடச் சொல்லலாம் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார் இல்லையா? நீ தைரியமாக வீட்டுக்குப் போ; இரவு நிம்மதியாகத் தூங்கு; இன்று முதல் நீ திருந்தி விட்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு நடந்த விஷயத்தை நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். நீயும் சொல்ல வேண்டாம். இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் நல்லதொரு பிரஜையாக நீ வளர வேண்டும். போய் வா!'' என்று கூறி அவனைத் தேற்றி அனுப்பினார்.

சுந்தரராஜனை அழைத்து, பென்சிலை அவனிடம் கொடுத்தார். அதைத் திருடியது யார் என்பதை யாரிடமும் கூற அவர் மறுத்து விட்டார். அவரது பெருந்தன்மையாலும், அறிவாற்றலாலும் இந்தச் சமுதாயத்தில் ஒரு திருடன் குறைந்து விட்டான், இல்லையா?


அறம் செய விரும்பு!
அறம் செய விரும்பு!
அறம் செய விரும்பு!
அறம் செய விரும்பு!
அறம் செய விரும்பு!
டேய், கொஞ்சம் ரப்பர் இருந்தா கொடுடா!?
ரப்பர் இல்லை!
ப்ளீஸ் கொடுடா!
இல்லை! இல்லை! இல்லை! எத்தனை தரம் சொல்றது!
ஆறுவது சினம்!
ஆறுவது சினம்!
ஆறுவது சினம்!
ஆறுவது சினம்!
ஆறுவது சினம்!
ஆறுவது சினம்!
மாலா-



தெருநாய் திருத்தியது!

எஸ். விஜயா சீனிவாசன்

ராஜு தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனது விளையாட்டுக் கருவியாக இருந்தது ஒரு பூனைக் குட்டி. அதை இஷ்டம் போல் தூக்கிப் போட்டு இம்சை செய்வது தான் அவனது விளையாட்டு. பூனைக் குட்டி வீரிட்டுக் கத்தியபடி அவனிடமிருந்து தப்பிக்க முயன்றது. கீழே விட்டு விட்டு அது ஓடும்போது துரத்திப் பிடித்துத் துன்புறுத்திச் சிரித்தான்.

''டேய் ராஜு, என்ன செய்கிறாய்?'' என்றபடி அங்கே வந்த ராஜுவின் தாய் அங்கு அவன் செய்யும் சேட்டையைக் கண்டு கோபமுற்றவளாய்,

''ஏண்டா, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். பூனையை ஒன்றும் செய்யாதே. வாயில்லா ஜீவனை சித்ரவதை செய்வது மகாப் பாவம்டா'' என்று அதட்டியபடி அவன் கையிலிருந்த பூனையைப் பிடுங்கிக் கீழே விட்டாள். அது குற்றுயிரும் குலை உயிருமாக விட்டால் போதும் என்று வேகமாக ஓடி மறைந்தது.

ராஜு கோபத்துடன், ''என்னம்மா, நீ பூனைக் குட்டியுடன் விளையாடும் போது தொந்தரவு செய்கிறாய்?'' என்று சிணுங்கினான்.

''விளையாடுகிறாயா? கொல்கிறாய்! பிற உயிர்களிடத்தில் அன்பு கொள்ள வேண்டுமென்று உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். உனக்கு ஏன் இந்த புத்தி?''

''போம்மா. அது பூனைதானே! அதுக்கு நீ ஏன் சிபாரிசு செய்கிறாய்?''

''ராஜு, உன்னை அடித்துத் துன்புறுத்தினால் நீ வலிக்கிறது என்று அழுகிறாய். அம்மா அடித்தால் அப்பாவிடம் சொல்கிறாய். அப்பா அடித்தால் அம்மாவிடம் சொல்கிறாய். அந்தப் பூனை தன் வலியை யாரிடம் சொல்ல முடியும். நம்மை நம்பித்தானே நம் வீட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அதை அடிக்கலாமா? பாவம்தானே?''

ராஜு சிரித்தான். அவன் இதுவரை எத்தனையோ பல்லி, அரணை, பட்டாம் பூச்சி, 'வெட்டுக்கிளி போன்ற உயிர்களை இம்சித்துக் கொன்றிருக்கிறான்.

கிளி, புறா, காகம் போன்ற பறவைகளையும் அவன் விட்டு வைக்க மாட்டான். இதனால் அவனை வெறுத்த நண்பர்கள் அவனுடன் சேராமல் ஒதுங்கினர். அவனது தாயாரும்,

தகப்பனாரும் எவ்வளவோ கண்டித்தும் அவன் திருந்தவில்லை.

ஒருதினம் பையில் ஒரு கிளியுடன் வந்தான் ராஜு. பேப்பர் படித்துக் கொண்டிருந்த தந்தை அவனைப் பார்த்துவிட்டார். "டேய் ராஜு, பையில் என்ன கொண்டு வருகிறாய்?" என்று அதட்டினார்.

ராஜு முதலில் பதில் பேசாமல் விழித்தான். ''சொல்லுடா'' கத்தினார் தந்தை. ராஜு திருட்டு விழியுடன் ''கிளிப்பா'' என்றான் மெதுவாக.

ராஜுவின் தந்தை பையைப் பிடுங்கிப் பார்த்தார். அதற்குள் சிறகொடிந்த ஒரு கிளி பரிதாப நிலையில் மயங்கிக் கிடந்தது. தந்தை திடுக்கிட்டார். ''அடப்பாவி! ஏண்டா, எப்படி இதைப் பிடித்தாய்?'' கோபமாக வினவினார்.

''கவண் கல்லால் அடித்தேன். அது கீழே விழும்போது இறக்கை ஒடிந்து விட்டது'' மிகவும் சாதாரணமாகக் கூறினான்.

'பளார்' என்று அவன் கன்னத்தில் அறைந்த அவர், ''உனக்கு ஏண்டா இந்தக் கொடூர புத்தி. பாடத்தில் நீ படித்ததில்லை, புத்தர், காந்தி மகான் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? பிற உயிரை நேசிக்க வேண்டுமடா. அப்போதுதான் கடவுள் நம் மீது அன்பாக இருப்பார். இந்தக் கிளி உனக்கு என்ன தீங்கு செய்தது? ஏன் இப்படி ஈவு இரக்கமின்றி விளையாடுகிறாய்?'' என்று கொதிப்புடன் கூறி முதுகில் நாலு அடி கொடுத்தார். அப்போதும் அவர் ஆத்திரம் தீரவில்லை. ராஜு பதில் பேசாமல் கண்ணீருடன் நின்றான்.

''சீ, என் முன் நிற்காதே. ஒழிந்து போ. ஒரு நாளைக்கு உன் காலை ஒடிக்கிறேன் பார். அப்போதுதான் உனக்குப் புத்தி வரும்'' என்று வெறுப்புடன் திட்டி விட்டு கிளியுடன் மிருக வைத்தியர் வீட்டுக்குக் கிளம்பிவிட்டார். நல்லவேளை கிளி இறக்கவில்லை என்பதே அவருக்கு ஆறுதலாக இருந்தது.

ராஜு அழுதபடி உட்கார்ந்திருந்தான். அங்கே வந்த அவன் தாய், ''ஏண்டா ராஜு, நீ மற்றக் குழந்தைகளைப் போலில்லாமல் துஷ்டனாக இருக்கிறாயே? நான் உனக்கு எத்தனை நல்ல நல்ல கதைகள் சொல்லி இருக்கிறேன். பாரி வள்ளல் முல்லைக் கொடிக்காகத் தன் தங்கத் தேரையே கொடுத்தார்! மயிலுக்குக் குளிரும் என்று 'பேகன்' தன் பொன்னாடையையே மயிலுக்குப் போர்த்தினார்! சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காக்க தன் கால் சதையையே நிறுத்துக் கொடுத்தார்! இவர்கள் அவதரித்த இப்பொன்னாட்டில் பிறந்த நீ மட்டும் ஏன் உயிர்களிடத்தில் அன்பு கொள்ள மாட்டேன் என்கிறாய்?'' என்று பாசத்துடன் வினவினாள்.

''நீ போ, ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் அப்படித்தான் செய்வேன்'' என்றான் முரட்டுத்தனமாக.

''சரி. இந்தச் சாப்பாட்டைச் சாப்பிடு. உனக்கு எப்போ புத்தி வருகிறதோ பார்க்கலாம்'' என்றபடி சாப்பாட்டுத் தட்டை அவன்முன் வைத்தாள்.

''எனக்குச் சாப்பாடும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்'' என்று கோபத்துடன் சாப்பாட்டுத் தட்டை எடுத்து வீசினான். தட்டு பறக்கும் தட்டைப் போல் சுழன்று வாசலில் விழுந்தது. தற்செயலாக அந்தப் பக்கம் வந்த தெரு நாய் ஆவலுடன் அந்தச் சோற்றைத் தின்றுவிட்டு ராஜுவைப் பார்த்து நன்றிப் பெருக்குடன் வாலை ஆட்டிவிட்டுச் சென்றது. ராஜுவின் தாய் கோபம் மிகுந்து, ''சீ, இன்று நீ பட்டினி கிட. அப்பத்தான் புத்தி வரும்'' என்று கூறிவிட்டு சமையலறைக்குச் சென்றாள்.

ராஜு எழுந்தான். சட்டையால் முகத்தைத் துடைத்தபடி வேகமாக வெளியேறினான். கால் போன போக்கில் கோவில் பக்கமாக விரைந்து நடந்தான். மனம் போனபடி நடந்து கொண்டிருந்த ராஜுவின் அருகிலே சைக்கிளில் வந்த ஒருவன் திடீரென்று இறங்கினான்.

''தம்பி, உன்னை உங்கப்பா கூப்பிடுகிறார்'' என்றான்.

''எதற்கு?'' என்றான் ராஜு.

''இதைப் பார்'' என்று ஒரு சீட்டைக் கொடுத்தான்.

சீட்டை வாங்கிப் பார்த்த ராஜுவுக்கு மயக்கமாக இருந்தது. பின் என்ன நடந்தது என்பது அவனுக்கே தெரியாது.

* * * * *

''என்னங்க, சோறு கூடத் தின்னாமல் போன ராஜுவை இன்னும் காணலையே! எங்கேயோ ஓடிப் போயிட்டானா?'' என்று அழும் குரலில் வினவினாள் ராஜுவின் தாய்.


தந்தையும் கவலை கொண்டவராய் மனைவியிடம், ''அவன் அது மாதிரி எல்லாம் ஓடிப்போகும் பிள்ளை இல்லையே. நானும் எல்லா நண்பர்கள் வீட்டிலேயும் விசாரித்துவிட்டேன். எதற்கும் சிறிது நேரம் பார்த்துவிட்டு, போலீஸில் புகார் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்றார் விசனத்துடன்.

அவர் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ராஜு எறிந்த சோற்றைத் தின்றுவிட்டு ஓடிய தெரு நாய் இரைக்க இரைக்க உள்ளே ஓடி வந்து ராஜுவின் தாயைப் பார்த்து ஏதோ சொல்வதுபோலக் குரைத்தது. ராஜுவின் தந்தை, ''இது என்ன வியப்பாக இருக்கு? இந்த நாய் இங்கே ஏன் வந்தது? என்றபடி 'சூச்சூ' என்று விரட்டினார். நாய் ராஜுவின் தந்தையைப் பார்த்து, அவர் வேட்டியைக் கவ்வுவதும் வெளியே ஓடுவதுமாக இருந்தது.

ராஜுவின் தாய்க்கு அப்போதுதான் நினைவு வந்தது. ''அட! இது ராஜு வீசிய சோற்றைத் தின்றுவிட்டு நன்றியுடன் வாலாட்டி விட்டுச் சென்ற தெரு நாய் ஆயிற்றே? இது பதட்டமாகக் குரைத்து நம்மை எங்கேயோ அழைக்கிற மாதிரி இருக்கே!'' என்று கூறினாள். ராஜுவின் தந்தை அதிர்ந்தார்.

''ஓ! இதற்கு ராஜு சோறு போட்டதால் நன்றியுடன் அவனைத் தொடர்ந்திருக்கிறது. கட்டாயம் நம் ராஜுவுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இப்பவே இரண்டு போலீஸ்காரர்கள் துணையுடன் இந்நாயைத் தொடர்கிறேன். நீ கவலைப்படாமல் இரு'' என்றவர் உடனே நாயுடன் வெளியேறினார்.

ராஜு கண் விழித்தபோது தன் வீட்டுக் கட்டிலில் படுத்திருந்தான். அவனைச் சுற்றி அவன் தாய், தந்தை, நண்பர்கள், இரண்டு போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தனர். நாய் வாலைக் குழைத்தபடி ராஜு கண் விழித்த மகிழ்ச்சியில் செல்லக் குரைப்புடன் கட்டிலைச் சுற்றி வந்தது



''அப்பா, அப்பா'' என்றபடி 'ஓ'வென்று அழுதான். ''அப்பா, என்னை ஒருத்தன் பிடித்துக் கொண்டு போய் அடித்துக் கட்டிப் போட்டான். அழுததால் சப்தம் போடாமல் இருக்க வாயையும் கட்டிப் போட்டான்'' என்று விம்மியபடி கூறினான்.

''அழாதே ராஜு, உனக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை. அந்தக் கடத்தல்காரனைப் பிடித்துவிட்டோம். எல்லாவற்றிற்கும் இந்த நாய்தான் காரணம். உன்னை அந்த ஆள் மயக்க நிலையில் சைக்கிளில் வைத்துக் கொண்டு போவதைக் கவனித்த இந்த நாய் உன்னைத் தொடர்ந்து வந்து இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு இங்கு வந்து எங்களை அழைத்து வந்து இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்தது. நீ தெரிந்தோ, தெரியாமலோ கோபத்துடன் வீசிய சோற்றைத் தின்று தன் நன்றிக் கடனை உனக்குச்


செய்துவிட்டது. நீயோ இந்த வாயில்லா ஜீவன்களை எப்படி எல்லாமோ சித்திரவதை செய்கிறாய். இரண்டு மணி நேரம் உன்னைக் கட்டிப் போட்டதற்கே இந்த அழுகை அழுகிறாயே! இந்த ஜீவன்கள் எப்படி அழும்? யாரிடம் தன் கஷ்டத்தைச் சொல்ல முடியும்? சற்று சிந்தித்துப் பார். கிளிகளின் இறக்கைகளை ஒடிக்கிறாய். பூனைக் குட்டியை அடிக்கிறாய். செய்யலாமா?'' என்றார் உருக்கமாக.

ராஜு கண்ணீருடன் தந்தையின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''அப்பா, நான் புரிந்து கொண்டேன். இனி சத்தியமாகப் பிற உயிர்களை, வாயில்லா ஜீவன்களைத் தொல்லைப் படுத்த மாட்டேன். அன்புடன் நடந்து கொள்வேன். என்னை மன்னித்து விடுங்கள். அப்பப்பா! நான் செய்த தவறுகளுக்குச் சரியான தண்டனையைக் கொடுத்துவிட்டார் கடவுள். நான் திருந்திவிட்டேன் அப்பா'' என்று தழுதழுத்த குரலில் கூறியபடி தன்னைக் காப்பாற்றிய நாயை அன்புடன் தடவிக் கொடுத்தான்.

''இந்த நாய் மட்டும் இல்லாவிட்டால் நம் கதி என்னவாகியிருக்கும்?' எனக் கற்பனை செய்த ராஜு உடல் நடுங்கியபடி நன்றிப் பெருக்குடன் நாயை அணைத்துக் கொண்டான்.

ராஜு திருந்திவிட்டான். அவன் பெற்றோர்கள் மகிழ்ந்தனர். தெரு நாய் இப்போது சோபாவில் ஏறி ராஜுவுடன் விளையாடும் வீட்டு நாயாகியது!

ஓவியராகலாம்





வீட்டிலுள்ள மரம் செடி
விளையும் பயிர்கள் யாவையும்
வாட்டும் கோடை வெப்பத்தால்
வருந்தி மண்ணில் காயுது!

பறவை விலங்கு மனிதரும்
பருக நீரும் இன்றியே
வருண பகவான் உம்மையே
'வருக!' என்றே அழைக்கிறார்!

இருக்கும் நீரை மொத்தமாய்
இழுத்துக் குடிக்கச் சூரியன்
வருத்தம் இன்றி வானிலே
வந்து வந்து போகிறான்!

தெப்பக் குளத்தில் நீரின்றி
தீர்ந்து வறண்டு போனதால்
அக்கம் பக்கச் சிறுவர்கள்
ஆடுகின்றார் 'கிரிக்கட்டு.'

குளத்தங் கரையின் ஓரத்தில்
குதித்துத் திரியும் தவளையார்
பிளந்து கிடக்கும் தரையிலே
பெரிதும் துயரில் வாழ்கிறார்!

சாய்ந்து கிடக்கும் மலர்களும்
தரையில் படரும் கொடிகளும்
காய்ந்து போன காட்சியைக்
கண்டு நீயும் மகிழ்வதா!

பாரில் வாழும் உயிரெல்லாம்
பருகித் தாகம் போக்கிட
ஏரி, ஆறு குளம் எல்லாம்
நிரம்பி நீரும் இருந்திட

தினமும் நாங்கள் இறைவனைச்
சேர்ந்து கூடிப் பணிகிறோம்.
மனம் உருகி விரைவிலே
மழையே நீயும் இறங்கிவா!



பிருந்தாவனக் கவியரங்கம்

தம்பி, கேளடா

இனிய தம்பி கேளடா!
இந்திய மக்கள் நாமடா!
தோள் தட்டிச் சொல்லுடா!
சோர் வின்றிச் செல்லடா!

பக்தி கொண்டு வணங்கடா!
பகைமை யாவும் வெல்லடா!
சொத்து என்ப தென்னடா!
சொந்த உழைப்புத் தானடா!



அச்சம் நமக்கு ஏதடா?
அன்பு கொண்டு பாரடா!
கொஞ்சும் தமிழில் பேசடா!
கூடி ஒன்றாய் ஆடடா!

— டி. ஆர். பார்த்தசாரதி (15,124),
சென்னை — 81.

எல்லாம் உன்னாலே

அகிலம் சுழல்வது உன்னாலே!
ஆதவன் எழுவது உன்னாலே!
அலைகடல் பொங்குது உன்னாலே!
அனைத்தும் நடப்பது உன்னாலே!

கலியுகம் நடப்பது உன்னாலே!
காலம் போவது உன்னாலே!
கவிதை புனைவது உன்னாலே!
காய்கள் கனிவது உன்னாலே!



கலைகள் வளர்வது உன்னாலே!
கவலை போவது உன்னாலே!
மலர்கள் மலர்வது உன்னாலே!
மழையும் பொழிவது உன்னாலே!

சந்திரன் வருவது உன்னாலே!
சங்கடம் போவது உன்னாலே!
சரீரம் வளர்வது உன்னாலே!
சகலமும் நடப்பது உன்னாலே!

இதுவறி யாமல் எல்லாமும்
என்னால் என்று நினைப்பவரை
மன்னித் திடுவாய் கண்ணாநீ!
மக்களைக் காப்பாய் கண்ணாநீ!

— ராக. செள. கருணாகரன் (883), சேலம் — 1

வானம்

வானம் வானம் வானம் — நல்ல
வண்ண நிறத்து வானம்.

கோணம் கோணம் கோணம் — அதில்
கோடானு கோடி கோணம்.

வெள்ளை வெள்ளை நிறமாம் — அதில்
வேண்டும் உருவம் வருமாம்.

சொல்லும் போதே மறையும் — அதற்குச்
சோம்பல் தானே இல்லை!



காற்று அடித்தால் ஓடும் — அங்கே
கனத்த மழையும் பொழியும்.

வானம் வானம் வானம் — நல்ல
வண்ண நிறத்து வானம்.

வெண்ணி லாவில் மறையும் — அது
வேண்டும் இன்பம் கூட்டும்.

மின்னி மின்னி மறையும் — விண்
மீனும் அதிலே காண்போம்.

— பி. ஆர். பழனிவேல் (17,310), உடுமலைப்
பேட்டை.



பள்ளி செல்லும் பானு


துள்ளித் திரியும் பானுவை
பள்ளி சேர்க்க ஆவலே.
பள்ளிக் கூடம் போகவே
பானு கேட்டாள் இவைகளை:

பட்டுப் பாவாடை வேணுமே;
பையில் துட்டு வேணுமே;
கட்டுச் சாதம் வேணுமே;
காலில் பூட்ஸ் வேணுமே;

தலையில் சூட மல்லிகை
தாகம் தீர்க்கத் தண்ணீரும்,

பானு கேட்ட அனைத்துமே
பையில் வந்து சேரவே,
பாடம் தன்னைக் கற்கவே
பானு கிளம்பிச் செல்கிறாள்.

— சி. ஆர். சிவக்குமார் (18,601),
ஈரோடு — 10.



ஆமை

ஆமை பாராய் ஆமை
ஆயுள் நீண்ட ஆமை
தீமை வீட்டில் புகுந்தால்
தெரிந்து கொள்வாய் தம்பி!

உறுதி யான ஓட்டை
உயிராய்க் கொண்ட ஆமை.
இறைவன் படைத்த ஓட்டால்
இடையூ றின்றி வாழும்!


பகையைக் காணின் தன்னைப்
பாது காத்துக் கொள்ள
உடலை ஓட்டுக் குள்ளே
ஒளித்துக் கொள்ளும் ஆமை.

ஆமைக் கமைந்த ஓட்டினால்
அழகாய்ச் சீப்புச் செய்வார்
சின்னச் சின்னப் பெட்டியும்
சிங்கா ரமாய்ச் செய்வார்.

— எம். ஜி. இராமச்சந்திரன் (2915),
பழையனூர்.

பழமொழிப் புதிர்

புதிர்-19



புதிர்-20



மேலே உள்ள இரு படங்களும் எந்த எந்தப் பழமொழியைக் குறிக்கின்றன? விடை தெரியாத போனால் 76 ஆம் பக்கம் பாருங்கள்.



கால் தந்த பெருமை

பேரளம் புகழ்மதி

அது வரை எடுத்த ''பாதுகா பட்டாபிஷேகம்'' படத்தின் காட்சிகளைப் போட்டுப் பார்த்த டைரக்டரின் முகத்தில் சிவகாசிப் பட்டாசுகள் வெடித்தன.

''என்னய்யா, காமிராமேன் நீங்களெல்லாம்...? திரைப்படக்கல்லூரியில்படித்தால்மட்டும்போதுமா? மக்களுடைய நாடி நரம்புகளின் உணர்வுகளை அவங்களோடு நெருங்கிப் பழகியிருந்தால்தான் அப்படியே உயிரோடு எடுக்க முடியும். ராமர் தன் பாதுகைகளைக் கழற்றிக் கொடுக்கிற காட்சியும், வெறும் பாதத்தோட இந்த மண்ணிலே அவர் காலை ஊன்றி நடக்கும் போது ஏற்படுகிற உணர்வலைகளும் மிகத் தத்ரூபமாக எடுக்கணும்... ஆனால் உங்கள் படப்பிடிப்பில் ஒரு மண்ணுமில்லே...' நான் எதிர்பார்த்த மாதிரி துளிக்கூட இல்லை'' என்று ஆத்திரத்தோடு படபடத்தார்.

காமிரா மேன் மூர்த்தி மிகவும் மிரண்டு விட்டார். ''வந்து... வந்து... வெறும் காலிலே என்ன அவ்வளவு முக்கியமான கலை அம்சத்தைக் காட்ட முடியும்னு தெரியல்லியே! அதனாலே தான் வெறுமனே சாதாரணக் கோணத்திலே எடுத்தேன்'' என்றார் தயங்கியபடி.

''வெறும்கால்களைப்பற்றியகாட்சி தானேன்னு சொல்றீங்க... மனித வாழ்க்கையிலே கால் படுகிற துன்பங்களும், கஷ்டங்களும் உங்களுக்குப் புரியாது. தான் எவ்வளவு வேதனைப் பட்டாலும் அத்தனையையும் தாங்கிக்கிட்டு மனிதனுக்கு எவ்வளவோ உதவுது. தன்னை மத்தவங்க எவ்வளவு கேவலப்படுத்தினாலும் அதைப் பத்திக் கவலைப்படாமல் மனிதனுக்கு உண்மையான தோழனா உழைக்குது. இதையெல்லாம் தெரிஞ்சுக்கணும்னா மக்களோடு நெருங்கிப் பழகணும். இன்னிக்குப் பூரா ஷூட்டிங் கேன்சல் பண்றேன். இன்னிக்குப் பூரா கால் போன போக்கிலே மெட்ராஸைச் சுத்தி வாங்க. அப்பத்தான் காலினுடைய அருமையும் அதைப் படம் பிடிக்கிற கோணமும் உங்களுக்குப் பிடிபடும்.''

மூர்த்தி மிகவும் குழப்பத்தோடு வெளியே வந்தார். ஸ்டூடியோவின் ஓரமாக உள்ள பூங்காப் பகுதியில் எதையோ சிந்தித்தபடி நடந்து கொண்டிருந்தார்.

அப்போது, ''என்ன சார், காலாற நடக்கருப்பிலே இருக்கே,'' என்று



குரல் வந்தவுடன் சட்டென்று நின்றார். ஸ்டூடியோ உதவியாளர் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார். 'காலாற' என்ற வார்த்தையைக் காதில் வாங்கியபடி மெல்லச் சிரித்தார் மூர்த்தி.

ஸ்டூடியோ வாயிற்பக்கம் சென்றபோது, ஸ்டூடியோ மானேஜர் யாரிடமோ கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"யாரா இருந்தா என்ன, சொந்தக் காலிலே நிற்கணும்... அப்பத்தான் முன்னுக்கு வர முடியும். பொய்க்கால் குதிரை விளையாட்டெல்லாம் கொஞ்ச நாளிலே பொசுக்குன்னு போயிடும். இந்த முப்பது வருஷ ஸ்டூடியோ அனுபவத்திலே நான் இதைச் சொல்றேன்; இரவல் கால் என்னைக்குமே ஆபத்து" என்று காரசாரமாக அருகிலிருந்தவரிடம் பேசிக் கொண்டிருந்தார். "ஆமாங்க, சினிமாத் துறையிலே மட்டுமில்லே; எந்தத் துறையிலும் _ ஆழமாய்க் காலூன்றி நிற்கிறவனாலேதான் ஜெயிக்க முடியும்" என்றார் அருகிலிருந்தவர்.

மூர்த்தி சுறுசுறுப்பானார். 'அடடே! இன்னும் ஸ்டூடியோவைத் தாண்டவில்லே. அதுக்குள்ளே காலைப் பற்றி இவ்வளவு புகழ்மாலையா? இன்னைக்கு ராத்திரி வரைக்கும் டைரக்டர் சொல்ற மாதிரி கால் போன போக்கிலே நடக்கப் போகிறேன்" என்று தீர்மானித்தார் மூர்த்தி.

"பாம்பறியும்பாம்பின் கால் தெரியுமில்லே; நம்மகிட்டே உங்க ஏமாத்தெல்லாம் காண்பிக்காதீங்க" என்று யாரோ ஒரு டெக்னீஷியன் மற்றொரு டெக்னீஷியனிடம் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

வடபழனி பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தார் மூர்த்தி. "கால்கோள் விழா அமைச்சர் அடிக்கல் நாட்டுகிறார்" என ஆள் உயரப் போஸ்டர் எங்கும் விஸ்வரூபமாயிருந்தது. 'ஆரம்ப அடித்தள விழாவுக்கு 'கால்கோள் விழா' என்ற தலைப்பா... காலுக்கு இவ்வளவு பெருமையா?' என்று வியந்தபடி மேலும் நடந்தார்.

அப்போது தியாகராயநகர் பனகல் பார்க் வழியே செல்லும் டவுன் பஸ் வந்தது. எப்படியோ முண்டியடித்து அதில் ஏறிவிட்டார் மூர்த்தி. ஒரே கூட்டம். ஏகப்பட்ட பேரைத் திணித்துக் கொண்டு பஸ் கிளம்பியது. "டேய், காலை பத்திரமா ஃபுட்போர்டிலே ஊன்றிக்கோ" என்று எச்சரித்தான் தொங்கிக் கொண்டிருந்த ஒருவன் தன் நண்பனைப் பார்த்து. "அதைப் பத்திக் கவலைப்படாதே. ஊசியளவுக்குக் காலை ஊன்றிக்கிட்டிருந்தாப் போதும். நான் மெட்ராஸ் பூராக்கூடச் சுத்திடுவேன். கீழே விழுந்திட மாட்டேன்" என்றான் அவன்.

பஸ்ஸுக்குள்ளே ஒருவர் காலை ஒருவர் மிதித்தபடி.. ஒரே அல்லோலகல்லோலம். "ஐயோ, கால்... உயிர் போவுதையா, பார்த்து நில்லய்யா" என்று ஒருவருக்கொருவர் சத்தம்



போட்டுக் கொண்டனர். 'அடடா... இந்தக் கால் எத்தனை பெரிய தியாகி... தான் எந்த அளவுக்கெல்லாம் மிதிபட்டு மனிதனைக் காப்பாத்துது!'' யாரோ ஒருவர் கூட்டத்தில் அங்கலாய்த்தார்.,

அதற்குள் கோடம்பாக்கம் ரயிலடி வந்தது. நான்கைந்து சீட்டுகள் காலியாயின. டபக்கென்று மூர்த்தியும் சிலரும் சீட்டைப் பிடித்தனர். ''அப்பாடா, காலை நீட்டிக்கிட்டு உட்கார்ந்தால் என்ன சுகம்!'' என்றார் அருகிலிருந்தவர். ''ஆமாம். செருப்பே இல்லைன்னு அழுதவன், காலே இல்லேன்னு அழுதவனைப் பார்த்ததும் கப்சிப்னு ஆயிட்டான்னு பழமொழியே உண்டு. கால் கடுக்க நின்னவனுக்குத்தான் கால் அருமை தெரியும்'' என்றார் மற்றொருவர்.

பனகல் பார்க் வந்ததும் மூர்த்தி இறங்கினார். காய்கறி மார்க்கெட் பக்கம் சென்றார். அங்கே கூட்டமாக இருந்தது. அதோ, ஓர் அம்மாள் தன் இரண்டு வயது மகனை மேய்க்க முடியாமல் தடுமாறியபடி காய்கறி வாங்கிக் கொண்டிருந்தாள். அந்தப் பொடியனோ கைக்குள் அடங்காமல் இங்கும் அங்குமாக ஓடிக் கொண்டிருந்தான். ''இவனுக்குக் கால் முளைச்சுப் போச்சு... இனிமேல் நம்மைப் படாத பாடு படுத்திவிடுவான்'' என்று சலித்துக் கொண்டாள், அந்த அம்மாள்.

''நீங்கள் காலாலே இட்ட வேலையை இவன் தலையாலே செய்வான்;





இவனை வேலையிலே சேர்த்துக்குங்க...'' ஒரு சிறுவனை, பெரிய காய்கறிக் கடையில் வேலையில் சேர்க்கச் சிபாரிசு செய்து கொண்டிருந்தார் ஒருவர். ''ஹும், ஆரம்பத்தில அப்படித்தான் இருக்காங்க. கொஞ்சம் கால் நிலைச்ச உடனே நம்ம காலையே வாரிவிட்டுட்டு எதிர்க்கடை வச்சுடறாங்களே'' என அலுத்துக் கொண்டார் கடைக்காரர்.

பனகல் பார்க் கடைத் தெருப் பக்கம் வந்தார் மூர்த்தி. அப்போது இருவர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களில் பேண்ட் போட்டுக் கொண்டிருந்த நாற்பத்தைந்து வயதுக்காரர், ''எப்படியோ, எவனெவன் கால்களிலெல்லாமோ விழுந்து பையனுக்கு பாலிடெக்னிக்கிலே இடம் பிடிச்சுட்டேன். இனிமே என் கவலை தீர்ந்தது'' என்றார். ''அதெப்படி... அவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்து ஒரு கால் கட்டு போட்டவுடன்தான் உங்க கவலை தீரும்'' என்றார் மற்றவர்.

மெல்ல அப்படியே நந்தனம் பகுதிக்கு வந்துவிட்டார் மூர்த்தி. ''பட்ட காலிலே படும்ங்கிறது சும்மாவா? நானும் படாத கஷ்டமெல்லாம் பட்டுட்டேன்'' என்றார் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த ஒருவர். ''எனக்கும் அப்படித்தான். கொஞ்சமும் யோசிக்காமல் அகலக் கால் வச்சுட்டேன். அளந்து வச்சிருந்தேன்னா என்னை அவன் ஏமாத்தியிருக்க

முடியாது. இப்ப என் வாழ்க்கையே நொண்டியாயிட்டுது. ஏமாத்திட்டுப் போன பங்குதாரர்கிட்டே பணத்தைக் கேட்டுக் கேட்டு. என் காலே தேய்ஞ்சு போச்சு. ஒண்ணும் பிரயோஜனமில்லே. அவன் கால் வைக்கற இடத்திலே நம்மளாலே வைக்க முடியல்லே'' என்றார் மற்றொருவர்.

பஸ் வந்தது. ஏறி சைதாப்பேட்டையில் இறங்கினார் மூர்த்தி. ஆசிரியர் கல்லூரிக்கு எதிர்த்தாற்போல ஒரு சிறு கூட்டம் காணப்பட்டது. ''அதெல்லாம் என்னாலே முடியாதுங்க.... செருப்புக்கு ஏத்த மாதிரி காலே வெட்டிக்க முடியாதுங்க'' என்றார் லாரி டிரைவர். அண்ணே, நீங்க ஏன் பேசிக்கிட்டு இருக்கீங்க? காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி வீசிட்டு வாங்க'' என்றான் மற்றொருவன்.



''அடப்போய்யா, நீயொருத்தன். இந்தத் தடவை கிளீனரை மன்னிச்சு ஏத்துக்க... இனிமே உன் கால் நிழலில் அவன் இருப்பான். முன்கால் நடக்கற பாதையிலே பின்கால் நிச்சயம் நடக்கும். திடீர்னு இப்பப் போய் இரண்டுபேரும்காலேமாத்திப்போடாதீங்க'' என்று சமரசம் செய்தார் இடையிலிருந்தவர்.

எதிர்த்தாற்போல் தெரிந்த உயர் நிலைப் பள்ளியைப் பார்த்தார் மூர்த்தி. மெல்ல அந்தப் பக்கம் சென்றார். ''காலைப் பத்தி அலட்சியமாக இருக்காதீங்க. ஒரு கால்தானேன்னு நினைச்சா அர்த்தமே மாறிடும். ''மாலையில் வந்து பார்'' என்கிறதில் காலை விட்டால் 'மலையில் வந்து பார்'' ஆகி அர்த்தமே மாறிடும்'' என்று ஏதோ ஒரு ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''தமிழில் 'இடக்கரடக்கல்' என்றால் என்ன? சிலவற்றை மறைத்து ''கால் கழுவி வந்தான்'' எனச்சொல்கிறோம். 'கால் கழுவி' என அங்கு கால் தியாகியாக இருந்து வேறு ஒன்றை மறைத்து நமக்கு உண்மையை நாகரிகமாக வெளிப்படுத்துகிறது'' என, தமிழாசிரியர் ஏதோ ஒரு வகுப்பில் கம்பீரமாக முழங்கிக் கொண்டிருந்தார்.

''முதன்முதலாக மனிதனின் காலடி சந்திரனில் பட்டபொழுது அவன் மெய்சிலிர்த்தான். தன் 'காலடி சந்திரனில் பட்டபொழுது அவன் சொன்னான். இது மிகச் சிறிய அடி; ஆனால் அறிவியலில் மிக முன்னேற்றமான அடி'யென்றான்'' என்று சரித்திர ஆசிரியர் கூறிக்கொண்டிருந்தார்.

''காந்தியின் கால் சுவட்டில் இந்த நாடே அணி வகுக்கிறது'' என்று நீதி போதனை நடத்திக் கொண்டிருந்தார் ஒருவர்.

அப்படியே மெல்ல பஸ் ஸ்டாண்டை அடைந்தார். பஸ்ஸில் ஏறி மவுண்ட் ரோடு சென்றார்.

அங்கே ஓரிடத்தில் சினிமா கேசட் முழங்கிக் கொண்டிருந்தது. ''அல்லித் தண்டு காலெடுத்து'' என சின்னக் குழந்தையைப் பற்றி ஒரு பாடல், ''கால்போன போக்கிலே மனம்போக



லாமா?'' என ஒரு பாடல். அப்பப்பா, காலுக்கு அவ்வளவு வலிமையா! மனத்தையே அடிமையாக்கித் தன் வழியில் கொண்டு செல்லுமோ!

''ஆத்திலே ஒரு கால்; சேத்திலே ஒருகால் வைக்காதே. 'இந்தப் படகிலே ஒரு கால்; அந்தப் படகிலே ஒரு கால்' என்கிற வேலையையெல்லாம் மூட்டை கட்டு. ஒழுங்கா உருப்படற வழியைப் பார்'' யாரோ ஓர் இளைஞனிடம் முதியவர் கூறிக் கொண்டிருந்தார்.

ரவுண்டானா வந்தது. சுரங்கப் பாதை வழியே இறங்காமல் பாதையைக் குறுக்கே கடந்தார் ஒருவர். ''இந்த ஆளுங்களையெல்லாம் சும்மா விடக் கூடாதுங்க... காலைக் கட்டி உதைக்கணும். 'மாறு கால் மாறு கை' வாங்கணும்'' என மதுரைக்காரர் ஒருவர் மனம் கொதித்தார். சாலையின் குறுக்கே காலை வைத்த மூர்த்தி சட்டென்று சுரங்கப் பாதைக்குள் இறங்கி விட்டார்.

அரசு எஸ்டேட் வழியே அந்தப் பிரம்மாண்டமான மைதானத்திற்கு வந்து சேர்ந்தார் மூர்த்தி. எல்லா விளையாட்டுகளிலும் கால்தான் எத்தனை முக்கியம்! எல். பி. டபிள்யு கிரிக்கெட்டில் எத்தனை பேரைப் பழி வாங்குகிறது. 'கோட்டைத் தாண்டி கால் போயிட்டுது; 'அவுட்' என்று பல விளையாட்டுக்களில் குரல்கள் ஒலித்தன. 'கால் பந்து' என்ற ஓர் ஆட்டம் பெயரிலே காலைக் கொண்டிருந்தது.

அப்படியே மூர்த்தி திருவல்லிக் கேணிப் பக்கம் வந்தார்.

''என்ன, உன் காலே பூமியிலே படல்லே கொஞ்ச நாளா, ஊருக்குப் போயிருந்தியா?'' என்று ஒரு கல்லூரி மாணவன் தன் நண்பனைக் கேட்டுக் கொண்டிருந்தான். ''நான் தேவனாயிட்டேன்; தேவர்கள் கால் பூமியிலே படாது'' என்று பெருமையாய்ச் சொன்னான் அவன். ''பேயினுடைய கால்கள் கூட பூமியிலே படாது; தெரியுமில்லே?'' 'பட்'டென்று விழுந்த இந்தப் பரிகாசத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல், அசடு வழிந்தான் அவன்.

ஒரு பணக்காரர் காரிலிருந்து இறங்கி, கடற்கரை ஓரமாக நடந்து



கொண்டிருந்தார். ''டாக்டர், சொல்லிட்டாரு. இனிமேல் காலாலே நடந்தாத்தான் என் உடல் சுகமாகுமாம்'' எனக் கூறியபடி 'வாக்கிங்' சென்று கொண்டிருந்தார்.


கேட்ட மூர்த்தி சிறிது நேரம் சிந்தித்தார். ''அடடா...! இந்தக் காலில் இவ்வளவு கதையா? காலையிலிருந்து எத்தனை அனுபவங்கள்!'' இப்படி நினைத்தபடி ராணுவ வீரன் போல் நடந்தார். 'லெஃப்ட், ரைட், லெஃப்ட்' ஓ, ராணுவ அணிவகுப்பில் கூட கால்தான் ஒழுங்குபடுத்துகிறது அனைத்தையும்.

பஸ்ஸைப் பிடித்தார்; தன் வீட்டிற்குச் சென்றார்.

மறுநாள் 'ஷூட்டிங்' முடிந்து அன்று எடுத்த படத்தைப் போட்டுப் பார்க்கும் நேரம் நெருங்கியது. இதோ போட்டாகி விட்டது. மூர்த்தி மனம் துடித்தபடி இருந்தார்.

''பலே! பலே! அற்புதம்! வொண்டர்ஃபுல்! அருமையான கோணங்கள்; உயிர்த் துடிப்பாய் உள்ளன காட்சிகள். மிஸ்டர் மூர்த்தி, உலகம் உங்களுடையது'' என்றார் டைரக்டர்.

முதல் நாள் முழுக்கக் காலால் சென்னையை வலம் வந்த மூர்த்தி இப்பொழுதோ கால்கள் விண்ணில் பறக்க மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருக்கிறார்; எல்லாம் கால் தந்த பெருமையல்லவா?



எட்டாம் வகுப்பில் படிக்கும் கோமதியும் அவள் அம்மாவும் போன வாரம் ஒருநாள் என்னைப் பார்க்க வந்திருந்தனர். கோமதி சோர்வாக இருந்தாள். உடம்பில் சத்தே இல்லாமல் ஒல்லியாக இருந்தாள். கன்னம் வற்றியிருந்தது. கால்கள் குச்சி போலிருந்தன.

கோமதியின் அம்மா: டாக்டர், கோமதி கொஞ்ச நாட்களாகச் சரியாகவே சாப்பிட மாட்டேன் என்கிறாள். உடம்பு வேறு மெலிந்துகொண்டே வருகிறது. என்ன காரணமென்று தெரியவில்லை, டாக்டர்...

நான்: (கோமதியைப் பரிசோதித்து விட்டு) பொதுவாக, குழந்தைகள் மெலிந்திருப்பதற்குக் காரணம் — ஒன்று அவர்கள் உடம்பில் நோய் இருக்க வேண்டும்... அல்லது, அவர்கள் சாப்பிடும் உணவில் குறை இருக்க வேண்டும். கோமதியைப் பொறுத்தவரை நோய் எதுவும் இல்லை. அவள் சாப்பாட்டில்தான் ஏதேனும் சத்துக் குறைவு இருக்க வேண்டும். நீங்கள் வழக்கமாக கோமதிக்கு என்ன உணவு தருகிறீர்கள்?

அம்மா: காலையில் பழைய சாதம் கொடுப்போம். மதியம் மோர்ச் சாதமும் ஊறுகாயும். இரவில் ரசம் சாதம் தருவோம்.

நான்: பால், முட்டை, இறைச்சி, பழம், காய்கறிகள் ஏதேனும் தருவீர்களா?

அம்மா: இல்லை டாக்டர். எப்போதாவது ஒருநாள் பால் கொடுப்போம். மற்ற தினங்களில் காப்பிதான் கொடுப்போம். விசேஷமான பண்டிகை தினங்களில் மட்டும் காய்கறி சமைத்துக் கொடுப்போம். நாங்கள் சைவம். அதனால் முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றைக் கொடுப்பதில்லை.

நான்: சரிதான். நீங்கள் உங்கள் மகளுக்குச் சத்துள்ள உணவுகளையே கொடுக்கவில்லை. பிறகு எப்படி உடம்பில் சத்து பிடிக்கும்? உங்கள் மகள் ஒல்லியாக இருப்பதற்கு நீங்கள் கொடுத்த சத்தற்ற உணவுதான் காரணம்.

அம்மா: என்ன டாக்டர் சொல்கி

றீர்கள்? அரிசிச் சாதத்தில் சத்து இல்லையா?

நான்: அரிசியில் கார்போஹைட்ரேட் என்ற சத்து மட்டும்தான் உள்ளது. மற்ற சத்துகள் இல்லையே?

கோமதி: மற்ற சத்துகள் என்னென்ன, டாக்டர்?

நான்: புரோட்டீன், கொழுப்பு, வைட்டமின்கள், இரும்புச் சத்து, தாதுப் பொருட்கள் போன்ற சத்துகளும் நம் உணவில் இருக்க வேண்டியது அவசியம்.

அம்மா: இந்த சத்துகள் எல்லாம் எந்த உணவில் இருக்கின்றன, டாக்டர்?

நான்: சொல்கிறேன். அரிசி, கம்பு, சோளம், கோதுமை, கேழ்வரகு போன்ற தானிய வகைகளிலும், உருளைக்கிழங்கு, சீனிக்கிழங்கு, சேனைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலும், சீனி, வெல்லம், தேன், ரொட்டி போன்ற இனிப்புப் பண்டங்களிலும் கார்போஹைட்ரேட் சத்து நிறைய உண்டு.

பால், முட்டை, இறைச்சி, மீன், தேங்காய், பட்டாணி, மொச்சை, துவரை, அவரை, உளுந்து, நிலக்கடலை, முந்திரிப்பருப்பு போன்ற பருப்பு வகைகளிலும், கேழ்வரகு, பார்லி, மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளிலும் புரோட்டீன் சத்து அதிகமாக உள்ளது.

வெண்ணெய், நெய், பாலாடை, முட்டையின் மஞ்சள் கரு, தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் ஆகிய வற்றில் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளது.

ஆப்பிள், ஆரஞ்சு, தக்காளி, பப்பாளி, திராட்சை, பேரீச்சை, கொய்யா, மாம்பழம் போன்ற பழ வகைகளிலும் முருங்கைக்காய், பூசணிக்காய், காரட், பீட்ரூட், காலிஃபிளவர், வெண்டைக்காய், எலுமிச்சை, நெல்லிக்காய் போன்ற காய்களிலும் மற்றும் பச்சைக் கீரை வகைகளிலும் வைட்டமின் சத்து நிறைய இருக்கின்றது.

இறைச்சி, ஈரல், முட்டை, பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது.

இப்படி கார்போஹைட்ரேட், புரோட்டீன், கொழுப்பு, வைட்டமின், தாதுப் பொருட்கள் போன்ற எல்லாச் சத்துக்களும் நிறைந்த உணவைத்தான் நாங்கள் 'சத்துள்ள உணவு' என்று சொல்வோம்.

அம்மா: சரி டாக்டர், நீங்கள் சொல்லும் அத்தனை உணவுகளையும், எல்லோராலும் வாங்க முடியுமா? அவரவர் வசதிக்கேற்பத்தானே வாங்க முடியும்?

நான்: அதுவும் உண்மைதான். இருந்தாலும் எந்தெந்த உணவில் என்ன சத்து இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டால், நான் சொல்லப் போகும் எளிய முறையைப் பயன்படுத்தி சத்துள்ள உணவைத் தினமும் உபயோகிக்கலாம்...

அம்மா: அது என்ன முறை என்பதைச் சொல்லுங்களேன்...

நான்: தினமும் நம் உணவில் ஒரு தானியம் (கார்போஹைட்ரேட்), ஒரு பருப்பு (புரோட்டீன்), ஒரு காய்கறி (வைட்டமின்) கீரை (இரும்புச் சத்து) சேர்த்துக் கொண்டால் நமக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைத்துவிடும். சமையலுக்குப் பயன்படும் எண்ணெயில் கொழுப்புச் சத்து இருக்கிறது. ஆக, நமக்குத் தினமும் சத்துள்ள உணவு கிடைத்து விடுகிறதல்லவா?

அம்மா: இது நல்ல முறைதான், டாக்டர்... அடுத்தபடியாக குழந்தைகளுக்குப் பால் நல்ல உணவு என்கிறீர்கள்... எப்படி டாக்டர்?

நான்: பால் மிகச் சிறந்த உணவு. காரணம் பாலில் எல்லா வகையான சத்துகளும் அடங்கியுள்ளன. அது போல் முட்டையும் சிறந்த உணவு தான். குழந்தைகளுக்குத் தினமும் 200 மி. லி. பாலும் ஒரு முட்டையும் நீங்கள் கொடுத்து வந்தால், அவர்களுக்கு உடம்பு வளர்ச்சி மட்டுமல்ல, மூளை வளர்ச்சியும் நன்றாக இருக்கும்; அறிவுத் திறனும் அதிகமாகும் என்று மருத்துவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

அம்மா: ஒரு சந்தேகம் டாக்டர்... நாங்கள் சைவ உணவு சாப்பிடுகிறவர்கள்... முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றைச் சாப்பிட மாட்டோம். அதனால், ஏதேனும் சத்துக் குறைவு

பழமொழிப் புதிர் விடைகள்:

புதிர் — 19: தூங்குகிற புலியைத் தட்டி எழுப்புவது போல்.

புதிர் — 20: சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?

ஏற்படுமா?

நான்: நிச்சயம் ஏற்படாது. அசைவ உணவில் அதிகமாக புரோட்டீன் சத்து இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால், அதே அளவு புரோட்டீனை சைவ உணவு சாப்பிடுகிறவர்கள் பருப்பு, காய்கறி, பழம் ஆகிய வற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் பெற்று விடலாம். எனவே, சைவ உணவு சாப்பிடுகிறவர்களுக்குச் சத்துக் குறைவு வரும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

கோமதி: ஏன் டாக்டர், சத்துள்ள டானிக்குகள் சாப்பிட்டால் உடம்பில் சத்து பிடிக்காதா?

நான்: சரியான சந்தேகம், கோமதி. உன்னை மாதிரி நிறைய பேர் டானிக்குகளைச் சாப்பிட்டு விட்டால் போதும்; உடம்பு நன்றாக வந்துவிடும் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள். அது தவறு. டானிக் வேறு; சத்துள்ள உணவு வேறு. உணவில் கிடைக்கும் சத்துகள் டானிக்கில் நிச்சயம் கிடைக்காது. ஆகவே, டானிக் வாங்கும் பணத்தில் நல்ல பழங்கள், காய்கறிகள் வாங்கிச் சாப்பிட்டால் எவ்வளவோ நன்மைகள் உண்டு.

அம்மா: சரி டாக்டர், சத்துள்ள உணவு அவசியம் என்று சொன்னீர்கள். ஆனால், அது எதற்கு அவசியம் என்று சொல்லவில்லையே...!

நான்: அதையும் சொல்கிறேன்; கேளுங்கள். நாம் அன்றாடம் செய்கின்ற பணிக்கு உடம்பில் சக்தி தேவை. அதற்கு கார்போஹைட்ரேட் சத்து மிகவும் அவசியம். அதே மாதிரி நம் உடம்பின் வளர்ச்சி நன்றாக இருக்கவும் தசைகள், நரம்புகள், மூளை ஆகியவை பலமாக அமையவும் புரோட்டீன் சத்து மிக மிக அவசியம். நாம் அவசரச் செலவுக்கு வங்கியில் பணம் சேமித்து வைக்கிற மாதிரி, நம் உடம்பின் அவசரத் தேவைக்கு கொழுப்புச் சத்து சேமித்து வைக்கப் படுகிறது. வைட்டமின்கள், இரும்பு, மற்றும் சோடியம் போன்ற தாதுப் பொருட்கள் இரத்தத்திலுள்ள உயிரணுக்களின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உபயோகமாக இருக்கின்றன. ஆக, நம் உடம்பு சத்தான உடம்பாக இருக்க வேண்டுமானால் இந்த சத்துகள் எல்லாம் அடங்கிய சத்துள்ள உணவு. மிக மிக அவசியம்.

கோமதி: சத்தான உடம்பினால் என்ன நன்மை டாக்டர்?

நான்: என்ன, அப்படிக் கேட்டு விட்டாய் கோமதி? உடம்பில் சத்து இருந்தால்தானே நாம் எந்த வேலையையும் எளிதாகச் செய்யலாம்? சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம்! அதிக நேரம் படிக்கலாம்; படித்த பாடங்களும் மனத்தில் எளிதில் தங்கிவிடும். அது மட்டுமா? சத்தான உடம்பில்தான் இரத்த ஓட்டம் நன்றாக இருக்கும். இதனால் நோய் எதிர்ப்புத் திறன் நிறையவே கிடைக்கும். எந்த நோயும் நம்மை அண்டுவதற்கு அஞ்சும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமல்லவா? அதனால்தான் ஒவ்வொரு குழந்தையும் சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டுச் சத்தான உடம்பை வளர்க்க வேண்டியது மிக்க அவசியம்.

கோமதி: நன்றி; டாக்டர். உங்கள் ஆலோசனைகளை நிச்சயம் கடைப் பிடிக்கிறேன்.

அம்மா: இனிமேல் நானும் சத்துள்ள உணவுகளையே சமைத்துக் கொடுப்பேன், டாக்டர்.

நான்: நன்றி, வணக்கம்.

(விடைபெற்றுச் செல்கிறார்கள்.)



“ஏ பூவிழி, ஸ்கூலுக்குப்போட்டுக்கிட்டுப் போற யூனிபார்ம் துணிகளை இப்படியா நீ போட்டு வைக்கிறது? தப்பும்மா! ‘துவைச்ச துணிங்களை மடிச்சு எடுத்து ஷெல்பிலே வை...’’

பூவிழியின் அம்மா ராஜி எரிச்சலுடன் கூறினாள். பூவிழி சோம்பேறித்தனமாக ஒரு புத்தகத்தை எதிரில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். கண்கள் படிப்பது போல நடித்தன. கவனம் என்னவோ புத்தகத்தின் பேரில் இல்லை....

‘‘பூவிழி! உன்னைத்தாண்டி! எழுந்து வந்து மடிச்சு வை...’’

‘‘என்னம்மா நீங்க? பாடம்தானே படிச்சுக்கிட்டிருக்கிறேன்? அப்புறம் எடுத்து வைக்கிறேன்.’’

அலுப்புடன் கூறினாள் பூவிழி.

அதென்னவோ அந்தக் குடும்பத்திலேயே அவள் தனி. மற்றவர்கள் சுறுசுறுப்பாகப் பறந்து கொண்டிருப்பார்கள்.

இவள் மட்டும் முனகிக் கொண்டு, மூலையில் உட்கார்ந்திருப்பாள்.

அப்படி ஒரு சோம்பல். குளிக்கப் போனால் அரைமணி நேரம். தலைவாரப் போனால் அரை மணி நேரம்.

எந்த ஒன்றையும் ‘ஸ்லோ மோஷனில்’ செய்துதான் பழக்கம்.

அவளுக்கும், சுறுசுறுப்புக்கும் ஜென்மப் பகை.

ராஜிக்குத் தன் மகளைப் பார்க்கப் பார்க்க வயிறு பற்றி எரிந்தது. பூவிழியின் அக்காள் வெண்ணிலா அமெரிக்காவில் தன் சித்தி, சித்தப்பா வீட்டில் படிக்கிறாள். ‘துறுதுறு’ வென்று இருப்பாள். ஒரு நொடியைக் கூட அவள் வீணாக்க மாட்டாள்.

அதே போலத்தான். பெரியவன் அருண்மொழியும். படிப்பா? விளையாட்டா? பேச்சுப் போட்டியா? ஒன்றையும் விட மாட்டான். பல பரிசுகளைப் பெற்றிருக்கிறான்!

காலையில் சீக்கிரமாக, தானே எழுந்து விடுவான். வேகமாக ஒரு அரைமணி நேரமாவது நடந்துவிட்டு வந்தால்தான், அவனுக்குக் காப்பியே தொண்டையில் இறங்கும்...

இப்படி, சுறுசுறுப்புத் தேனீக்களுக்கு நடுவில் சோம்பேறித் திலகமாக இவள் எப்படி வந்து பிறந்தாள்?

‘‘என்ன பூவிழி, நான் பாட்டுக்குச் சொல்லிக்கிட்டே இருக்கிறேன். நீ பாட்டுக்கு அடமா உட்கார்ந்துக்கிட்டு இருக்கிறியே! எழுந்திரு...’’

வெறுப்போடு, மெல்ல எழுந்திருந்தாள், பூவிழி.

ஏதோ எழுபது வயதுக் கிழவியைப் போல எழுந்தாளே தவிர, பன்னிரண்டு வயதின் துள்ளலைச் சுத்தமாகக் காண முடியவில்லை.

''எழுந்திரேன் சீக்கிரமா! என்னவோ கிழவி மாதிரி, தட்டுத் தடுமாறி எழுந்திருக்கிறியே. வேகமா எழுந்திருக்க முடியலையா? இப்படியே நீ சோம்பேறியாக வளர்ந்தால் பிறகு அரிசி மூட்டை மாதிரி குண்டு ஆயிடுவே! ,அப்புறம், நான் வந்துதான் உன்னை நகர்த்தி, நகர்த்தி வைக்கணும்...''

ராஜி எரிச்சலுடன் சொல்ல, அடுத்த நிமிஷமே, ''ஹோ...'' என்று கண்ணீர் விட்டுக் கதறியழ ஆரம்பித்தாள் பூவிழி.

மற்ற எதில் சோம்பேறியோ என்னவோ, இந்த அழுகை விஷயத்தில் பூவிழியைத் தோற்கடிக்க யாராலும் முடியாது!

அப்படி ஒரு பயங்கர அழுகை... குற்றாலத்தைக் கொண்டு வந்து கூடத்தில் நிறுத்தி விடுவாள்.

ராஜிக்கு 'சே' என்று ஆகிவிட்டது. அவ்வளவுதான்! இனி இவள் ஓய மணிக்கணக்காகும். என்ன பெண் இவள்? ஏன் இவள் இப்படி இருக்கிறாள்?

''இதோ பார் பூவிழி! அப்படி என்ன ஒரு அழுகை? எதுக்கு எடுத்தாலும் அழுகைதானா? நல்ல பொண்ணு போ! சரியான அழுமூஞ்சியை ஆண்டவன் கொடுத்துட்டான் பாரு...

திரும்பவும் உச்சஸ்தாயியில் கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள் பூவிழி.

ராஜிக்கு ஆத்திரம் அடங்கவில்லை.

''ஏய் நிறுத்து அழுகையை! நீ துணியை மடிச்சு வைக்கவே வேணும். ஒனக்கு ஒரு கும்புடு. அழுகையை நிறுத்து முதல்லே! அழுமூஞ்சிச் சனியனே! நான் சொல்றது காதிலே விழலை?''

அழுமூஞ்சி என்று சொன்னதால், இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தாள் பூவிழி.

''நிறுத்து அழுகையை! நிறுத்துடி அழுகையை!'' பல்லைக் கடித்துக் கொண்டு, ராஜி முரண்டு பிடிக்கும் மகளின் முதுகில் ஓங்கி ஓர் அறை கொடுத்தாள்.


அவளும் பாவம்தானே! எத்தனை வேலைகளைத்தான் அவள் ஒருத்தியாகவே செய்வாள்?

சரி... அப்படியே கூட அவள் என்ன செய்யவே முடியாத கஷ்டமான வேலையையா கொடுத்து விட்டாள்? அதற்குப் போயா ஒப்பாரி வைத்து அழுவது?

''ஆங்...'' என்று எருமையைப் போல,குரல்கொடுத்து அழ ஆரம்பித்தாள் பூவிழி.

தோட்டத்திலிருந்து அப்பா ரவீந்திரன் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

''என்ன? என்ன? எதுக்கு அழறே?



பூவிழி! ஏம்மா கண்ணு அழறே?''
பரபரப்புடன் கேட்டார் ரவீந்திரன்.
''இதோ பாருங்க... உங்க பொண்ணுக்குநீங்கபூவிழின்னுபேருவச்சிருக்கவே கூடாது. 'அழுமூஞ்சிச் சோம்பேறி' ன்னு வெச்சிருக்கணும். எதைச் சொன்னாலுமா இப்படி அழுவா ஒருத்தி? ச்சே!''
ராஜி விவரித்தாள், என்ன நடந்தது என்று.
''ஏம்மா கண்ணு? அம்மா சொல்றது நல்லதுக்காகத்தானே? அம்மா நீ கெட்டுப் போகவா வழி சொல்லுவாங்க? அது ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது?''
ரவீந்திரன் மகளைக் கண்டிப்பாகப் பார்த்தார்.
''மடிச்சு வைக்கத்தாம்பா எழுந்தேன். அதுக்குள்ளே அம்மா, ''அழுமூஞ்சி, சனியன், அரிசி மூட்டையாட்டம் ஆயிடுவே'' — அப்படின்னு எல்லாம் சொல்றாங்கப்பா'' — திரும்பவும் அழுகை.
''உட்காரு முதல்லே.''
மகளை உட்கார வைத்துக்கொண்ட ரவீந்திரன் அவள் முகத்தையே பார்த்தார்.
எத்தனையோ முறை அவரும்தான் கவனித்திருக்கிறார்.
''இதோ பாரும்மா! உனக்குப் 'பூவிழி' ன்னு ஏன்பேர்வெச்சேன்,தெரியுமா? உன் கண்ணு பூ மாதிரி அழகா இருக்குங்கறதுக்காக மட்டும் இல்லே.. பூ மாதிரி எப்பவும் மலர்ச்சியாக இருக்கணுங்கறதுக்காகவும்தான்... புரியுதா?''
''ஏம்ப்பா? நான் மட்டும் என்ன வேணும்னு அழறேன்? என்னைத் திட்டிக்கிட்டே இருக்காங்கப்பா அம்மா! அப்புறம் யார்தான் அழ மாட்டாங்க?''
''அண்ணனைத் திட்டறாங்களா அடிக்கடி?''
''கிடையாதுப்பா... திட்டறதே கிடையாது...
''அக்காவைத் திட்டுவாங்களா...?''
''ஊகூம்! அக்காவையும் திட்ட மாட்டாங்க!''
''ஏம்மா? உங்கம்மா அக்காவையோ, அண்ணனையோ திட்ட மாட்டேங்கிறாங்க. ஆனா உன்னை மட்டும் ஏன் திட்டிக்கிட்டே இருக்காங்க? அதை யோசிச்சியா?''
பூவிழி தயங்கினாள். அப்பா தொடர்ந்தார்.
''யோசிம்மா பூவிழி! அம்மாவுக்கு என்ன உன் மேலே விரோதமா? ஏன் உன்னை மட்டும் திட்டணும்?''
''அண்ணனும், அக்காவும்தான் செல்லம். என்னைக் கண்டா பிடிக்காது...''
ரவீந்திரன் சிரித்தார்.
''ஏம்மா பூவிழி! அம்மாவுக்கு உன் மேலே ஆசை இல்லாமே போயிடுமா?''
பூவிழி தலைகுனிந்து நின்றிருந்தாள்.
''நீ நல்லா இருக்கணும்னுதாம்மா உன் தாயும், தந்தையும் ஆசைப்படுவாங்க. சோம்பேறி ஒரு நாளும் முன்னேற முடியாது. உன் அக்காவோட சுறுசுறுப்பும், கெட்டிக்காரத்தனமும் அமெரிக்காவுக்கு அவளைக் கூட்டிக்கிட்டுப் போயிருக்குது... உன் அண்ணன்? உனக்கே தெரியும் அவன் எவ்வளவு பரிசுகளை அள்ளிக்கிட்டு வர்றான்னு. நீ மட்டும் இப்படி இருக்கலாமா?''
''எப்படிப்பா இருக்கேன் நான்?'' திரும்பவும்அழுகைகண்களில்துளிக்க ஆரம்பித்தது.
''ஐயோ! அழாதே! திரும்பவும் அழ ஆரம்பிச்சியானா, அப்பா உன் கூடப் பேசவே மாட்டேன்! தெரியுமா?



கோழைகளின் ஆயுதம்தான் கண்ணீர்!''

ராஜி தொடர்ந்தாள்.

''இதோ பார்... அழுகிறதினாலே ஒரு புண்ணியமும் கிடையாது. எந்தப் பலனும் கிடையாது. எதையும் சாதிக்கவும் முடியாது! அழுகிறவங்களைப் பார்த்தால்யாருக்குமேஎரிச்சல்எரிச்சலாகத்தான் இருக்கும். அது மட்டும் இல்லே. பெண்கள் அழவே கூடாது. துணிச்சலா,தைரியமா பிரச்னைகளைச் சமாளிக்கணுமே தவிர, அழுது ஊரைக் கூட்டக் கூடாது...''

தற்காலிகமாக அழுகையை மறந்தாள் பூவிழி.

''பூவிழி! அம்மா பூவிழி! இங்கே வா! இதோ பாத்தியா இதுதான் கரையான்! இதோ பார் தேனீ! இதோ... எறும்புகளைப் பாரும்மா! என்ன அழகா வரிசையாகப் போகுது பாரு!''

மகளைக் கூப்பிட்டுக் காட்டினார் ரவீந்திரன்.

''மரம் பூரா அரிச்சிட்டிருக்குது பாருங்கப்பா... இத்தனூண்டு கரையான் என்ன மாதிரி மரத்தையே அரிச்சிட்டுது?'

''ஆமாம் பூவிழி! இதோட சுறுசுறுப்பு மரத்துக்குத் தீமையாயிட்டது. அப்படிச் சில மனிதர்கள் உண்டு. அவங்களோட உழைப்பு பிறருக்குத் தீங்காத்தான் முடியும்...''

''இதோ பார்த்தியா ஈக்கள்... இது பொழுதுக்கும் தின்னுக்கிட்டே இருக்கும் பாரு! எறும்புகளைப் பாரு! பொழுதுக்கும் உழைச்சிக்கிட்டே இருக்குது... ஈக்களை மாதிரி மனுஷங்க இருக்காங்க... அவுங்களுக்கு எதைப் பத்தியும் கவலை இல்லை. வயிறு நிறைஞ்சாப் போதும்...

''எறும்புங்களை மாதிரி இருக்கிறவங்க பொழுதுக்கும் அலுக்காமே உழைச்சிக்கிட்டே இருப்பாங்க.

"அவங்களை விட, தேனீக்களைப் போல வாழற மனுஷங்கதான் இன்னும் உயர்வானவங்க... ஏன் சொல்லு?''

''ஏன்னு தெரியலையே? எறும்பு போலத்தான் தேனீக்களும் உழைக்குது...''

''எறும்போட உழைப்பு தங்களுக்காக மட்டும். ஆனா, தேனீக்கள் பொழுதுக்கும் உழைக்கும்; தானும் உண்ணும்; பிறருக்கும் கொடுக்கும். தனக்காக மட்டுமே உழைக்கிற மனிதனை விட, தான் உழைச்சு, தான் சாப்பிட்டு, பிறருக்கும் கொடுக்கிறவன் உயர்ந்தவன் இல்லையா?''

''ஆமாம்பா! நிச்சயமா அவன் தான் உயர்ந்தவன். இதிலே என்னப்பா சந்தேகம்...?''

''நீயும் அந்தத் தேனீயைப் போல இருக்கணும்னு நாங்க ஆசைப்படறது தப்பாம்மா?''

யோசிக்க ஆரம்பித்தாள் பூவிழி.

''பூவிழி! என்னையே நீ எடுத்துக்கோ. நான் வீட்டு வேலைங்களை முடிச்சிட்டு, வேக வேகமா என் வேலைங்களை முடிச்சிட்டு ஆபீஸ்கிளம்பறேன். ஒரு பெண் இன்னிக்கு இருக்கிற இயந்திர யுகத்துலே, சும்மா பம்பரம்மாதிரி இயங்கணும். இல்லேன்னா ஒண்ணும் முடியாது...'' என்றார் அப்பா.

''ஆமாம் பூவிழி... ஒரு சின்னப் பொண்ணுகிழவியைப்போல்உட்கார ஒரு நாழி, எழுந்திருக்க ஒரு நாழின்னு எடுத்துக்கிட்டா, ஏதாவது ஒரு வேலை நடக்குமா? பார்க்க அருவருப்பா இருக்காதா? இப்ப என்னைப் பாரேன்...'' என்று கூறிக் கொண்டே அம்மா, நொண்டியடித்தவாறே, தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தாள்.

''என்னம்மா இது? ஐயே! என்னம்மா நீங்க சின்னப் பிள்ளையைப் போல நொண்டி அடிக்கிறீங்க?''

பூவிழி கைகளைக் கொட்டிச் சிரித்தாள்.

''என் வயசுக்கு நொண்டியடிச்சு விளையாடினா, சிரிப்பா இருக்குது உனக்கு! நீ — சின்னப் பொண்ணுன நீ — கிழவியாட்டமா அப்படி ஒரு 'ஸ்லோ மோஷன்'லே நடக்கிறதைப் பார்க்கிறப்போ, எனக்கு எப்படி இருக்கும்னு யோசிச்சுப் பாரு? அந்தந்த வயசுக்கேத்த மாதிரி நாம இருந்தாகணும்... இல்லியா?''

பூவிழிபுரிந்துகொண்டாள்.அப்பா சிரித்துக் கொண்டார்.

புதையல் வீடு



டாக்டர் பூவண்ணன்

12. தாமரைச் சங்கு

கல் தூணின் ஒரு பகுதி கதவு போலச் சிறிது திறந்ததும், செங்கோடனும், சுமதியும் ‘உட்கோயிலுக்குச் செல்லும் ரகசிய வழி இந்தத் தூணுக்குள் தான் இருக்கிறது’ என்று மகிழ்ந்து போனார்கள், செங்கோடன் கதவு போலத் திறந்த பகுதியை — கல்லாலான கதவை இடமிருந்து வலமாக எவ்வளவு தூரம் திறக்க முடியுமோ அவ்வளவு தூரம் திறந்தான். சுவரில் புதைக்கப் பட்ட இரும்புக் கஜானாவை ஒரு மார்வாடிக் கடையில் அவன் பார்த்திருந்தான். இப்போது தூணின் கதவு திறப்பது, அந்தக் கஜானா திறப்பது போல இருந்தது.

சுமதியும், செங்கோடனும் ‘கதவுக்குப் பின்னே, தூணில் ரகசிய வழியிருக்கிறதா?’ என்று ஆவலோடு பார்த்தார்கள். அங்கே அப்படிப் பட்ட வழி தென்படவில்லை, கதவுக்குப்பின் தூண் தான் தெரிந்தது. அதற்குள் சந்து, பொந்து எதுவும் இல்லை.

“என்ன இது? இதற்குள் எதுவும் இல்லையே!” என்று ஏமாற்றத்தை வெளியிட்டான், செங்கோடன்.

“செங்கோடா, அவசரப்படாமல் பார்ப்போம். ஒன்றுமில்லாத இடத்துக்கு இந்தக் கல் கதவு எதற்கு? இங்கே என்னமோ இருக்கிறது. பொறுமையாய்ப் பார்ப்போம்.”

சுமதி சொல்வது சரியென்று பட்டது. அதனால் செங்கோடன் நீண்ட சதுர வடிவில், சட்டம் போட்ட படம் போல் இருந்த அந்த இடத்தை உற்றுப் பார்த்தான். சுமதி கூர்ந்து பார்த்ததுடன் அமையாது, அந்த இடத்தைக் கையால் தடவிப் பார்த்தாள். உள்ளிடம் ஒரே சமமாக இருந்தது கடுகளவு மேடு பள்ளம் இல்லாமல்.

செங்கோடனுக்குச் சலிப்புத் தோன்றியது. “சுமதி, நம் நாட்டுச் சிற்பிகள் மகாமேதைகள் மட்டுமல்ல; மற்றவர் பொறுமையைச் சோதிப்பதிலும் மகா திறமை சாலிகள். இதோ நாம் ஒரு ரகசியக் கதவைக் கண்டு பிடித்துத் திறந்து விட்டோம். அதற்குள் ஏதோ, கண்ணுக்குப் புலனாகாத ரகசியம் இருக்கே. அதைக் கண்டு பிடிச்சு திறந்தா அதுக்குள்ளே இன்னொரு ரகசியம் இருக்கும் போலும்” என்று கூறினான், செங்கோடன்.

சுமதிக்கும் ஏமாற்றந்தான். அந்த ஏமாற்றத்தின் நடுவே திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. “கொஞ்சம் இரு. இதோ வரேன்” என்று கூறியபடி எழுந்து சுமதி, சண்பகம் சமைக்கும்

பகுதிக்குச் சென்றாள். அங்கிருந்த சிறிய டப்பிகளைத் திறந்து பார்த்து மஞ்சள் தூளைக் கண்டுபிடித்தாள். ஒரு பிடி மஞ்சள் தூளில் கொஞ்சம் தண்ணீர்விட்டுப்பிசைந்து,அதைஉருண்டையாக்கிக் கொண்டு வந்தாள்.


கல் கதவுக்குப் பின்னே தெரிந்த கறுப்புப் பாறையில் சுமதி, தான் கொண்டு வந்த மஞ்சள் கலவையைப் பூசினாள். முழு இடமும் மஞ்சள் படரு மாறு பூசினாள். அதனால் கறுப்பு பகுதி மஞ்சளாகத் தெரிந்தது. இரண்டு நிமிடம் பொறுத்து தான் பூசிய மஞ்சளைத் தண்ணீர் விட்டுக் கழுவினாள். மஞ்சள், தண்ணீரிலே கலந்து கரைந்து மறைந்தது. மஞ்சள் மறைந்த பிறகு மேலும் தண்ணீர் விட்டுக் கழுவினாள். அதன் பின்னர் ஒரு துணியினால், கழு



வப்பட்ட இடத்தின் ஈரத்தை அழுத்தித் துடைத்தாள். சிறிது நேரத்தில் ஈரம் காய்ந்து விட்டது.

சுமதியும் செங்கோடனும் கல் கதவின் பின்னிடத்தை உற்றுப் பார்த்தார்கள். திடீரென்று முகத்தில் மலர்ச்சி படர், "சுமதீ!" என்று கத்திய படி தன் விரலால் கறுப்புப் பகுதியின் உள்ளிடத்தைச் சுட்டிக் காட்டினான். அங்கே மிக மெல்லிய மஞ்சள் கோடு தெரிந்தது. மேலே ஒரு வட்டம். அதன் நடுவிலிருந்து கீழ் நோக்கி இரு கோடுகள். சுமதியும் அதைப் பார்த்துப் பரவசப்பட்டாள்.

செங்கோடன் முன்பே கொண்டு வந்த எழுத்தாணியின் கூரிய பகுதியை அந்த வட்டத்தில் வைத்து முதலில் மெதுவாகக் கீறினான். பிறகு, அந்த வட்டத்தில் ஓரிடத்தில் கூரிய





சாணத்திலும் மின்சாரம்!

'சிறு துரும்பும் பல்குத்த உதவும்' என்ற பழமொழியை நீங்கள் படித்திருக்கிறீர்கள். அதுபோல ஒரு புதிய மொழியை விருதுநகர் மகளிர் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் சொல்லாமல் செயலில் காட்டியுள்ளார்கள். அதாவது நாம் 'வேண்டாம்' என்று எறியப்படும் மாட்டுச் சாணத்தைக் கொண்டு மின்சாரம் செய்ய முடியும் என்று காட்டியுள்ளார்கள். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? இது உண்மை. சமீபத்தில் சென்னை சாரதா வித்யாலயா மகளிர் பள்ளியில் நடந்த மாநில அளவிலான விஞ்ஞானக் கண்காட்சியில் இந்தக் கண்டுபிடிப்பு எல்லாருடைய பார்வைக்கும் வைக்கப்பட்டது. இதைப் பற்றியும், இந்த விஞ்ஞானக் கண்காட்சி பற்றியும் தகவல் அறியவும் கண்காட்சி அமைப்பாளர்களான சென்னை கல்வித் துறையைச் சேர்ந்த இணை இயக்குநர் திரு. சுந்தர்ராஜ நாடாரைச் சந்தித்தோம். அவர் சொன்ன தகவல்கள்: "இது போன்ற விஞ்ஞானக் கண்காட்சிகள் மாணவர்களின் விஞ்ஞான அறிவுத் திறனை வெளிக்காட்ட நன்கு உதவுகின்றன. இதை நம் கல்வித் துறை கடந்த 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்தக் கண்காட்சியில் மாநில அளவில் 120 பள்ளிகளும், கலந்து கொண்டன. இவற்றில் 90 பள்ளிகள் சென்னை அல்லாத வெளியூர்களைச் சேர்ந்தவையாகும். தலைப்பே 'விஞ்ஞானமும், மனித வாழ்வுக்கு அதன் உபயோகங்களும்' என்று இருப்பதால், பல்வேறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் வளர வாய்ப்பு உண்டாகிறது. இந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்த விஞ்ஞானக் கண்காட்சி பெரிய அளவில் நடக்கப்போகிறது. எங்கே? விரைவில் தெரியும்" என்கிறார் இணை இயக்குநர்.

பேட்டி: "சிக்கி"
வண்ணப்படம்: உத்ரா

முனையைப் பதித்து நெம்பினான். அந்த வட்டம், கீழேயிருந்த நேர்கோட்டோடு பெயர்ந்து, பிதுங்கி, வெளியே வந்தது. செங்கோடன் இன்னும் அழுத்தி நெம்பவே அந்தப் பகுதி கீழே விழுந்தது.

தூணிலிருந்து பெயர்ந்ததைத் தரையிலே விழுவதற்கு முன்னால் தன் கையினால் தாங்கிப் பிடித்தாள் சுமதி. அது இரும்பாலான பொருள் என்பது தெரிந்தது. மேலே வளையம். அதன் நடுவிலிருந்து இரண்டு சாண் நீளத்துக்கு உருண்டையான இரும்பு. அதன் முன் பல்சக்கர வடிவமாக அமைக்கப்பெற்றிருந்தது.

சுமதியிடமிருந்து அந்த இரும்புக் கோலை வாங்கிப் பார்த்தான் செங்கோடன். பிறகு தூணைப் பார்த்தான். தூணில் அந்த இரும்புக் கோல் வைப்பதற்காகச் செதுக்கியிருந்த பகுதியைப் பார்த்தான். அதில் சுட்டு விரலை வைத்துத் தடவிப் பார்த்தான். எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

"செங்கோடா, இந்த இரும்புக் கோலைத் தாத்தாவிடம் காட்டுவோம். அவருக்கு இது என்ன? இதைக் கொண்டு என்ன செய்வது என்பது தெரியக்கூடும்" என்றாள் சுமதி.

செங்கோடன் அந்த இரும்புக் கோலைத் தூணிலே முன்பு இருந்தது போல வைத்து அழுத்தினான். பிறகு கல் கதவை மூடிவிட்டான். சுமதி விடைபெற்றுச் சென்றாள்.

அன்று மாலை மீண்டும் சுமதி செங்கோடன் வீட்டுக்குப் போனாள். தாத்தாவும் பேரனும் கோயிலுக்குள் இருக்கிறார்கள் என்று சண்பகம் கூறினாள். சுமதி கோயிலுக்குள் சென்றாள்.

சுமதியைக் கண்டதும், "தாயே! தூணிலிருந்த கல் கதவை நீ கண்டு பிடிச்சிருக்கே.. உனக்கு நன்றி. மறைஞ்சு கிடக்கிற உட்கோயிலை வெளிப்படுத்துறதுக்காகவே பெருமாள் உன்னை இந்த ஊருக்கு வரவழைச்சிருக்காருன்னு தோணுது" என்று கூறினார் தாத்தா.

"தாத்தா, உட்கோயிலுக்கு வழி தெரிஞ்சுட்டுதா?" — ஆவலோடு கேட்டாள் சுமதி.

"இல்லை. ஆனால், சீக்கிரமா கண்டு

பிடிச்சுடலாம்னு தோணுது. தூணுக்குள் இருந்த இந்த இரும்புக் கோல் ஒரு சாவின்னு நினைக்கிறேன். இதன் முனையில் இருக்கிற பல்சக்கர அமைப்பு என்னை அப்படி நினைக்கச் செய்கிறது. உட்கோயிலைத் திறக்கும் சாவி பதினாறு கால் மண்டபத்தில் இருந்ததால்தான் அந்தமண்டபத்தையே எங்களுக்கு வீடாகக் கொடுத்துட்டாங்க. தூணின் கல் கதவை யாரும் திறந்து சாவியை எடுத்துடக் கூடாது என்பதற்காகத்தான் எப்போதும் ஒருத்தர் மண்டபத்திலேயே இருக்கணும்னு சொல்லியிருக்காங்க. இரவிலே கூட சாவியிருக்கிற தூண் அடியிலேயே படுத்துக்கச் சொல்லியிருக்காங்க. என் முன்னோர் செய்த ஏற்பாடுகளின் அர்த்தம் எனக்கு இப்போதுதான் புரியுது.''

''தாத்தா! உங்க கையிலே இருக்கிற இரும்புக் கோலைச் சாவின்னு சொல்றீங்க. இதன் பூட்டு எங்கே?'' — சுமதி கேட்டாள்.

''அதைத் தேடிக் கண்டுபிடிக்கணும். இந்தக் கோயிலுக்குள்ளே எங்கேயோ இருக்குது. எனக்குத் தெரிஞ்ச வரை இந்தக் கோயிலின் வெளிக் கதவு, மூலத்தானம், அனுமார் கோயில் ஆகிய மூன்று இடங்களிலே பூட்டு உண்டு. அனுமார் கோயில் பூட்டு நான் வாங்கிப் போட்டது. பழைய பூட்டு பழுதாயிடுச்சு. வெளிக் கதவின் பெரிய பூட்டு பழங் காலப் பூட்டு. மூலத்தானத்தில் பூட்டு தனியா இல்லை. கதவுக்குள்ளே பதிஞ்சிருக்கு. இந்த மூலத்தானத்துப் பூட்டைப் போல உட்கோயில் பூட்டு எங்காவது மறைவாகப் பதிக்கப்பட்டிருக்கலாம். அதைக் கண்டுபிடிச்சா, உட்கோயில் வெளிப்படும்.''

கையிலிருந்த இரும்புக் கோலை — இரும்புச் சாவியை மார்போடு அணைத்தபடி மகிழ்ச்சியோடு கூறினார், தாத்தா.

மூவரும் அந்த நிமிடத்திலிருந்தே உட்கோயில்பூட்டைத்தேடத்தொடங்கினர். கோயிலின் எந்த இடத்தையும் விடாமல் தேடினார்கள். சுவரில், தரையில், மேற்கூரையில், வெளிக் கோபுரத்தில் என்று எல்லா இடங்களையும் அலசினார்கள். இரும்புச்சாவியின் அளவு ஒரு துவாரம் தென்பட்டால் போதும். அந்தத் துவாரத்துக்குள் சாவியை நுழைத்துத் திருகிப் பார்த்தார்கள். எந்தப் பூட்டும் திறக்கவில்லை. எந்த வழியும் தென்படவில்லை.

''எத்தனையோ ஆண்டுகளாகக் காத்திருந்த நான் இன்னும் சில நாட்கள் — சில வாரங்கள் காத்திருக்கத் தயார். நான் இறப்பதற்கு முன்னே உட்கோயிலை வெளிப்படுத்தி நம் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட வேண்டும். அதுதான் என் லட்சியம்'' என்றார், தாத்தா.

பூட்டைத் தேடுவது தொடர்ந்தது. பயன்தான் கிடைக்கவில்லை.

அன்று கோகுலாஷ்டமி. கண்ணன் என்னும் கருமாணிக்கம் பிறந்த திருநாள். சித்தி பத்மா செய்து கொடுத்த சீடை, முறுக்கோடு, வாங்கிக் கொடுத்த பூ, பழம், கற்பூரத்தோடு சுமதி செங்கோடன் வீட்டுக்கு வந்தாள். செங்கோடன், தாத்தா, சண்பகம் ஆகிய மூவரும் வீட்டில் இருந்தனர். சுமதி அவர்களுடன் சேர்ந்து குழலூதும் கண்ணன் இருந்த தூணின் முன் பழம் — பலகாரம் வைத்துக் கும்பிட்டாள்.

சுமதியையே பூஜை செய்யும்படி தாத்தா கூறினார். சுமதி உற்சாகத்தோடு பூஜை செய்தாள். கற்பூரத் தட்டைக் கண்ணன் முன்னே காட்டிய போது, ''மாயக் கண்ணா! ஏதாவது மாயம் செய்து உட்கோயிலை வெளிப்படுத்து. அதுதான் எனது ஒரே ஒரு வேண்டுகோள்'' என்று வேண்டினாள்.

பூஜை முடிந்து, தின்பண்டம் தின்ற பிறகு, சண்பகம் பகல் சமையலைக் கவனிக்கப் போய் விட்டாள். தாத்தா ஏதோ வேலை இருப்பதாகக் கூறி வெளியே சென்றார். சுமதியும் செங்கோடனும் சீடை சாப்பிட்டுக் கொண்டே பெருமாள் கோயிலுக்கு வந்தனர். உடனே சுமதி, ''செங்கோடா! கண்ணன் பிறந்த நாளும் அதுவுமாக நாம் பெருமாளுக்குப் பூஜை செய்யலையே?'' என்று கூறினாள்.

''பெருமாளுக்குத் தாத்தாதான் கிடைக்கிற பூவைப் போட்டு ஊதுவத்தியாவது கொளுத்திக் காட்டுவார். இன்னைக்கு மறந்துட்டார்'' என்

ருன் செங்கோடன்.

"செங்கோடா, இன்னைக்கு நான் பெருமாளுக்குப் பூஜை செய்யட்டுமா?"

"செய், சுமதி."

சுமதி வீட்டுக்குள் ஓடினாள். அவள் நிறைய பூவும், பழமும், கற்பூரமும் கொண்டு வந்திருந்தாள். அதில் மிச்சமான அத்தனை பொருள்களையும் எடுத்துக் கொண்டு பெருமாள் கோயிலின் கரு அறையான மூலத்தானத்துக்குள் நுழைந்தாள். பெருமாளைத் தொடுகிற அளவு நெருங்கினாள்.

பெருமாள் அங்கே பள்ளி கொண்டிருந்தார். ஆதிசேடனாகிய பாம்பின் மீது படுத்திருந்தார். அவர் காலுக்கு அருகே சிறியதாகத் திருமகள் விக்கிரகம் இருந்தது. பெருமாளின் வயிற்றிலிருந்து—உந்திச்சுழியிலிருந்து ஒரு தாமரை உயர்ந்து நிற்க, தாமரையில் நான்கு முகங்களோடு பிரமன் வீற்றிருந்தான். மூலத்தானத்தின் மறு சுவரை ஒட்டியபடி பெருமாள் பள்ளி கொண்டிருந்தார். உந்தியிலிருந்து தோன்றிய தாமரைத் தண்டு வளைந்து சுவரைத் தொட்டது. அதன்பின் தண்டின் மேற்பகுதியும் தாமரை மலரும் பிரமன் உருவமும் பின் சுவரில் செதுக்கப்பட்டிருந்தன.

சுமதி கோயில் விளக்கை ஏற்றினாள். பிறகு பெருமாள் மீது கிடந்த காய்ந்த பூக்களை அகற்றினாள். புதிய பூக்களை அணிவித்தாள். வேறு கோயிலில் அர்ச்சகருக்கு மட்டுமே கிடைக்கும் இறைவன் திருமேனியைத் தீண்டும் பேறு, தீ பா ரா த னை செய்யும் பேறு, தனக்கு இங்கே கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ந்தாள். பிறகு தட்டிலே கற்பூரத்தை வைத்துக் கொளுத்திப் பெருமாளுக்குத் தீபாராதனை செய்தாள்.

சுமதி, கற்பூரத் தட்டைப் பெருமாளின் திருமுடியிலிருந்து திருவடி வரை சுழற்றினாள். உந்தித் தாமரை மலரில் இருக்கும் பிரமன் முகத்துக்கு எதிரே கற்பூரத் தட்டைப் பிடித்தாள். தீப ஜோதியில் பிரமன் முகம் தெளிவாகத் தெரிந்தது. கற்பூரத் தீபத்தை பிரமன் முகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தண்டின் வழியே கீழிறக்கினாள். தண்டு புறப்படும் உந்தியைத் தட்டு அடைந்தபோது, தட்டு அந்தத் தண்டில் முட்டியது. உடனே, 'ணங்' என்ற ஓசை எழுந்தது.

சுமதி வியப்புற்றாள். முதலில் அறியாமல் தண்டில் மோதிய தட்டை, இப்போது வேண்டுமென்றே மோதச் செய்தாள். அதே 'ணங்' ஓசை! தட்டை மேலே உயர்த்திச் சுவரில் படிந்த தண்டின் மேல் மோதினாள். 'டக்' என்று ஒலித்தது. அவள் திரும்பி செங்கோடனைப் பார்த்தாள். அவன் முகத்திலும் வியப்பு விரிந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

சுமதி மூன்றாம் முறையாகத் தண்டின் அடிப்பகுதியைத் தட்டினால் பலமாகத் தட்டினாள். தண்டின் அடிப்பகுதி லேசாக அசைவதைப் போலத் தோன்றியது. தட்டைச் செங்கோடனிடம் கொடுத்து விட்டு, இரண்டு கைகளால் தண்டின் அடிப்பகுதியைப் பற்றி அசைத்தாள். அது மெல்ல அசைந்தது. உடனே அதைத் திருகுவது போல அசைக்கத் தண்டின் அடிப்பகுதி மெதுவாகச் சுழன்றது. மேலும் அதைத் திருகி இழுத்ததும் தண்டின் அடிப்பகுதி அவள் கையோடு வந்து விட்டது. கையில் வந்த தண்டு இரும்பாலானது. சுவரோடு ஒட்டிய தண்டு கல்லில் செதுக்கப்பட்டது. கல் பகுதிக்கும் இரும்புப் பகுதிக்கும் வேறுபாடு தெரியாதபடி இணைக்கப்பட்டிருந்த சிறப்பை வியந்தாள் சுமதி. தண்டு சுமதியின் கைக்கு வந்ததும், ஏதேனும் ஒரு பகுதியில் ஏதாவது ஒரு வழி தோன்றுகிறதா என்று செங்கோடன் பார்த்தான். மூலத்தானத்துக்கு முன்னே இருந்த மண்டபத்திலும் பார்த்தான். எந்த வழியும் தோன்றவில்லை.

சுமதி கையிலிருந்த தண்டைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றாள். அதற்குள் கற்பூரம் அணைந்து விட்டது. மற்றொரு கற்பூரக் கட்டியைக் கொளுத்தி, அதனால் பெருமாளின் வயிற்றை ஆராய்ந்தாள். வயிற்றில் தண்டு இருந்த துவாரம் தெரிந்தது.

"செங்கோடா, இது...?" என்று சுமதி இழுக்க, "தூணில் கிடைத்த இரும்புச் சாவிக்கு வழியாக இருக்கும்; ஏறத்தாழ அதே அளவு" என்ற செங்கோடன், வெளியே ஓடினான். அவன் எங்கே போகிறான் என்று

சுமதி கேட்கவில்லை. அவளுக்கு அது தெரியும்.

சில நிமிடங்களில் செங்கோடன் இரும்புச் சாவியுடன் வந்தான். சுமதி இப்போது விளக்கைக் காட்ட, செங்கோடன் சாவியின் பல்சக்கர முனையை தாமரைத் தண்டிலிருந்த துவாரத்தில் செலுத்தினான். அளவு சரியாக இருந்தது. சாவி கொஞ்ச தூரம் உள்ளே இறங்கியது. மேலே இறங்கவில்லை. செங்கோடன் சாவியின் இரும்பு வளையத்தைக் கீழ்நோக்கி அழுத்தினான். 'சடக்'கென்று, சாவி எதிலோ பொருந்திய சத்தம் கேட்டது.

செங்கோடன் சாவியின் வட்டப் பகுதியைப் பிடித்துத் திருப்ப முயன்றான். முடியவில்லை. மீண்டும் முயன்றான். முடியவில்லை. சுமதியும், அந்த வட்டப் பகுதியைச் செங்கோடனோடு சேர்த்துப்பிடித்தாள். இருவரும் அதைத் திருப்ப முயன்றனர். 'கரகர' என்னும் ஓசை எங்கோ எழ, சாவி திரும்பியது. அதை இருவரும் மேலும் சுற்ற, அதே ஓசையுடன் சாவி சுழன்றது. சாவி சுழன்று கொண்டேயிருந்தபோது, மூலத்தானத்தின் வெளியேயிருந்த மண்டபத்தின் நடுவில் ஒரு வழி தோன்றி, அரக்கன் வாயைத் திறப்பதைப் போல மெல்ல அகன்று பெரிதானது. அதை மூலத்தானத்திலிருந்தே பார்த்த செங்கோடன், "சுமதி, ரகசிய வழியைக் கண்டுபிடிச்சுட்டோம்" என்று ஆனந்தக்குரல் எழுப்பியபடி, திறந்த வழியை நோக்கி ஓடினான். சுமதியும் பின் தொடர்ந்தாள்.

இருவரும் மண்டபத்தின் நடுவே தெரிந்த வழியின் அருகே நின்று பார்த்தனர். வழியில் உள்ளே இறங்கப் படிகள் இருந்தன.

"உள்ளே இறங்கிப் பார்க்கலாமா?" என்று செங்கோடன் கேட்டான்.

சுமதி தலையசைத்தாள்.


அதே நேரத்தில் வெளிக்கதவைத் தாண்டி, ஒருவன் உள்ளே நுழைந்து கொண்டிருந்ததை இருவரும் உணரவில்லை. உள்ளே நுழைந்தவன், முன்பு சினிமாக்கார வேடத்தில் வந்த அதே பாபுதான்!

(தொடரும்)

கேளுங்கள்: சொல்லுகிறோம்

* டென்னிஸ் விளையாட்டு முதல்முதலில் எந்த நாட்டில் ஆடப்பட்டது? இந்தியாவிற்கு எப்போது வந்தது?

— எஸ். சேகரன், சென்னை—30



இங்கிலாந்தில்தான் முதன்முதலாக விளையாடப் பெற்றது என்கிறார்கள். விக்டோரியா மகாராணி காலத்திலே இந்த விளையாட்டு இருந்து வந்ததாம். ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்த பிறகுதான் இது இந்தியாவில் பரவியது. அக்காலத்தில் இருந்த ஆங்கிலேயரும் ஒரு சில இந்தியர்களும் சேர்ந்து ஆரம்ப காலத்தில் ஆடினர்.

* S.T.D. என்பதன் விளக்கம் என்ன?

— ஏ.எல். ராமு, மதுரை—2

Subscribers Trunk Dialling Service என்பதே இதன் விளக்கம். முக்கியமான பல நகரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணைச் சுழற்றிய பிறகு, அந்த ஊரில் யாருடன் பேச வேண்டுமோ அவருடைய டெலிபோன் எண்ணைச் சுழற்றினால், உள்ளூரில் பேசுவது போல உடனே பேசலாம்.

* தமிழ், தெலுங்கு என்பதுபோல 'மைதிலி' என்று ஒரு பாஷை இருக்கிறதாமே, அது எங்கு பேசப்படுகிறது?

— கே. பார்வதி, சென்னை—4

பீகார் மாநிலத்தில் பேசப்படுகிறது. பீகாரி மொழியில் மூன்று வகையான பிரிவுகள் உண்டு. போஜ்புரி, மகஹி, மைதிலி என்ற அந்த மூன்றிலே மைதிலி மொழியில்தான் பல இலக்கியங்கள் இருக்கின்றன.

* 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்ற நூல் எங்களைப் போன்ற சிறுவர்களுக்காக எழுதப்பட்டதா?

— ஆர். கோபிநாத், மதுரை.

இல்லை, மீனாட்சியம்மையைக் குழந்தையாக வைத்து குமரகுருபர சுவாமிகள் பாடியதே இந்நூல். உங்களைப்போன்ற சிறுவர்களுக்கு ஓரளவுதான் புரியும்.

* மனிதர்களாகிய நாம் பத்து மாதம் கர்ப்பத்தில் இருக்கிறோம். நாய் எத்தனை மாதம் கர்ப்பகத்தில் இருக்கும்? ஒரே தடவையில் எத்தனை குட்டிகள் போடும்?

— டீ. சுந்தரி, மணப்பாறை

நாயின் கர்ப்பகாலம் 63 நாட்கள். சாதாரணமாக ஒரு தடவையில் 4 குட்டிகள் போடும்.

* பூண்டி நீர்த்தேக்கம் என்பதும், சத்தியமூர்த்தி சாகர் என்பதும் ஒன்றுதானா? இல்லை, வேறு வேறா?

— சி. பானு, செங்கற்பட்டு.



இரண்டும் ஒன்றுதான். 1948—ஆம் ஆண்டில் பூண்டி நீர்த் தேக்கத்திற்கு தேச பக்தர் சத்தியமூர்த்தி அவர்களின் பெயரை வைத்து 'சத்தியமூர்த்தி சாகர்' என்று அழைத்தார்கள். இங்கிருந்துதான் புழலேரிக்கு நீர் கொண்டு செல்லப்பட்டு, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது.

*** கைரேகையை வைத்துக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கலாம் என்கிறீர்களே, ஒருவர் கைரேகைபோல் வேறு ஒருவர் கைரேகையும் இருந்துவிட்டால்....?**

— எம். செல்வம், பட்டுக்கோட்டை



அப்படி இருக்கவே இருக்காது. இந்த உலகிலுள்ள மக்களில் ஒருவரது கைரேகை போல் மற்றொருவர் கைரேகை இருப்பதில்லை ஏதேனும் வேற்றுமை இருக்கும். இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தவர்களின் கைரேகைகளில் கூட வித்தியாசம் காணப்படும்!

*** தீக்கோழி எந்த நாட்டுப் பறவை? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன? அதன் உணவு என்ன?**

— எஸ். லதா, நரட்டரசன்கோட்டை.

அரேபியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் தீக்கோழி (நெருப்புக் கோழி) யைக் காணலாம். நெருப்பைத் தின்பதால் அதற்கு நெருப்புக் கோழி என்று பெயர் வந்ததாகச் சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. அதன் கழுத்திலும், தொடையிலும் இறகுகள் இல்லாததால், அந்தப் பாகங்கள் நெருப்புப் போல் சிகப்பாக இருக்கும். இதை வைத்தே அந்தப் பறவையை நெருப்புக் கோழி என்கிறார்கள். அது தானியங்களை உண்பதோடு, கற்கள், ஆணிகள் போன்ற கடினமான பொருட்களையும் விழுங்கும். அப்படி அது விழுங்கும் கற்களும் ஆணிகளும் உண்ணும் தானியங்களை நன்குமசிய அரைத்துவிடுமாம்!

*** தேனில் எத்தனை வகை உண்டு?**

— வெ. கணேசன், ஆலம்பூண்டி.

40 வகை உண்டு. 2 முதல் 20 சென்டி மீட்டர் நீளம்வரை அவை இருக்கின்றன. கறுப்பு, சிவப்பு, பழுப்பு, மஞ்சள் என்று பல நிறங்களில் காணப்படுகின்றன.

*** தசாவதானி பெ. இராமையா அவர்கள் நினைவாற்றல் கலையை எப்படி வளர்ப்பது என்பதைப் பற்றி 'நினைவுக் கலை' என்று ஒரு புத்தகம் எழுதியிருப்பதாக கோகுலத்தில் முன்பு குறிப்பிட்டிருந்தீர்கள். அந்தப் புத்தகம் எங்கு கிடைக்கும்?**

— எம். குலாம் குவாஜா மொய்னுதீன், காரைக்குடி

'தமிழ்ப் புத்தகாலயம், 58, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5' என்ற முகவரிக்கு எழுதினால் கிடைக்கும்.

*** குழந்தைகளால் 'மாமா' என்று அழைக்கப்படும் நேரு அவர்கள் குழந்தைகளுக்காக எழுதிய நூல் ஏதேனும் உள்ளதா?**

— அ. இரவீந்திரன், கன்னியாகுமரி




குழந்தைகளுக்கென்று நேருஜி எந்த நூலும் எழுதவில்லை. அவருடைய மகள் இந்திரா 10 வயது சிறுமியாக இருந்த போது சிறையிலிருந்து அவர் எழுதிய கடிதங்கள் Glimpses of World History என்ற நூலாக வெளிவந்திருக்கிறது. தமிழில் அது 'உலக சரித்திரம்' என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வந்திருக்கிறது.

*** 'புதிய புத்தகங்கள்' என்ற தலைப்பில் சில புத்தகங்களைப் பற்றி எழுதி, அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களுக்கு எழுத வேண்டுமா? அல்லது தங்கள் காரியாலயத்துக்கு எழுத வேண்டுமா?**

— எம். எஸ். தனபாக்கியம், கவுந்தம்பாடி

வெளியிட்ட பதிப்பகங்களுக்குத்தான் எழுத வேண்டும். எங்களிடம் விற்பனைக்கு அந்தப் புத்தகங்கள் இல்லை.

பிருந்தாவனம்



அஞ்சல் தலை சேகரிப்பவர்களுக்கு!

அஞ்சல் உறையில் ஒட்டப்பட்டுள்ள அஞ்சல் தலையைச் சேதமேற்படாமல் பிரித்தெடுப்பது எப்படி? அஞ்சல் தலையைச் சுற்றிப் போதிய இடம் விட்டு உறையை வெட்டிக் கொள்ள வேண்டும். ஒரு கிண்ணத்தில் உள்ள தண்ணீரில் அஞ்சல் தலையுள்ள தாளை, அஞ்சல்தலை நனையாதவாறு—மேலிருக்கும்படி மிதக்கவிட வேண்டும். பத்து அல்லது பதினைந்து



நிமிடங்களில் அஞ்சல்தலை ஒட்டப்பட்டுள்ள தாள் நன்கு ஊறிவிடும். இதை மெதுவாக அஞ்சல் தலையிலிருந்து பிரித்தெடுத்து விடலாம். இந்த அஞ்சல் தலையைப் பழைய புத்தகத்தில், பக்கங்களுக்கிடையில் வைத்து விட்டால் ஈரம் நீங்கிவிடும். அஞ்சல் தலையும் நிறம், பளபளப்பு மங்காதிருக்கும். நீரில் முழுதும் நனைந்து விட்டாலோ, நீராவியில் காட்டினாலோ அஞ்சல் தலை சேதமடைந்துவிடும்.

— இ. மாயா (12,095), கும்பகோணம்.

படிப்பது என்ன?

அம்மா: டேய், படுத்துக்கிட்டே என்னடா படிக்கிறாய்?

மகன்: கோகுலத்தில் வந்த 'படுத்துக் கொண்டே படிப்பதால் வரும் தீமைகள்' என்ற கட்டுரையம்மா.


— பி. குமரகுரு (7162), திருச்சி — 1.

கோடை விடுமுறைப் போட்டி முடிவுகள் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.



குறளில் கோகுலம்!

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (9)




நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென்றுஇடித்தற்பொருட்டு.(784)

சொல்லப் பயன்படுவர் சான்றோர்
கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (1078)

துன்பம் உறவரினும் செய்க
துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (669)

—ஜெ. உமா (9455), வடசிறுவளூர்

"ய்" முடிவது



பத்து மாதம் சுமந்தவள் — தாய்
நன்றியுடன் இருப்பது — நாய்
பழமாக இல்லையென்றால் — காய்
உறுப்புகளில் ஒன்று — வாய்
இது வரக்கூடாது — நோய்
படுக்கும் முன் போடுவது — பாய்

சி. எல். சரவணன் (706),
மதுரை — 1.

உண்மை வைரம்

அந்த அரசன் வைரங்களைச் சேர்ப்பதிலே குறியாயிருந்தான். தன் நாட்டு மக்கள் பஞ்சத்தால் பரிதவிப்பதைப் பற்றி அவன் கொஞ்சமும் கவலைப்படவில்லை. இது அமைச்சருக்கு மிகவும் வேதனையளித்தது.

ஒரு நாள் அரசன், ''என்னிடம் உள்ள வைரங்களைவிடச் சிறந்த வைரங்களைக் கொண்டு வருகிறவர்களுக்கு என் நாட்டில் பாதியைத் தருகிறேன்'' என்று அறிவித்தான்.

மறுநாள் அமைச்சர் ஒரு சிறு துணி முடிச்சைக் கொண்டு வந்து, ''அரசரே, தங்களிடம் உள்ள வைரங்களை விடச் சிறந்தவை இந்தப் பொட்டலத்தில் உள்ளன'' என்றார்.



அரசன் ஆவலோடு பொட்டலத்தை அவிழ்த்துப்பார்த்தான். உள்ளே அரிசி இருந்தது. ''என்ன இது! விளையாடுகிறீரா?'' என்றுகோபத்துடன் அமைச்சரைக் கேட்டான்.


'அரசே, உங்களிடமுள்ள வைரங்கள் பசியைத் தீர்க்கமாட்டா, ஆனால், இந்த அரிசி பசியால் வாடும் ஏழைகளின் பசியைப் போக்க உதவுமே! அதனால் தான் இது சிறந்தது என்கிறேன்''.

அமைச்சரின் பதிலைக் கேட்டு அரசன் தலை குனிந்தான்.

—ஆர். வீரசேனபதி, (1319),
நெடுவாடம்.

சோலார் கார்


இந்தக்கார் ஓட பெட்ரோல்தேவையில்லை. சூரிய ஒளியிலிருந்து பெறப்



படும் சக்தியே போதுமானது. ஜெர் மனியில் தயாராகியுள்ள 'ஸ்டேயர் புஷ்'என்ற இந்தக் கார் மணிக்கு 100 கி. மீ. வேகம் ஓடக் கூடியது.

— ச. வெங்கடேஸ்வரன், (15,969),
சென்னை — 91.

சத்தம் போடாத பாகம்!



ஒரு நாள் ஒரு சிறுவன் தன்னுடைய சைக்கிளை ரிப்பேர் செய்ய சைக்கிள் கடைக்குக் கொண்டு சென்றான். கடைக்காரர் அவனைப் பார்த்து, "வண்டியில் என்ன கோளாறு தம்பி?" என்று கேட்டார்.

"இதில் ஒரே ஒரு பாகம்தான் சத்தம் போடாமல் இருக்கிறது."

"எந்த பாகம்?"

"அது பெல்தான்!"

— எஸ். ராஜகோபால் (3087),
சென்னை — 28

தேசப் பிதா— மகாத்மா காந்தி
இரும்பு மனிதர் — சர்தார் பட்டேல்
கவிக்குயில் — சரோஜினி தேவி
பெருந்தலைவர் — காமராஜர்
வைக்கம் வீரர் — ஈ. வெ. ரா. பெரியார்



மூதறிஞர் — ராஜாஜி
எல்லைப்புற காந்தி — கான் அப்துல் கபார்கான்
லோகமான்யா — பாலகங்காதர திலகர்

— கோ. சாந்தி (17,087), ஜெக்க சமுத்திரம்.

நாம் 24 மணி நேரத்தில் 23,040 தடவை மூச்சு விடுகிறோம். அப்போது 438 கன அடி காற்றைசுவாசிக்கிறோம். நமது இருதயம் 1,03,389 தடவை சுருங்கி விரிகின்றது. இருதயம் நிமிடத்திற்கு 70 தடவை துடிக்கும். ஒரு நாளைக்கு 5 பவுண்டு எடையுள்ள



உணவையும் நீரையும் புசிக்கின்றோம்.
ஆதாரம்: பொது அறிவுப் புதையல்
தகவல்: கே. நரசிம்மன் (7378), ஓசூர்.

ஒரு பக்கத் தலைவலி!



ராமு: டாக்டர், இந்தப் புத்தகத்திலே, இந்த ஒரு பக்கத்தைப் பார்த்தாலே தலைவலி வருது டாக்டர்.

டாக்டர்: கவலைப்படாதே! அது 'ஒரு பக்கத் தலைவலி'யாக இருக்கும்.

—ச. விசயகுமார் (14071), மதுரை.

நல்லாப் போடுங்க



அவனுடைய வயலில் எதுபோட்டாலும் விளையவில்லை. அதனால், அவனுக்கு வரி செலுத்த முடியவில்லை. வரி செலுத்தாததால், அரசாங்க ஆட்கள் வந்து அவனுடைய நிலத்தை ஏலம் போடப் போவதாகச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட அவன் மிகுந்த மகிழ்ச்சியுடன், ''ரொம்ப சந்தோஷமுங்க. நான் எதைப் போட்டாலும் விளையமாட்டேங்குது. நீங்க 'ஏலம்' போட்டாவது விளையுதான்னு பார்க்கலாமுங்க'' என்றான்.

—சொற்பொழிவு ஒன்றில் கேட்டது.
தகவல்: ர.மது (1121), கோவை—2.

சென்னையின் சிறப்பு

* உலகம் புகழும் திருவள்ளுவர் வாழ்ந்தது சென்னையிலுள்ள மயிலாப்பூரில்தான்!

* இந்தியாவில் முதல்முதலாக அமைக்கப்பட்ட கிறிஸ்தவக் கோயில் தென்சென்னையிலுள்ள சாந்தோமில்தான்!



* இந்தியாவில் முதல்முதலாக நகராட்சி அமைக்கப்பட்டது சென்னையில்தான்!

* முதன்முதலாகப் பொது மருத்துவமனை நிறுவப்பட்டதும் சென்னையில்தான்!

* ஆசியாவிலே மிகப் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலை உள்ளது சென்னையிலுள்ள பெரம்பூரில்தான்!

* இந்தியாவிலே மிக உயரமான கொடிக் கம்பம் உள்ளது தற்போது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் உள்ள கோட்டையில்தான்!

— ஏ. ஆர். ஆனந்த் (421),
காரைக்குடி

திருத்திப் படியுங்கள்



சில பழமொழிகளைச் சிலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர்:

வக்கற்றவருக்கு வாத்தியார் வேலை;
போக்கற்றவருக்கு போலீஸ் வேலை.

இவற்றை நாம் சரியாகக் கூறுவதானால் எப்படிக் கூற வேண்டும், தெரியுமா?

வாக்கு கற்றவருக்கு வாத்தியார் வேலை;
போக்கு கற்றவருக்கு போலீஸ் வேலை.

— பி. என். ஸ்ரீதர் (7035), சங்கர் நகர்.


(ஸ்ரீ) சித்திரச் செய்திகள்

மழையினால் கிடைத்த வைரம்!



ஆப்பிரிக்காவில் கிழக்குப் பகுதியில் உள்ள சியரா லியோன் நாட்டில், பொஜாடிடு நகரில் பலத்த மழை பெய்தது. மண் அரிப்பு ஏற்பட்டது. அதனால், மண்ணில் புதையுண்டு கிடந்த கோடிக் கணக்கான வைரங்கள் வெளியே தெரிந்தன! அவற்றைச் சேகரிக்க ஆயிரக் கணக்கான மக்கள் அங்கே குவிந்தனர். கடைசியில், அரசாங்கம் தலையிட்டு ஒழுங்கு செய்தது.

ஆட்டின் விலை 30,87000.



பிரிட்டனில், லாங்ஹோப் என்ற ஊரில் அங்கோரா இன வெள்ளாடு ஒன்று 30 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய்க்கு விலை போயிற்று! மிருதுவான கம்பள ரோமத்துக்குப் பெயர் போன இந்த ஆடு நியூஜிலாந்திலிருந்து பிரிட்டனுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

தேள் பண்ணை



சோவியத் நாட்டில், ஆல்மா ஆட்டாவில், தேள்களும் ராட்சச சிலந்திகளும் ஒரு பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 16,000. தேள் விஷத்தின் விலை ஒரு கிராம் சுமார் 3 லட்சம் ரூபாய்! ஓர் ஆண்டில் சுமார் 30 கிராம் விஷம் இங்கே சேகரிக்கப் படுகிறது!

7 வயதில் கறுப்பு பெல்ட்!

அமெரிக்காவைச் சேர்ந்த வெஸ்ட்லே சியா மெல்லா என்ற 7 வயதுப் பையன், கராத்தேபோன்ற 'டே—குவான்டோ' என்னும் கொரிய போர்க்கலையில் தேர்ச்சி பெற்று உயர்ந்த கறுப்பு பெல்ட் பட்டம்பெற்றுள்ளான்! உலகிலேயே இப்பட்டம்பெற்ற மிகச் சிறியவன் இவன்தான்! தன்னுடைய போர்க்கலை தன் பெற்றோர்களைப் பாதுகாப்பதற்குத்தான் என்கிறான் இவன்!



நீரில் மிதந்து உலக சாதனை!



சென்னை கடற்கரை அண்ணா நீச்சல் குளத்தில் சண்முகம் என்பவர் தண்ணீரில் கையைக் காலை ஆட்டாமல் மல்லாந்து 51 மணி நேரம் மிதந்து உலக சாதனை புரிந்தார். இது உலகிலேயே புதிய சாதனை. இவர் ஏற்கெனவே 81 மணிநேரம்தொடர்ந்து தண்ணீரில் நீந்தி உலக சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர்!

11 வயதில் விமானம் ஓட்டியவன்!

அமெரிக்காவைச் சேர்ந்த 11வயதுச் சிறுவன் ஜான் கெவின் ஹில் என்பவன் கார் ஓட்டும் லைசென்ஸ் பெறக்கூடத் தகுதியில்லாதவன். ஆனால், அவன் விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டு, சமீபத்தில் ஒற்றை எஞ்சின் கொண்ட செஸ்னா 210 ரக விமானத்தை தெற்கு கலிபோர்னியா நகரில் இருந்து கிளப்பி வானத்தில் அமெரிக்கக் கண்டத்தையே சுற்றி வந்தான்!





களிமண் சிலையின் விலை ரூ.4 கோடி!

அமெரிக்காவின் 3—வது ஜனாதிபதியான தாமஸ் ஜெபர்சனின் மார்பளவு, 'பிளாஸ்டர் ஆப் பாரீஸ்' என்னும் வெள்ளைக் களிமண்ணால் செய்யப்பட்ட சிலை ஒன்று ரூ.4 கோடிக்கு ஏலம் போயிற்று! 1789 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சிலை அது. வெள்ளைக் களிமண் சிலை இது வரை இவ்வளவு விலைக்கு விற்கப்பட்டது இல்லை!

—ஆமி—

அந்த நண்பர் நான்தான்!

* ஏழு ஜனாதிபதிகளின் படங்களையும் வெளியிட்டு, அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் வெளியிட்டிருக்கிறீர்கள். கட்டுரை ஆசிரியர் ஜானகிமணாளன் அவர்களுக்கு நன்றி.

— என். பாபு (1707), வேலூர் — 1.

* எங்களைப் போன்ற பள்ளிச் சிறுவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது ஜனாதிபதிகளின் கதை. சில ஜனாதிபதிகளைப் பற்றி அறிந்திருந்த நாங்கள், பதவியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளையும் அறிந்து கொள்ள உதவிய ஜானகிமணாளன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

— பி. கோவிந்தசாமி (5703),
பே., தாதம்பட்டி

* அடேயப்பா! தமிழில் எங்களுக்காக 3000 புத்தகங்கள் வெளிவந்துள்ளனவா? எல்லாப் புத்தகங்களையும் உடனே படிக்க வேண்டும்போல் இருக்கிறது.

— இர. நிர்மலா (12098),
திருச்சி — 17.

* பல மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் மொழி, இனம், பார்க்காமல் ஒற்றுமையுடன் செயல்பட்டதைக் கூறும் 'ஒரு மரத்தின் கிளை' மிக அற்புதமாயிருந்தது.

— எம். ஏ. சுப்பிரமணியன்,
ஏ. பி. லோகநாதன்,
முருகன்புதூர், கோபி.

* பெருமைக்குரிய பெரியசாமியின் பெருமைகளை வெளியிட்டு எங்கள் ஊருக்கும் பள்ளிக்கும் சிறப்புச் செய்த கோகுலத்தைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

— ஆர். வீரபாண்டியன்,
இளைஞர் அணித் தலைவர்,
திருமங்கலம்.

* 'பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவன்' கதையைப் படித்த நான் கிரேக்கர்களைப் போல் வீரமும், செயலும், நாட்டுப் பற்றும் பெற்று விளங்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

— அ. கனகசபை, கச்சனம்.

* எழுத்தாளர்கள், இளம் கதாசிரியர்கள் இளம் கவிஞர்கள் ஆகியோரின் புகைப்படங்களை வெளியிடும் ஒரே மாத இதழ் கோகுலமே. உங்கள் பணி தொடரட்டும்.

— எல். ஜி. இரவிச்சந்தர், சீர்காழி.

* சென்னைத் தொலைக்காட்சி இயக்குநர் திருமதி அகிலா சிவராமனின் 'கவிதை பிறந்த கதை' புதுமையாய் மிளிர்ந்தது.

தமிழில் பிறந்த நாள் வாழ்த்துப் பாடினால் பொருத்தமாக இருக்குமே என்று அவருக்குக் கடிதம் எழுதிய அன்பர் நான்தான் எனத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— என். சண்முகம், கீழ்பென்னாத்தூர்.

* அட்டைப்படச் சிறுவனுக்கு அந்தக் குருவி விரைவில் கிடைத்துவிடுமென நம்புகிறேன்.

— எஸ். மகாதேவன், அல்லூர்.

* 'எமதூதர்கள் ஏமாந்தார்கள்' கதையைப் படித்து மனம் நிறையச் சிரித்தேன். இப்படிப்பட்ட கதைகளைத் தொடர்ந்து வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— டி. அம்புஜம், விருத்தாசலம்.

* வயிற்று வலி வராமல் தடுக்க நல்ல வழிமுறைகளைக் கூறிய டாக்டர் கணேசனுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

— பி. சுந்தரம், பெருங்களத்தூர்.

* 'தலையிலே மலை' பாடலில், சரியான விவரம் கேட்காமல் மோசம் போன அரசனைப் பற்றிக் கூறியிருப்பதை மிகவும் ரசித்தேன்.

— ஆர். வேதவல்லி, சிவகங்கை.

* 'புதையல் வீடு' கதை விரைவில் முடியப் போகிறதே என்ற கவலை என்னை வாட்டுகிறது.

— சே. கணபதி, கீழப்பூங்குடி.

* 'அப்பாவின் கையொப்பம்' அருமையான கதை.

— செ. தீர்த்தகிரி, ஈரோடு.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா: ரூ 24/—; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ 100/—; விமானத் தபால்: ரூ 250/—.



விஸ்வேஸ்வரய்யா

தோற்றம்: 15-9-1861 மறைவு: 14-4-1962

REGISTERED No. TN MS (5) 281
Registered as a Newspaper in Sri Lanka

